# உள்ளக போக்குவரத்து அமைச்சு

# 2014 ஆம் ஆண்டின் செயற்பாட்டு அறிக்கை

இலக்கம் : 01

டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை,

கொழும்பு – 10.

2015 மார்ச்

## தொலைநோக்கு

எமது பிராந்தியத்திலேயே மிகவும் சௌகரியமானதும் செயற்திறன்மிக்கதுமான பேரூந்து மற்றும் புகையிரத சேவைகளை வழங்கும் நாடாக இலங்கையைத் திகழச் செய்வதே எமது தனிப்பட்ட தொலநோக்காகும்

## பணி

மிகவும் சௌகரியத்துடன்
இலங்கை வாழ் மக்களின்
அன்றாடப் போக்குவரத்துச் செயற்பாடுகளை
அதி உன்னத மட்டத்திற்கு கொண்டு சென்று
சகல மனித வளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு
வசதிகளில்
நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி
எந்நேரமும் மேம்படுத்துதல்
மற்றும் முன்னெடுத்துச் செல்லல் எமது பணியாகும்.

## உள்ளடக்கம்

### 1 ஆவது பிரிவு


**1. அறிமுகம்....................................................................................................................1**

**2. தாபனப் பிரிவால் நிறைவு செய்யப்பட்ட பணிகள் ...............................................................1**

2.1 2014 ஆம் ஆண்டில் தாபன நிர்வாகப் பிரிவால் நிறைவு செய்யப்பட்ட பணிகள்.......................................................................................................... 1

2.2 உள்ளக நிர்வாகப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்........................ 5

2.2.1போக்குவரத்துப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள். .................. 10

2.3 2014 ஆம் ஆண்டினுள் காணிப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்............................................................................................................ 11

2.3.1. அமைச்சரவைப் பத்திரம் மற்றும் அவதானிப்புக்களை முன்வைத்தல். .......................................................................................... 11

2.3.2 காணிப் பிரிவினால் நிறைவு செய்யப்பட்ட பிற பணிகள். ............. 11

2.4 2014 ஆம் ஆண்டினுள் புகையிரத நிர்வாகப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள். ................................................................... 12

2.5 சட்டப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்.......................................... 13

**3. நிதிசார் முகாமைத்துவம் மற்றும் முன்னேற்றம்.........................................................................14**

3.1 கொள்முதல் குழு ........................................................................................ 14

3.2 நிதிசார் முகாமைத்துவம்............................................................................ 14

**4. 2013 ஆம் ஆண்டினுள் திட்டமிடற் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள். .............. 20**

**5. 2014 ஆம் ஆண்டின்போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் நிறைவேற்றப்பட்டுள்ள புலனாய்வுக் கடமை தொடர்பான விபரப் பொழிப்பு. ............. 25**

**6. புதிய புகையிரத வீதிகள் அபிவிருத்திப் பிரிவு...........................................................................25**

6.1 மாத்தறை - கதிர்காமம் புதிய புகையிரத வீதி......................................... 26

6.2 களனிப் பள்ளத்தாக்குப் புகையிரத வீதியினை கம்பாந்தோட்டை வரை நீடிப்புச் செய்தல். ............................................................................ 29

6.3 குருனாகல் - கபரணை புதிய புகையிரத வீதி ............................................ 29

6.4 கொறண - கொட்டாவ புதிய புகையிரத வீதி............................................ 29

6.5 மதவாச்சி - திருகோணமலை வரை புதிய புகையிரத வீதியினை நிர்மாணித்தல். .................................................................................. 30

6.6 வெல்லவாய,பிபில ஊடாக பதுளை வரையில் புதிய புகையிரத வீதியினை நிர்மாணித்தல். ........................................................................ 30

6.7 மகவ ஊடாக புத்தளம் வரையான புதிய புகையிரத வீதியினை நிர்மாணித்தல் (திருகோணமலை, மகவ, புத்தள நகரத்தினை இணைப்பதற்கு) ........................................................................ 31

**7. வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை ........................................................................ 31**

7.1 அறிமுகம் ........................................................................ 31

7.2 வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் கடமைப் பொறுப்புக்கள். ........................................................................ 32

7.3 2014 ஆம் ஆண்டினுள் வீதிப் பாதுக்காப்புத் தொடர்பான தேசிய சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள். ........................................................................ 32

## 11 ஆவது பிரிவு

**1. இலங்கைப் புகையிரதத் திணைக்களம்....41**

1.1 அறிமுகம்....41

1.2 செயற்பாட்டுக் காட்டி....44

1.3 உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு....44

1.3.1 புகையிரத வீதிகள்....44

1.3.2 சைகை மற்றும் மின் தொடர்பாடல் முறைமை....45

1.3.3. புகையிரத அணி....46

1.4 நிதிசார் முன்னேற்றம்....46

1.5 2014 ஆம் ஆண்டின் செயற்பாட்டினூடாக முகங்கொடுக்கப்பட்டுள்ள சவால்கள்.. ....47

**2. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்....51**

2.1 பின்னணி....51

2.2 மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் பணிகள்.....51

2.3 செயற்பாடு (2014 ஜனவரி - திசம்பர் 31)....52

2.4 2014 ஆம் ஆண்டு தொடர்பாக மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் உண்மையான வருமானங்கள்....56

**3. இலங்கைப் போக்குவரத்துச் சபை....57**

3.1 அறிமுகம்....57

3.2. சமூகப் பயன்களுக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பங்களிப்பு....57

3.3 2014 ஆம் ஆண்டினுள் பெற்றுக் கொண்டுள்ள முன்னேற்றம்....59

3.4 இபோச பேருந்து அணி....61

3.5 இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மனித வளம்....63

3.6 இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்....64

3.7 இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முன்னேற்றம் 2013 - 2014 . 65

3.8 2014 ஆம் ஆண்டின் செயற்பாட்டினுள் இபோச ஊடாகத் தீர்வு காணப்பட வேண்டிய சவால்கள்....65

**4. தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு ........ 69**

4.1 அறிமுகம் ........ 69

4.2 2014 ஆம் ஆண்டில் தரமான போக்குவரத்துத் சேவையொன்றுக்காக மேற்கொள்ளப்பட்ட பணிகள். ........ 69

**5. . தேசியப் போக்குவரத்து மருத்துவ நிறுவகம் ........ 80**

5.1. அறிமுகம் ........ 80

5.2. நோக்குகள் ........ 80

5.3. நிறுவனத்தின் பணிகள் ........ 80

5.4. தற்போதைய செயற்பாடு ........ 81

**6. வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியலாளர் அமைப்பு ........ 87**

6.1 அறிமுகம் ........ 87

6.2 2014 ம் ஆண்டில் நிறுவனம் பெற்றுக்கொண்ட முன்னேற்றம் (பௌதிகம் மற்றும் நிதிசார்) ........ 87

6.3 உட்கட்டமைப்பு வசதிகள் ........ 88

6.4 விளைதிறன் நிகழ்ச்சித் திட்டங்கள் ........ 88

# 1 ஆவது பிரிவு

## அமைச்சின் செயற்பாடு

## 1. அறிமுகம்

நாடு முன்னெடுக்கவுள்ள சமூகப் பொருளாதார பயண வழி நல்லாட்சி எண்ணக்கருவுடன் இணைந்து, புதிய பிரவேசத்திற்கு ஆயத்தமாகியுள்ள இத்தருணத்தில், அனைத்துப் போக்குவரத்துத் துறையினை எழுச்சி பெறச்செய்தல் அத்தியாவசியமான தேவைப்பாடாகவுள்ளது, ஏனெனில் அது நாட்டின் அபிவிருத்திச் செயற்பாட்டில் அனைத்துப் பிரிவுகளினதும் செயற்பாட்டிற்கு உன்னதமாகப் பங்களிப்புச் செய்துள்ளது. உற்பத்திகளைப் பாதுகாப்பாகவும் மற்றும் விளைதிறனானதாகவும் சந்தைகளை நோக்கிக் கொண்டு செல்வதற்கும், மூலப்பொருட்களைத் தொழிற்சாலைகளை நோக்கி எடுத்துச் செல்வதற்கும், ஊழியப் படையினரைச் சரியான நேரத்திற்கு இலகுவாகக் கடமையாற்றும் இடங்களைக் நோக்கிக் கொண்டு செல்வதற்குமென தனது போக்குவரத்துச் சேவையைத் திறம்பட முன்னெடுத்துள்ளது. இலங்கையில், பயணிகள் போக்குவரத்துத் தேவைப்பாடுகளில் ஏறக்குறை 58% பொதுப் போக்குவரத்துச் சேவையூடாகவே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 2014 ஆம் ஆண்டினுள் உள்ளகப் போக்குவரத்து அமைச்சு அலுவலகம் செயற்படுத்தப்பட்ட முறைமை தொடர்பான தகவல்களை, விரிவாக இதனூடாக முன்வைக்கப்படுகின்றது.

உள்ளகப் போக்குவரத்து அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்ற இலங்கைப் புகையிரதத் திணைக்களம், இலங்கைப் போக்குவரத்துச் சபை, மோட்டார் வாகனக் போக்குவரத்துத் திணைக்களம் மற்றும் தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு ஆகிய அனைத்து நிறுவகங்களிருந்து தயாரிக்கப்பட்டு வருகின்ற வருடாந்தச் செயற்பாட்டு அறிக்கைக்கு மேலாக உள்ளகப் போக்குவரத்து அமைச்சு செயலகத்தினூடாக அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகளை விளைதிறன், வினைத்திறன் மற்றும் முறைசார் வகையில் நிறைவேற்றுவதற்கு சிறந்த நிதிசார் முகாமைத்துவத்துடனான மனித வளங்கள் மற்றும் பௌதிக வளங்களை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்டு வரும் கொள்கைசார் தீர்மானங்கள் மற்றும் அமுற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பாக அமைச்சின் ஒவ்வொரு பிரிவினூடாக 2014 ஆம் ஆண்டு பூராவும் நிறைவு செய்யப்பட்ட பணிகள் தொடர்பான சாராம்சங்கள் இதனூடாக முன்வைக்கப்பட்டுள்ளன.

## 2. தாபனப் பிரிவால் நிறைவு செய்யப்பட்ட பணிகள்

### 2.1 2014 ஆம் ஆண்டில் தாபன நிர்வாகப் பிரிவால் நிறைவு செய்யப்பட்ட பணிகள்

1. தாபன நிர்வாகப் பிரிவுக்கு 2014 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 6821 கடிதங்கள் மாத்திரம் கிடைக்கப் பெற்று அது தொடர்பான பிரிவுகளுக்கு முன்வைக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கான நிறுவனம் சார் நடவடிக்கைகள் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**I) மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்**

- மோட்டார் வாகனப் போக்குவரத்து தண்டப் பணங்களை அறவிடும்போது நடைமுறையிலுள்ள சட்ட ஒழுங்குளைத் திருத்தஞ் செய்தல் தொடர்பாக 06 தடைவைகள் கலந்துரையாடல் நடாத்தப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான சட்டவரைவு இற்றை வரையில் மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

- என்ஜின் கொள்ளளவு 500 (500cc) கன செ.மீ மற்றும் மொத்த எடை 500 கி.கிராமுக்குக் குறைவான மோட்டார் காராகப் பதிவு செய்வதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று முன்வைக்கப்பட்டு அதற்குத் தீர்மானம் கிடைக்கப் பெற்றுள்ளது.

- மோட்டார் வாகனங்களைப் புதிதாகப் பதிவு செய்யும்வேளையில் சாதாரணமான இலக்கத் தகடுகளுக்கு மேலதிகமாக பிரத்தியேக இலக்கத் தகடொன்றை வழங்குதல் தொடர்பாக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று 2014.10.17 ஆந் திகதியன்று அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

**II) இலங்கைப் போக்குவரத்துச் சபை.**

- இலங்கைப் போக்குவரத்துச் சபையின் 1997/1994 கால வரையறையினுள் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்டு வேலையில்லாமற்போன பணியாளர்களுக்கு நிலுவைப் பணத்தினை வழங்குதல் தொடர்பாக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று முன்வைகப்பட்டு அதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

- வெஸ்கோ கெஸ்கோ பணியாளர்கள் சம்பந்தமான விடயங்கள் தொடர்பாக அமைச்சரவை விஞ்ஞாபனம் 2014.12.26 ஆந் திகதி அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டது.

**III) இலங்கைப் புகையிரதத் திணைக்களம், தேசியப் போக்குவரத்து வைத்திய நிறுவகம் மற்றும் லக்திவ பொறியியலாளர் அமைப்புக்கான நிறுவனம் சார் நடவடிக்கைகள் மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் சரியானவாறு இடம்பெற்றுள்ளன.**

1. மனித வள விருத்தி தொடர்பாக தாபனப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்.

| | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| வெளிநாடு | 17 | 23 |
| உள்நாடு | 49 | 155 |

2. 2014 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பான விபரங்கள்.

| **நிறுவனம்** | **முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்களின் எண்ணிக்கை** | | | | | | | | | | | | | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | A | B | C | D | E | F | G | H | I | J | K | L | M | N | |
| அமைச்சு | 01 | | 02 | | | | | | | | | | | | 03 |
| புகையிரதத் திணைக்களம் | | | 04 | | 01 | 01 | 01 | | | 01 | 04 | | | | 12 |
| மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் | | | | 01 | | | | | | | | | | 04 | 05 |
| இலங்கைப் போக்குவரத்துச் சபை | | 03 | | | 05 | | 03 | | | | | | | | 11 |
| தேசியப் போக்குவரத்து வைத்திய நிறுவகம் | | 01 | | | | | | | | | | | | | 01 |
| புதிய புகையிரத வீதிகள் மேம்பாட்டுக் கருத்திட்டம் | 01 | | | | | | | | | | 01 | | 01 | | 03 |
| **மொத்தம்** | **02** | **04** | **06** | **01** | **06** | **01** | **04** | **–** | **–** | **01** | **05** | | **01** | **04** | **35** |

A – கட்டிட நிர்மாணம், சொத்து மேம்பாடு மற்றும் மேம்படுத்துதல் நிர்மாணங்களுக்கான நிறுவகம் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்

B – பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்படும் அறிக்கைகள்

C – நியமித்தல், பதவி உயர்வு, சேவை நீடிப்பு, ஓய்வுபெறல், மீண்டும் சேவைக்கு அமர்த்துதல், மீளவும் சேவைக்குக் கோருதல், சேவை நிரந்தரமாக்குதல்.∴ ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு அமர்த்துதல்.

D - நிறுவன அமைப்பினைத் தயாரித்தல்.∴ ஆட்சேர்ப்பு மற்றும் உள்ளீர்த்தல்.

E - மிகப் பிரமாண்டமான கொள்வனவு.∴ வெளியாருக்குக் கொடுப்பனவு செய்தல்.

F - காணிகளை ஒப்படைப்புச் செய்தல்.∵ஏனைய பகுதியினருக்கு வழங்குதல்.∵குத்தகை வருமானங்களைப் பெற்றுக்கொள்ளுதல்.

G – ஊழியர் சம்பள முரண்பாடுகளை நீக்குதல் மற்றும் ஏனைய நிவாரணங்களை வழங்குதல்/அரசியல் பழிவாங்கல்களுக்கான வேண்டுகோள்/சம்பள நிலைகளில் அமர்த்துதல்/மேலதிக நேரக் கொடுப்பனவுக் கோரிக்கை.∵.கொடுப்பனவுக் கோரிக்கை

H – கணக்குகள், நிதிசார் நடவடிக்கைகள் மற்றும் பிற நிர்வாகச் செயற்பாடுகள்.

I - சொத்துக்களை விற்றல், அகற்றுதல் போன்றன

J – சேவை உடன்படிக்கையினைப் புதுப்பித்தல்.:.கருத்திட்டங்கள், ஒப்பந்தக்கால வரையறைகளை நீடிப்புச் செய்தல்

K – மேலதிக நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ளுதல்.

L - ஒழுக்காறு

M – சேதமான பொருட்களை விற்பனை செய்தல்.:.வழங்குதல்

N - மோட்டார் வாகனச் சட்டத்திற்கு உரித்தான அரசுக்கு வருமானங்களைக் கிடைக்கச் செய்தல். வாகனப் பரிமாற்றம்.:.சட்டங்களைத் திருத்தஞ் செய்தல்.

3. பாராளுமன்றம் தொடர்பாக இடம்பெற்ற பணிகள்

i. விடையளிக்கப்பட்ட பாராளுமன்ற வினாக்களின் எண்ணிக்கை - 28

ii. நடவடிக்கை எடுக்கப்பட்ட பொதுசன முறைப்பாடுகளின் எண்ணிக்கை - 42

2014 ஆம் ஆண்டு தொடர்பாக 04 பொதுசன முறைப்பாட்டுக் கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான சபைத் தொடர்களுக்குத் தேவையான கோவைகளை முன்வைத்தல். கடந்த வருடங்களுக்கான பொதுசன முறைப்பாடுகள் தொடர்பான அறிக்கைகளைக் கோருதல், அவற்றை உரிய நிறுவனங்களுக்கு முன்வைத்தல் மற்றும் கூட்டச்செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் இடம்பெற்றுள்ளன.

iii. நடவடிக்கை எடுக்கப்பட்ட ஆலோசனைக் குழு வினாக்கள் - 34

2014 ஆம் ஆண்டு தொடர்பாக 01 ஆலோசனைக் குழுக் கூட்டத் தொடர் நடாத்தப்பட்டதுடன் அதற்கான கூட்டத் தொடருக்கான தேவையான கோவைகளை முன்வைத்தல். கௌரவப் பாராளுமன்ற உறுப்பினர்களினால் தங்களின் விடயப் பரப்புடன் முன்வைக்கப்படும் வினாக்கள் தொடர்பாக நிறுவனங்களைத் தொடர்புபடுத்தி விடைகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் கூட்டச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் இடம்பெற்றுள்ளன.

iv. பாராளுமன்றம் பிற்போடும் சந்தர்ப்பத்தின் விவாதங்களுக்கான அறிக்கைகளை முன்வைத்தல்.

v. 2015 பாதீட்டு விவாதத்திற்கான அனைத்து ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன..

## 2.2 உள்ளக நிர்வாகப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்

| நிகழ்ச்சித் திட்டம் | செயற்பாடுகள் |
|---|---|
| 01. தபால்கள் | i. கிடைக்கின்ற மற்றும் அனுப்புகின்ற கடிதங்களை ஒப்படைத்தல்.<br>ii. அன்றாடக் கடிதங்களைப் பகிர்ந்தளித்தல்.<br>iii. தபால் முத்திரை இயந்திரத்தினைப் பேணுதல் மற்றும் அது தொடர்பான கொடுப்பனவுச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல். |
| 02. சுய விபரக்கோவைகளினைப் பேணுதல்<br>• பதவிநிலை உத்தியோகத்தர்கள்<br>• மொழிபெயர்ப்பாளர் சேவை<br>• சாரதிகள்<br>• அ.மு.உ. சேவை<br>• கா.சே.சே. சேவை<br>• அமைய ஊழியர்கள்<br>• அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | i. பதவிநிலை உத்தியோகத்தர்களின் வருடாந்த செயற்பாட்டு அ ற ி க ் ை க க ள ப ் பெற்றுக்கொள்ளுதல், அங்கீகரித்தல்.<br>ii. சம்பள ஏற்றங்களை வழங்கும் நடவடிக்கைகள்.<br>iii. பதவி உயர்வினை வழங்குதல்/ நியமிப்புச் செய்தல் நடவடிக்கைகள் (கடமைகளை நிறைவேற்றல் மற்றம் பதிற் கடமை)<br>iv. இளைப்பாறுதல், இடமாற்றம் தொடர்பான நடவடிக்கைகள்.<br>v. வெளிநாட்டு விடுமுறை தொடர்பான நடவடிக்கைகள்.<br>vi. சம்பள மறுசீரமைப்பினை மேற்கொள்ளுதல்<br>vii. வினைத்திறன் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை உரிய அதிகாரிக்கு அனுப்புதல்.<br>viii. சேவைச் சான்றிதழினை வழங்குதல். |
| 03. கௌரவ அமைச்சரின் அலுவலகக் குழாம் மற்றும் கௌரவப் பிரதியமைச்சரின் அலுவலகக் குழாம் தொடர்பான நடவடிக்கைகள். | i. கௌரவ அமைச்சர், கௌரவ பிரதியமைச்சரின் பிரத்தியே அலுவலகக் குழாமினை நியமித்தல் உள்ளடங்கலான அனைத்துச் செயற்பாடுகள்.<br>ii. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு விண்ணப்பப் படிவங்களை முன்வைத்தல் |

| | |
|---|---|
| 04. அமைச்சுக் குழாமுக்குரிய கடன் மற்றும் முற்பணம் | i. சொத்துக் கடன் விண்ணப்பப் படிவத்தினை அங்கீகாரத்திற்கு முன்வைத்து வங்கிக்கு அனுப்புதல்.<br>ii. இடர் கடன்/பண்டிகை முற்பணம்/ விசேட முற்பணம் விண்ணப்பப் படிவங்களை அங்கீகரித்து கொடுப்பனவுக்காக முன் வைத்தல்.<br>iii. சட்டத்தரணி ஆணைச்சீட்டினை இரத்துச்செய்தல்/பிணை வைப்பினை விடுவித்தல் |
| 05. அக்ரகார காப்புறுதிச் செயற்பாடுகள் | i. அமைச்சின் உத்தியோகத்தர்களினால் முன்வைக்கப்படுகின்ற அக்ரகாரப் பயன்களைக் கோருகின்ற விண்ணப்பப் படிவங்களை உறுதிசெய்து காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு முன்வைத்தல்.<br>ii. இலத்திரனியல் அக்ரகார அட்டைகளை வழங்குவதற்காக உத்தியோகத்தர்களின் விண்ணப்பப் படிவங்களை அக்ரகார நிதிய அலகுக்கு அனுப்புதல் மற்றும் இலத்திரனியல் அக்ரகார அட்டைகளை உத்தியோகத்தர்களுக்குப் பகிர்ந்தளித்தல். |
| 06. தேர்தல் கடமைகள் | மாகாணத் தேர்தல்களுக்காக தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற ஆலோசனையின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். |
| 07. ஒழுக்காற்று நடவடிக்கைகள் | i. பரிசீலனை தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் கேட்கப்பட்ட விடயங்கள்/அறிக்கைகளை முன்வைத்தல்.<br>ii. வாகன விபத்துக்கள் தொடர்பாக நி.பி. 104, நி.பி. 105 அறிக்கைகளைத் தயாரித்தலும் மற்றும் தேவையான ஆவணங்களைப் பெற்று கோவைகளைத் தயார்படுத்துதல்.<br>iii. வாகன விபத்துக்கள் தொடர்பான விசாரணையினை மேற்கொள்வதற்கு புலனாய்வுச் சபையினை நியமித்தல் |

| | | |
|---|---|---|
| 08. | ஊடக அலகின் பற்றுச்சீட்டுக்கள் | கௌரவ அமைச்சர் மற்றும் கௌரவப் பிரதியமைச்சர் பங்குபற்றிய அலுவலக வைபவங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோவுக்கான உரிய பற்றுச்சீட்டுக்களின் கட்டணங்களின் உறுதிச்சீட்டுக்களைத் தயாரித்து கணக்குகள் பிரிவுக்கு அனுப்புதல். |
| 09. | தொலைபேசி/நீர் /மின் சாரம் / உத்தியோகபூர்வ வதிவிடங்கள்/ வரிப்பணம் தொடர்பான நடவடிக்கைகள் | i. கௌரவ அமைச்சர் / கௌரவ பிரதியமைச்சரின் அலுவலகங்கள், வதிவிடத் தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி மற்றும் உள்ளகத் தொலைபேசிக்கான கட்டணங்களைத் தீர்த்தல்.<br>ii. அமைச்சின் செயலாளர் மற்றும் அலுவலகக் குழாமின் நேரடி தொலைபேசி, வதிவிடத் தொலைபேசி மற்றும் உள்ளகத் தொலைபேசிக் கட்டணங்களைச் செலுத்துதல்.<br>iii. நீர்க்கட்டணங்கள் மற்றும் மின்சாரக் கட்டணங்களை அறிவிடுதல் |
| 10. | சுத்தஞ் செய்கின்ற செயற்பாடுகள் | சுத்தஞ் செய்கின்ற (துப்புரவு) செயற்பாடுகளுக்குக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல். |
| 11. | பிரதியெடுக்கும் இயந்திரங்கள் மற்றும் மற்றும் நிறுவனத்தின் தொலைநகல் இயந்திரங்கள் தொடர்பான நடவடிக்கைகள். | i. பேணல்<br>ii. ஊக்குவிப்புக் கொடுப்பனவினை ஆரம்பித்துக் கொண்டு செல்லல். |
| 12. | சிற்றூழியர்களின் சீருடைகள் தொடர்பான நடவடிக்கையினை எடுத்தல். | வருடாந்தம் சீருடைகளுக்கான துணிகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கையினை மேற்கொள்ளல். |
| 13. | அடையாள அட்டைகள் மற்றும் புகையிரத, பேரூந்து இலவசப் பயண ஆணைச்சீட்டுக்களுடன் தொடர்பான நடவடிக்கைகள். | i. அடையாள அட்டைகளை வழங்குதல் மற்றும் முகாமைச் செயற்பாடுகள்<br>ii. புகையிரத. பேரூந்துப் போக்குவரத்து ஆணைச்சீட்டுக்களுடன் தொடர்பான நடவடிக்கைகள் |
| 14. | பத்திரிகைகள் தொடர்பான நடவடிக்கைகள். | பத்திரிகைகளை வழங்குதல் தொடர்பான செயற்பாடுகள் |
| 15. | உணவு பானங்களை வழங்குதல் தொடர்பான செயற்பாடுகள் | அமைச்சுக்கான உணவு பானங்கள் தொடர்பான நடவடிக்கைகள |

| | |
|---|---|
| 16. வெளி நிறுவனங்களுடனான தொடர்புகள் | i. பல்வேறு வெளிக்களங்கள் தொடர்பான நிறுவனங்களைத் தொடர்புபடுத்துதல்<br>ii. வெளி நிறுவனங்களினால் அறிவிக்கப்பட்டுகின்ற விடயங்கள் தொடர்பாக உள்ளக ரீதியில் தெளிவுபடுத்துதல் |
| | i. அமைச்சின் அனைத்து உத்தியோகத்தர் குழாமின் மாதாந்த வரவு மற்றும் வெளிச்செல்லும் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல்.<br>ii. விடுமுறைப் பதிவேடுகளை நாளதுவரைப்படுத்தல்.<br>iii. கடமை விடுமுறைகளைப் பதிவு செய்தல் மற்றும் கடிதப் கோவைகளை முன்னெடுத்தல்.<br>iv. போக்குவரத்துச் செலவினங்கள், விடுமுறை புகையிரத ஆணைச்சீட்டுகளை வழங்குதல் மற்றும் கட்டணங்களைச் செலுத்துதல்.<br>v. வெளிநாட்டு விடுமுறை, பிரசவ விடுமுறையினைப் பதிவு செய்தல் மற்றும் ஆவணக் கோவைகளை முன்னெடுத்தல். |
| 18. சுற்றுலா விடுதி | i. புகையிரதத் திணைக்களத் திற்குரித்தான சுற்றுலா விடுதியினை ஒதுக்குதல் மற்றும் அதற்குரித்தான பணத்தினை புகையிரதத் திணைக்களத்திற்கு மீள் நிரப்புதல்<br>ii. அதற்குரித்தான பதிவேடுகளை ஆரம்பித்துக் கொண்டு செல்லல் |
| 19. அமைச்சின் கட்டிட நடவடிக்கைகள் | i. அமைச்சின் கட்டிங்களின் தேவைப்பாடுகள் மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறுவதற்கு தேவையானவற்றை மேற்கொள்ளல்.<br>ii. புதிய வாகனத் தரிப்பிடத்தினை மேம்படுத்துவதற்கான தேவையான பதிவேடுகளை ஆரம்பித்துக்கொண்டு செல்லல். |
| 20. ஆய்வு நடவடிக்கைகள். | ஆய்வு விசாரணை அறிக்கைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்குதல். |

| | | |
|---|---|---|
| 21. | பொருட் பதிவேடு | அமைச்சின் பொருட்பதிவேட்டு ஆவணம், பொருட் பதிவேட்டுப் புத்தகத்தினை முன்னெடுத்துல் செல்லல் மற்றும் நாளதுவரைப்படுத்தல். |
| 22. | தேசத்திற்கு மகுடம் | i. தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கான செயற்பாடுகள்.<br>ii. தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினை முன்வைத்தல்.<br>iii. தேசத்திற்கு மகுடம் 2014 கண்காட்சி செயற்பாடுகள் தொடர்பாகச் செயற்படுதல்.<br>iv. தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கொடுப்பனவுச் செயற்பாடுகளை நிறைவு செய்தல். |
| 23. | சலுகை அடிப்படையில் மோட்டார் வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுத்தல். | அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் உரிமை உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கு சலுகை அடிப்படையில் வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குதல். |
| 24. | பதவிநிலை உத்தியோகத்தர் களுக்கான கூட்டங்கள் | பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான கூட்டங்களை ஒழுங்கமைத்தல். |
| 25. | உள்ளக நிர்வாகப் பிரிவின் | உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டங்கள். உள்ளக நிர்வாகப் பிரிவின் உத்தியோகத்தர்களினை பயிற்சி வேலைத்திட்டங்களுக்காக பங்குபற்றச் செய்யும் நடவடிக்கைகள். |
| 26. | ஆட்சேர்ப்புத் திட்டம் | அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்ட திட்ட வல்லுனர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், தொழில்நுட்ப பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் ஒப்பத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| 27. | டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சி திட்டம் | அமைச்சு சுற்றுப்புறச் சூழலில் டெங்கு ஒழிப்புக்கான வேலைத்திட்டங்களை அமுற்படுத்துதல். |

#### 2.2.1 போக்குவரத்துப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்.

- போக்குவரத்துப் பிரிவின் மொத்த வாகனங்களின் எண்ணிக்கை 52 ஆகும்.

- 14-6722 மற்றும் 32-2356 என்ற 02 வாகனங்கள் கல்வி பொ.த உயர்தரப் பரீட்சையின் தொழில்நுட்ப விடய செய்முறைப் பயிற்சிச் செயற்பாடுகளுக்கு வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- 16-4943 மற்றும் 18-2047 என்ற 02 வாகனங்கள் UNDP நிறுவனத்திற்கு வழங்கப்படவுள்ளது.

- வருடத்தினுள் 06 வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளது. வருட நிறைவின் தேவைப்பாட்டின் பிரகாரம் 02 வாகனங்கள் அகற்றப்பட்டுள்ளதுடன், கூலி அடிப்படையிலான வாகனங்கள் 04 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

- 2014.01.01- 2014.12.31 வரையான காலப்பக்குதியில் திடீர் விபத்துக்கள் 11 இடம்பெற்றுள்ளது. அவ் வாகனங்கள் காப்புறுதி இழப்பீட்டு நிதியின் கீழ், பழுதுபார்க்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டில் காப்புறுதி இழப்பீட்டு நிதியாக ஷரூபா. 715,519.25 பணம் பெறப்பட்டுள்ளது.

| வாகன இலக்கம் | விபத்து இடம்பெற்ற தினம் | பெறப்பட்ட காப்புறுதி இழப்பீட்டுப் பணம் |
|---|---|---|
| KR 7389 | 2014.02.26 | ரூபா. 15,300.00 |
| KR 7388 | 2014.03.25 | ரூபா. 26,300.00 |
| KR 7389 | 2014.04.09 | ரூபா. 21,650.00 |
| GE 6487 | 2014.04.23 | ரூபா. 60,400.00 |
| KR 5575 | 2014.06.12 | ரூபா. 164,349.92 |
| KW 3038 | 2014.06.15 | ரூபா. 26,550.00 |
| KI 2661 | 2014.07.10 | ரூபா. 56,750.00 |
| 16-4943 | 2014.07.25 | ரூபா. 13,183.33 |
| NB 1430 | 2014.08.02 | ரூபா. 15,600.00 |
| KQ 5515 | 2014.08.18 | ரூபா. 299,236.00 |
| 65-7293 | 2014.09.11 | ரூபா. 16,200.00 |
| | | ரூபா. 715,519.25 |

- 2015 ஆம் ஆண்டு தொடர்பாக 07 டபிள் கப் வாகனங்கள் மற்றும் 03 மோட்டார் வாகனங்களுக்கு தேசியப் பாதீட்டுத் திணைக்களத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளதுடன், அதற்குச் சிறந்த பெறுபேறு கிடைக்கப் பெற்றுள்ளது.

## 2.3 2014 ஆம் ஆண்டினுள் காணிப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்.

### 2.3.1. அமைச்சரவைப் பத்திரம் மற்றும் அவதானிப்புக்களை முன்வைத்தல்.

புகையிரதத் திணைக்களத்திற்கு உரித்தான கொழும்பு 08, தேவி பாலிகா வித்தியாலயம் மற்றும் களனிப் பள்ளத்தாக்குப் புகையிரத வீதிக்கிடையேயுள்ள ஏறக்குறைய 1 ஏக்கர் வரையான காணியிலிருந்து, புகையிரத வீதியிலிருந்து 7.5 மீற்றரை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு வைத்துக் கொண்டு, மீதியினை ஒப்படைப்பதற்கு கல்வி அமைச்சினால் முன்வைக்கப்பட்டிருந்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு உரிய அவதானிப்புக்களை வழங்குதல்.

### 2.3.2 காணிப் பிரிவினால் நிறைவு செய்யப்பட்ட பிற பணிகள்.

- 2014 ஜனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2014 திசம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தினுள் காணி தொடர்பான நடவடிக்கைகளுக்குரிய 458 கடிதங்கள் வரையில் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அவ்வனைத்துக் கடிதங்களுக்கும் உரியவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- வடக்கு வீதியிலிருந்து மட்டக்களப்பு வீதிக்கு நேரடியாக உட்புகக்கூடியவாறு புகையித வீதியினை நிர்மாணிப்பதற்கு காணியினைச் சுவீகரிப்பது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் இடம்பெறுதல்.

- புத்தளம் வீதியின் லியனகே முல்ல புகையிரத நிலையத்தின் தெற்குப் பக்க புகையிரதத் தளத்தினை நிர்மாணிப்பதற்குக் காணியினைச் சுவீகரித்தல் தொடர்பாக தேவையான நடவடிக்கையினை எடுத்தல்.

- பெருந்தெருக்கள் துறைமுகம் மற்றும் கடற்படை அமைச்சு முன்வைத்துள்ள அமப/141/0833/533/088 என்ற அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் காணியினைச் சுவீகரிக்கும் சட்டத்தின் ஒழுங்கு விதிகளைத் திருத்தியமைப்பதற்கு அவதானிப்புக்களை முன்வைத்தல்.

- கொத்தலாவலபுர புதிய தாய்மார்களுக்கான கிளினிக்கினை நிர்மாணிப்பதற்கு புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான இரத்மலானை எந்திரப் பொறியியலாளர் தொழிற்சாலைகள் தொகுதிக்கு உரித்தான காணி, காணியின் உரிமையைப் புகையிரதத் திணைக்களத்திற்கு வைத்துக் கொண்டு, முகாமையினை தெகிவளை நகர சபைக்கு வழங்குதல்.

- கம்புறுகமுவ சந்திக்கும் சந்தியில் பேரூந்துத் தரிப்பிடமொன்றை நிர்மாணிப்பதற்கு போக்குவரத்து அமைச்சுக்கான காணியினைச் சுவீகரிப்பத்கு 2014.11.03 ஆந் திகதிய காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளதுடன், கிடைக்கப் பெற்ற அங்கீகாரத்தின் பிரகாரம் உரிமையை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

- பண்டாவளை நகரத்தின் கொலின் கட்டிடம் மற்றும் காகில்ஸ் கட்டிடத்திற்கிடையே அமைந்துள்ள புகையிரதத் திணைக்களத்திற்கு உரித்தான காணியில் லொத்தர் கடையொன்றை ஆரம்பித்துச் செல்வதற்குக் குத்தகை அடிப்படையில் பெற்றுத்தரம்படி வீ.வீரசிங்க என்பவரினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய 2014.03.25 ஆந் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின்போது எட்டப்பட்ட இணக்கத்திற்கு அமைய உரிய பகுதியினரினைச் சேர்த்து ஐந்து பகுதியினருக்கு குத்தகையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

- ''புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் அத்துமீறி வசித்து வருகின்ற புகையிரதத் திணைக்களத்தின் பணியாளர்கள் மற்றும் அத்துமீறி வசிப்போர்கள் தொடர்பாகப் பொதுக் கொள்கையொன்றைத் தயாரித்தல்'' என்ற தொனிப்பொருளின் கீழ், நியமிக்கப்பட்டுள்ள காணி உப செயற்குழுவினைக் கூட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 2.4 2014 ஆம் ஆண்டினுள் புகையிரத நிர்வாகப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்.

- புகையிரதத் திணைக்களத்திற்கு உரித்தான அனைத்து பதவிநிலைத் தரங்களுக்கான பதவிகள் மற்றும் ஊழியர்களைச் நியமிப்புச் செய்வதிலிருந்து ஓய்வூதியம் பெறும் வரையான இடமாற்றங்கள். ஒழுக்காற்றுக் கடமைகள், ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான உரிய கடமைச் செயற்பாடுகள் மற்றும் மீளவும் பணிக்கமர்த்துவதற்கான கடமைச் செயற்பாடுகளை அமைச்சினூடாகவும், உரிய ஏனைய நிறுவனங்கள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினூடாகவும் நிறைவு செய்தல்.

- வெளிநாட்டு விடுமுறைகள், திடீர் விபத்து விடுமுறைகள், திடீர் விபத்து இழப்பீடு தொடர்பான கடமைகளைப் பூர்த்தி செய்தல்.

    - தொழிற்சங்கச் செயற்பாடுகளுக்கு ஊழியர்களை விடுவித்தல், தொழிற்சங்க வேண்டுகோள்கள் மற்றும் ஏனைய முறைப்பாடுகள் தொடர்பாகச் செயற்படுதல்.

    - உபயோகிக்கப்பட்டு அகற்றப்பட்டுள்ள தண்டவாளங்கள், கடவைகள் உட்பட்ட பாவனைக்கு உதவாத பொருட்களை சலுகை விலையில் பெற்றுக் கொள்வதற்கு பல்வேறு பகுதியினரால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்கள் தொடர்பான நடவடிக்கைகள்.

    - புகையிரதத் திணைக்களத்தில் கடமையில் ஈடுபட்டிருந்தவேளையில், அரசியல் பழிவாங்கல்கள் மற்றும் யூலைக் கலவரங்களுக்கு உட்பட்டவர்களால் மென்மேலும் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்கள் தொடர்பான கடமைகளை நிறைவு செய்தல்.

    - புகையிரதத் திணைக்களத்திற்கு உரித்தான புதிய அலுவலக ஆளணி

வெற்றிடங்கள், முகாமைத்துவப் பணிப்பாளர் நாயகத்தினால் 2014.04.30 ஆந்திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான ஆளணியினர் எண்ணிக்கை மற்றும் சம்பள அளவுத்திட்டம் தொடர்பாக மேலும் மறுசீரமைக்கப்பட்டு வருகின்றது.

- o பின்வரும் பதவிகளுக்கு அ.நி.உ.சு 6/2006 இன் பிரகாரம் இற்றை வரையில் புதிய ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன். அந்தத் திட்டமும் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது.
- o புகையிரதப் பொறுப்பதிகாரி சேவை
- o புகையிரதக் கண்காணிப்பு முகாமைத்துவச் சேவை
- o புகையிரத சாரதிகள் பதவி.
- o புகையிரதக் காப்பாளர் சேவை
- o சாரதி உதவியாளர்

- சட்ட உத்தியோகத்தர், புகையிரதப் பாதுகாப்புச் சேவையின் உதவிப் பாதுகாப்பு அத்தியட்சகர்/பிரதி அத்தியட்சகர்/அத்தியட்சகர், உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (ஆற்றல் காப்பீடு ) மற்றும் உதவிப் போக்குவரத்து அதிகாரி (எந்திரம்) பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டங்கள் மறுசீரமைப்புக்களுக்கு உட்பட்டு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- ஏனைய பதவிகளுக்குரிய அரசாங்க நிர்வாக சுற்றுநிஷரூபம் 6∴2006 இன் பிரகாரம் புதிய ஆட்சேர்ப்புத் திட்டம், சம்பள மற்றும் ஆளணியினர் குழுவின் செயலாளர் மற்றும் தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரையுடன் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

## 2.5 சட்டப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்

2014 ஆம் ஆண்டின் சட்ட நடவடிக்கைகள் தொடர்பான செயற்பாடு.

- 2014 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட புதிய வழக்குகளின் எண்ணிக்கை - 13
- மனித உரிமைகள் முறைப்பாடுகளின் எண்ணிக்கை - 02
- மோட்டார் வாகனப் போக்குவரத்து சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் எண்ணிக்கை - 04

# 3. நிதிசார் முகாமைத்துவம் மற்றும் முன்னேற்றம்

## 3.1 கொள்முதல் குழு

| | | 2014 ஆம் ஆண்டில் அமுற்படுத்தப்பட்ட கொள்முதல்களின் எண்ணிக்கை | 2014 ஆம் ஆண்டில் புஸீர்த்தி செய்யப்பட்ட கொள்முதல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழு | 08 | 02 |
| 02 | அமைச்சுக் கொள்முதல் குழு | 16 | 09 |

## 3.2 நிதிசார் முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| 01 | 2014 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் உண்மைச் செலவுகள் | உரிய அறிக்கைகள் இணைக்கப்பட்டுள்ளன. |
| 02 | ஒதுக்கீடுகளை மீறி செலவு செய்யப்பட்டுள்ள செலவுத் தலைப்பு | இல்லை |
| 03 | வினைத்திறனை அதிகரிப்பதற்குச் செய்ய வேண்டிய பணிகள் | உத்தியோகத்தர்கள் வினைத்திறனுடன் கடமைச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதுடன், மேலும் பயிற்சி தேவைப்படும் உத்தியோகத்தர்களை அதற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 04 | 2014 ஆம் ஆண்டின் கணக்கு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் திறைசேரியுடன் இணக்கஞ் செய்தல். | அனைத்து அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டு திறைசேரிப் புத்தகங்களுடன் இணக்கஞ் செய்யப்பட்டுள்ளன. |

## EXPENDITURE REPORT As At 31.12.2014

**Head - 114 - Ministry of Transport**
**Programme - 01 - Operattional Activities**
**Project - 01 - Minister's office**

| Sub Project | Object Code | Category/Object Title | Total Net Provision | Total Actual Expenditure end of December | % |
|---|---|---|---|---|---|
| 0 | | **Recurrent Expenditure** | **52,894,799.00** | **51,066,214.15** | **96.54** |
| | | **Personal Emoluments** | **15,000,000.00** | **14,501,782.44** | **96.68** |
| | 1001 | Salaries & Wages | 7,650,000.00 | 7,366,747.96 | **96.30** |
| | 1002 | Overtime and Holiday payments | 2,850,000.00 | 2,691,946.26 | **94.45** |
| | 1003 | Other Allowances | 4,500,000.00 | 4,443,088.22 | **98.74** |
| | | **Travelling Expenses** | **3,450,000.00** | **2,906,596.50** | **84.25** |
| | 1101 | Domestic | 2,450,000.00 | 2,081,761.38 | **84.97** |
| | 1102 | Foreign | 1,000,000.00 | 824,835.12 | **82.48** |
| | | **Suppliers** | **14,200,000.00** | **13,835,592.41** | **97.43** |
| | 1201 | Stationery & Office Requisites | 1,100,000.00 | 937,315.20 | **85.21** |
| | 1202 | Fuel | 13,000,000.00 | 12,843,970.21 | **98.80** |
| | 1203 | Diets & Uniform | 100,000.00 | 54,307.00 | **54.31** |
| | | **Maintanance Expenditure** | **11,244,799.00** | **10,955,836.74** | **97.43** |
| | 1301 | Vehicles | 9,844,799.00 | 9,830,041.78 | **99.85** |
| | 1302 | Plant Machinery & Equipment | 1,100,000.00 | 1,094,953.96 | **99.54** |
| | 1303 | Building & Structures | 300,000.00 | 30,841.00 | **10.28** |
| | | **Services** | **9,000,000.00** | **8,866,406.06** | **98.52** |
| | 1401 | Transport | 3,000,000.00 | 2,882,339.00 | **96.08** |
| | 1402 | Postal & Communication | 2,500,000.00 | 2,497,714.15 | **99.91** |
| | 1403 | Electricity & Water | 0.00 | 0.00 | |
| | 1405 | Other | 3,500,000.00 | 3,486,352.91 | **99.61** |
| | | **Capital Expenditure** | **5,800,000.00** | **4,475,845.32** | **77.17** |
| | | **Rehabilitation and Improvement of Capital Assets** | **4,100,000.00** | **3,308,621.40** | **80.70** |
| | 2001 | Building & Structures | 1,000,000.00 | 898,588.00 | **89.86** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2002 | Plant Machinery & Equipment | 300,000.00 | 275,494.96 | **91.83** |
| | 2003 | Vehicles | 2,800,000.00 | 2,134,538.44 | **76.23** |
| | | **Acquisition of Capital Assets** | **1,700,000.00** | **1,167,223.92** | **68.66** |
| | 2102 | Furniture & office Equipment | 500,000.00 | 262,264.00 | **52.45** |
| | 2103 | Plant Machinery & Equipment | 0.00 | | |
| | | Media Unit Equipment | 400,000.00 | 253,970.00 | **63.49** |
| | | Other Machinery | 800,000.00 | 650,989.92 | **81.37** |
| | | **Project Total** | **58,694,799.00** | **55,542,059.47** | **94.63** |

**EXPENDITURE REPORT As At 31.12.2014**

**Head - 114 - Ministry of Transport**
**Programme - 01 - Operattional Activities**
**Project - 02 - Administration & Establishment Services**

| Sub Project | Object Code | Category/Object Title | Total Net Provision | **Total Actual Expenditure end of December** | % |
|---|---|---|---|---|---|
| **0** | | **Recurrent Expenditure** | **109,191,201.00** | **106,111,257.98** | **97.18** |
| | | **Personal Emoluments** | **56,600,000.00** | **55,250,871.61** | **97.62** |
| | 1001 | Salaries & Wages | 32,150,000.00 | 31,712,435.92 | **98.64** |
| | 1002 | Overtime and Holiday payments | 2,400,000.00 | 1,689,992.49 | **70.42** |
| | 1003 | Other Allowances | 22,050,000.00 | 21,848,443.20 | **99.09** |
| | | **Travelling Expenses** | **2,250,000.00** | **1,900,605.40** | **84.47** |
| | 1101 | Domestic | 1,000,000.00 | 708,126.46 | **70.81** |
| | 1102 | Foreign | 1,250,000.00 | 1,192,478.94 | **95.40** |
| | | **Suppliers** | **10,586,000.00** | **10,305,710.35** | **97.35** |
| | 1201 | Stationery & Office Requisites | 4,700,000.00 | 4,687,975.23 | **99.74** |
| | 1202 | Fuel | 5,686,000.00 | 5,497,735.12 | **96.69** |
| | 1203 | Diets & Uniform | 200,000.00 | 120,000.00 | **60.00** |
| | | **Maintenance Expenditure** | **15,215,864.00** | **15,141,296.56** | **99.51** |
| | 1301 | Vehicles | 11,915,864.00 | 11,910,619.12 | **99.96** |
| | 1302 | Plant Machinery & Equipment | 2,700,000.00 | 2,691,767.10 | **99.70** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 1303 | Building & Structures | 600,000.00 | 538,910.34 | **89.82** |
| | | **Services** | **23,669,337.00** | **22,691,856.07** | **95.87** |
| | 1401 | Transport | 2,200,000.00 | 2,042,200.00 | **92.83** |
| | 1402 | Postal & Communication | 2,700,000.00 | 2,690,540.58 | **99.65** |
| | 1403 | Electricity & Water | 8,400,000.00 | 8,307,964.87 | **98.90** |
| | 1404 | Rents and Local Taxes | 180,000.00 | 179,200.80 | **99.56** |
| | 1405 | Other | | | |
| | | Dayata Kirula | 1,385,000.00 | 1,009,535.88 | **72.89** |
| | | Other (Including Cleaning Service) | 4,450,000.00 | 4,373,663.94 | **98.28** |
| | | "Better Air Quality (BAQ) - 2014" - Conference | 4,354,337.00 | 4,088,750.00 | **93.90** |
| | | **Transfers** | **825,000.00** | **820,917.99** | **99.51** |
| | 1506 | Property Loan Interest to Public Servants | 825,000.00 | 820,917.99 | **99.51** |
| | | **Other Recurrent Expenditure** | **45,000.00** | **0.00** | **0.00** |
| | 1701 | Losses And Write Off | 45,000.00 | 0.00 | **0.00** |
| 1 | | **Uthuru Mithutu Development Programme** | **0.00** | **0.00** | |
| | 1405 | Other | 0.00 | 0.00 | |
| | | **Capital Expenditure** | **6,226,000.00** | **5,692,987.25** | **91.44** |
| | | **Rehabilitation and Improvement of Capital Assets** | **3,076,000.00** | **2,612,175.00** | **84.92** |
| | 2001 | Building & Structures | 500,000.00 | 500,000.00 | **100.00** |
| | 2002 | Plant Machinery & Equipment | 376,000.00 | 376,000.00 | **100.00** |
| | 2003 | Vehicles | 2,200,000.00 | 1,736,175.00 | **78.92** |
| | | **Acquisition of Capital Assets** | **1,550,000.00** | **1,542,387.00** | **99.51** |
| | 2102 | Furniture & office Equipment | 1,000,000.00 | 992,387.00 | **99.24** |
| | 2103 | Plant Machinery & Equipment | 550,000.00 | 550,000.00 | **100.00** |
| | | **Capacity Building** | **1,600,000.00** | **1,538,425.25** | **96.15** |
| | 2401 | Training and Capacity Building | 1,600,000.00 | 1,538,425.25 | **96.15** |
| | | **Project Total** | **115,417,201.00** | **111,804,245.23** | **96.87** |

**EXPENDITURE REPORT As At 31.12.2014**

**Head - 114 - Ministry of Transport**
**Programme - 02 - Development Activities**
**Project - 03 - Development of Road Transport**

| Sub Project | Object Code | Category/Object Title | Total Net Provision | **Total Actual Expenditure end of December** | % |
|---|---|---|---|---|---|
| | | **Recurrent Expenditure** | **7,394,500,000.00** | **7,390,919,959.62** | **99.95** |
| **1** | | **Sri Lanka Transport Board** | **7,373,500,000.00** | **7,369,919,959.62** | **99.95** |
| | 1503 | **Public Institution** | | | |
| | | School & Higher Education Season Ticket Subsidy | 1,695,000,000.00 | 1,695,000,000.00 | **100.00** |
| | | Armed Forces - Bus Passes | 280,000,000.00 | 276,419,959.62 | **98.72** |
| | | Grants to SLTB - Operating on Unremunerated Routes | 4,770,000,000.00 | 4,770,000,000.00 | **100.00** |
| | | Financial Assistance to SLTB | 628,500,000.00 | 628,500,000.00 | **100.00** |
| **3** | | **Lakdiva Engineering Company (Pvt.) Ltd.** | **21,000,000.00** | **21,000,000.00** | **100.00** |
| | 1503 | Public Institution | 21,000,000.00 | 21,000,000.00 | **100.00** |
| | | | | | |
| | | **Capital Expenditure** | **1,917,000,000.00** | **1,889,524,908.20** | **98.57** |
| **1** | | **Sri Lanka Transport Board** | **1,897,000,000.00** | **1,877,280,549.00** | **98.96** |
| | 2201 | **Public Institution** | | | |
| | | Purchase of New Buses/ Engine kits | 1,000,000,000.00 | 998,806,535.00 | **99.88** |
| | | Bus Fleet Augmentation, Institutional Development and Capacity Building | 877,000,000.00 | 858,524,014.00 | **97.89** |
| | | Dayata Kirula | 20,000,000.00 | 19,950,000.00 | **99.75** |
| | | Small Buses for Remote Villages | 0.00 | 0.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **5** | | **Implementation of Strategic Plan for Traffic Management (TEC is Rs: 10bn)** | **20,000,000.00** | **12,244,359.20** | **61.22** |
| | 2502 | Other Investments | 20,000,000.00 | 12,244,359.20 | **61.22** |
| | | **Project Total** | **9,311,500,000.00** | **9,280,444,867.82** | **99.67** |

**EXPENDITURE REPORT As At 31.12.2014**

**Head - 114 - Ministry of Transport**

**Programme - 02 - Development Activities**

**Project - 04 - Development of New Railroad**

| Sub Project | Object Code | Category/Object Title | Total Net Provision | **Total Actual Expenditure end of December** | % |
|---|---|---|---|---|---|
| | | **Capital Expenditure** | **15,524,612,000.00** | **11,124,059,432.87** | **71.65** |
| **1** | | **Matara - Beliatta-Kataragama New Railline** | **15,484,612,000.00** | **11,123,114,537.78** | **71.83** |
| | 2104 | Building & Structures | **15,291,512,000.00** | **11,117,846,072.71** | **72.71** |
| | | | 15,146,512,000.00 | 11,001,929,545.31 | **72.64** |
| | | | 145,000,000.00 | 115,916,527.40 | **79.94** |
| | 2105 | Lands and Land Improvements | **193,100,000.00** | **5,268,465.07** | **2.73** |
| | | Lands Acquisition & Payment of Compensation | 100,000,000.00 | 4,898,465.07 | **4.90** |
| | | Detail design investigation & Collection of Base Line data | 40,000,000.00 | 370,000.00 | **0.93** |
| | | Relocation of Infrastructure facilities & Clearing of Railway Trace | 53,100,000.00 | 0.00 | **0.00** |
| **5** | | **Kurunegala - Habarana Rail track project** | **5,000,000.00** | **508,160.52** | **10.16** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2105 | Lands and Land Improvements | 5,000,000.00 | 508,160.52 | **10.16** |
| **6** | | **Colombo - Hambantota (kelanivally) Line Extention priject** | **5,000,000.00** | **0.00** | **0.00** |
| | 2105 | Lands and Land Improvements | 5,000,000.00 | 0.00 | **0.00** |
| **7** | | **Madawachchiya - Trincomalee Rail Line Feasibility Study** | **15,000,000.00** | **0.00** | **0.00** |
| | 2105 | Lands and Land Improvements | 15,000,000.00 | 0.00 | **0.00** |
| **8** | | **Wellavaya - Bibila - Badulla New Rail Line** | **10,000,000.00** | **436,734.57** | **4.37** |
| | 2105 | Lands and Land Improvements | 10,000,000.00 | 436,734.57 | **4.37** |
| **9** | | **Trincomalee - Maho - Puttalam New Rail Line** | **5,000,000.00** | **0.00** | **0.00** |
| | 2105 | Lands and Land Improvements | 5,000,000.00 | 0.00 | **0.00** |
| | | **Project Total** | **15,524,612,000.00** | **11,124,059,432.87** | **71.65** |
| | | **HEAD RECCURENT TOTAL** | **7,556,586,000.00** | **7,548,097,431.75** | **99.89** |
| | | **HEAD CAPITAL TOTAL** | **17,453,638,000.00** | **13,023,753,173.64** | **74.62** |
| | | **HEAD TOTAL** | **25,010,224,000.00** | **20,571,850,605.39** | **82.25** |

## 4. 2013 ஆம் ஆண்டினுள் திட்டமிடற் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்.

1. புகையிரதத் திணைக்களம், இலங்கைப் போக்குவரத்துச் சபை, மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு, தேசியப் போக்குவரத்து வைத்திய நிறுவகம், லக்திவ என்ஜினியர் அமைப்பு மற்றும் வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை போன்ற நிறுவகங்களுடன் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான ஒருங்கிணைப்புக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2. 2014 ஆம் ஆண்டு தொடர்பாக அமைச்சு மற்றும் உரிய நிறுவனங்களுடன் செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தலுக்கான முன் வேலைத்திட்டத்தினை நடாத்துதல் மற்றும் அச்செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

3. 2014 ஆம் ஆண்டு தொடர்பாக போக்குவரத்து அமைச்சு அலுவலகத்தில் அமுற்படுத்தப்படும் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் இணைந்த திட்டத்தினைத் தயாரித்தல் தொடர்பாக பங்களிப்பினை நல்குதல்.

4. அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் முன்னேற்ற மீளாய்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

5. மாவட்ட மட்டங்களில் நடாத்தப்படும் விசேட மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள்.·.கண்காணிப்புச் செயற்பாடுகள், ஏனைய வேலைத்திட்டங்களில் கலந்துகொள்ளல் மற்றும் போக்குவரத்து அமைச்சு தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக முன்னெடுக்கவுள்ள செயற்பாடுகளைத் தீர்மானித்தல்.

- ➢ 2014 ஆம் ஆண்டில் கலந்து கொண்ட மொத்த நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை – 10 (கொழும்பு, களுத்துறை, மன்னார், யாழ்ப்பாணம், மொனராகலை, மாத்தறை, குருனாகல், கண்டி)

6. 2014 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு மதிப்பீட்டினைத் தயாரித்தலுக்கு நிறுவனங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அதன் கலந்துரையாடல்களில் பங்குகொண்டு கணக்குகள் பிரிவுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

7. 50 மில்லியனுக்கு அதிகமான போக்குவரத்து அமைச்சின் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினைக் கண்காணித்தல், அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் நிதி அமைச்சுக்கு முன்வைத்தல்

- ➢ அமைச்சினூடாக - 2
- ➢ புகையிரதத் திணைக்களம் - 20
- ➢ இலங்கைப் போக்குவரத்துச் சபை - 2
- ➢ மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் - 3

8. பாராளுமன்ற பாதீட்டுக் குழுநிலை வாதத்திற்கு முன்வைப்பதற்கு முன்னேற்ற அறிக்கையினைத் தயாரித்து பாராளுமன்றத்திற்கு முன்வைத்தல்.

9. 2013 ஆம் ஆண்டின் இறுதியில் அமைச்சு அலுவலகத்தின் செயற்பாட்டு அறிக்கையினைத் தயாரித்து முன்வைத்தல்.

10. அமைச்சரவையினூடாக வெளிப் பங்குதாரர்களினால் முன்வைக்கப்பட்ட கருத்திட்டங்கள் (Unsolicited Project Proposals) தொடர்பாக தேசிய திட்டமிடற் திணைக்களம், வெளிநாட்டு வளத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி மற்றும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள விசேடக் குழுவுடன் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளல், கலந்துரையாடல்களில் பங்கு கொள்ளல் மற்றும் உரிய ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

➢ 2014 ஆம் ஆண்டு தொடர்பாக 29 கருத்திட்டங்களின் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

11. போக்குவரத்து அமைச்சின் கொள்முதல்/தொழில்நுட்பக் குழுக் கூட்டங்களில் பங்குகொள்ளல் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

12. வெளிநாட்டு வளத் திணைக்களத்தினூடாக தொழில்நுட்ப உதவி அடிப்படையின் கீழ் அமைச்சுக்கு வழங்கப்படும் விசேட கற்கை ஆய்வுகள் மற்றும் அமைச்சினால் அடையாளங்காணப்பட்டு வரும் விசேட கருத்திட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

- உள், புற நகரங்கள் மற்றும் சூழவுள்ள பிரதேசங்களில் உரிய பிரதான போக்குவரத்து திட்டமொன்றைத் தயாரித்தல் (Urban transport System Development project for Colombo metropolitan region and suburb)

- Monorail தொடர்பாக சாத்தியவளக் கற்கை ஆய்வினை மேற்கொள்ளல்.

- காலி பிரதான வீதியின் மொரட்டுவ வரையான BRT தொடர்பாக மொரட்டுவப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து சாத்தியவளக் கற்கை ஆய்வினை மேற்கொள்ளல்.

- தொழில்நுட்ப ஒத்துழைப்பின் கீழ் வீதிப் பாதுகாப்புத் தொடர்பான வேலைத்திட்டமொன்றை ஒருங்கிணைத்தல் (Road Safety TA)

- முழு நாட்டுக்குமான போக்குவரத்துத் திட்டமான தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

13. போக்குவரத்துஅமைச்சுக்குரிய இணையத்தளத்தினை அன்றாடம் நாளதுவரைப்படுத்துதல்.

14. தேசிய தகவல் மையம் (1919) மற்றும் ICTA நிறுவனத்துடன் இணைந்து போக்குவரத்து அமைச்சுக்கு உரித்தான தகவல்களைப் பரிமாறுதல் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக விரைவில் மறுமொழிகளை முன்வைத்தல்

15. ஏனைய நேர்வரிசை அமைச்சுக்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களினால் செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான உரிய கூட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களில் கலந்துகொண்டு தேவையான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

- இதில் வீதி அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, கொழும்பு மாநகர சபை, சுற்றாடல் அமைச்சு போன்ற பல்வேறான நிறுவனங்களின் பல நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல் இடம்பெற்றுள்ளன. 2014 ஆம் ஆண்டில் கலந்து கொண்ட மொத்த நிகழ்ச்சித் திட்டங்கள்.'.வேலைப்

பட்டறைகள்/கலந்துரையாடல்களின் எண்ணிக்கை 156 ஆகும்.

- தேசிய இடர் பாதுகாப்பு அமுறப்படுத்துகைத் திட்டம்
- முதுமையுடன் தொடர்பான தேசிய அமுறப்படுத்துகைத் திட்டம்
- காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுக்கும்போது முன் ஆயத்தத் தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்கின்ற வேலைத்திட்டம்.
- தேசிய வைத்தியசாலை சதுக்கத்தின் மேம்பாட்டு வேலைத்திட்டம்
- அங்கவீனமுற்ற நபர்களுக்கான சமுதாய அடிப்படை நிகழ்ச்சித் திட்டம். நுகர்வு நலன்புரி தொடர்பான தேசியக் கொள்கை வரைவொன்றைத் தயாரித்தல்.
- தேசிய அபிவிருத்திக் கொள்கைகளுக்கமைவாகப் பயன்களை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம்.
- வலுவினை மேம்படுத்துவதற்கான கருத்திடடம்
- ஆற்றல்களைப் பல்வேறு முறைமைகளில் மேம்படுத்துவதற்கான கருத்திட்டம்
- தேசிய மனித வள மற்றும் தொழிற் கொள்கைகளை அமுறப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்.
- பிள்ளைகளின் சிநேகபூர்வ பாடசாலைகள் கல்வியின் தரத்தினை உயர்த்தும் பல பிரிவுகளுடனான வேலைத்திட்டம்.
- மனித உரிமைகள் தொடர்பாக உள்ளக அமைச்சின் செயற் குழு

16. இலங்கைப் போக்குவரத்து சபை மற்றும் பிரத்தியேகப் பேரூந்துக்களின் ஓட்டங்களை இணைத்து, நேர அட்டவணையின் பிரகாரம் இடம்பெறுவதற்கு உரிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

17. அலுவலகத்திலுள்ள பழைய ஆவணக் கோவைகளுக்கான பேரேட்டினை முறையாகத் தயாரித்தல் மற்றும் ஆவணக் கோவைகளைப் புதுப்பித்தல்.

18. போக்குவரத்து அமைச்சில் நூலகமொன்றை முன்னெடுத்துச் செல்லல்.

19. வடக்குப் புகையிரத மீள் அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு உரிய கருத்திட்ட அலுவலகங்களை ஒருங்கிணைப்புச் செய்து அக்கருத்திட்டங்களை அமுறப்படுத்தும் பணிகள் தொடர்பக பின் தொடர் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

20. இலங்கையின் உள் மற்றும் புற நகரங்கள் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களின் போக்குவரத்துத் துறைகளின் தீர்வாகும் நிலக்கரிப் புகையினைக் குறைக்கின்ற

திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு உலக வங்கியுடன் இணைந்து Colombo Low Carbon Urban Transport Study என்ற கருத்திட்டத்தினை ஆரம்பித்தல்.

21. தெற்கு அதிவேக மார்க்கத்தினை கொழும்பினை நோக்கி விரிவுபடுத்துவதற்கு பெருந்தெருக்கள் அமைச்சின் கருத்திட்ட செயற்குழுவினை பிரதிநிதித்துவப்படுத்துதல்.

22. சுற்றாடல் அமைச்சு இணைந்து பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல்.

- Nationally Appropriate Mitigation Action Plan on Transport Sector (NAMAS)
- வளிமண்டல நிலைமை முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச வேலைத்திட்டம் மற்றும் சூழல் நிலைபேறான போக்குவரத்துத் தொடர்பான ஆசியப் பிராந்தியங்களுக்கிடையேயான கருத்தரங்கு (BAQ & EST Conference)

23. இலங்கை அரசினால் அனுசரணை காட்டப்பட்டு வரும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.

- Commonwealth Heads of Government Meeting (CHOGM)
- கௌரவப் பாப்பரசரின் இலங்கை விஜயம்
- SAARC/UNESCAP போன்ற சர்வதேச மகாநாடுகளுக்கு, உரிய போக்குவரத்துத் துறையில் இலங்கையினைப் பிரதிநிதித்துவத்திற்கான பணிகள் இடம்பெறுதல்.

24. அமைச்சின் நிறுவனங்களுக்குரிய தரவு முறைமையினை முன்னெடுத்துச் செல்லல்.

25. அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களிற் கலந்துகொள்ளல் மற்றும் தீர்மானங்களை அமுற்படுத்தும் பின்னூட்டற் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

26. கருத்திட்டங்களுடன் தொடர்புடைய விசேட கற்கை ஆய்வுச் சுற்றுலாக்களைத் திட்டமிடல் மற்றும் அமுற்படுத்துதல்.

27. அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் மற்றும் கௌரவ அமைச்சரின் செய்திகளை முன்வைத்தல்.

28. வெளிநாட்டுப் பயிற்சி பாடநெறிகள் தொடர்பாகக் கலந்துகொள்ளும் உத்தியோகத்தர்களின் கற்கை ஆய்வினை முன்வைத்தல், ஒருங்கிணைத்தல்.

29. பல்வேறான நிறுவனங்கள்.'.அமைப்புக்களினூடாக இடம்பெற்று நிறைவடைதல் மற்றும் சேவைகள் தொடர்பாக முன்வைத்தல், ஒருங்கிணைப்புச் செய்தல் (2014 ஆம் ஆண்டினுள் 56 வரையான முன்வைத்தல்களுக்கு ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

## 5. 2014 ஆம் ஆண்டின்போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் நிறைவேற்றப்பட்டுள்ள புலனாய்வுக் கடமை தொடர்பான விபரப் பொழிப்பு.

| | நிறுவனம் | இடம்பெற்ற ஆய்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1) | போக்குவரத்து அமைச்சு | 08 |
| 2) | இலங்கைப் போக்குவரத்துச் சபை | 05 |
| 3) | புகையிரதத் திணைக்களம் | 01 |
| 4) | தேசியப் போக்குவரத்து வைத்திய நிறுவகம் | 04 |
| 5) | லக்திவ பொறியியலாளர் நிறுவனம் | 03 |
| 6) | வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை | 01 |

## 6. புதிய புகையிரத வீதிகள் அபிவிருத்திப் பிரிவு

வினைத்திறன் மற்றும் இலாபகரமான போக்குவரத்துச் சேவையொன்றை வழங்குவதற்காக நிலைபேறான தேசியப் போக்குவரத்துக் கொள்கையொன்றைக் கட்டியெழுப்புவதன் தேவைப்பாட்டினை அடையாளங்காண்பதனூடாகப் பொதுப் போக்குவரத்திற்கு முன்னுரிமையளிப்பதுடன், தற்போது அதிகமாக பெருந்தெருக்கள் முறைமையினூடாக இடம்பெறுகின்ற பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து புகையிரத சேவைகளுக்கு பாதுகாப்பை வழங்கும் எதிர்பார்ப்புடன் ஆரம்பிக்கப்பட்ட புகையிரத வீதிகள் முறைமையினை மேம்படுத்தி நவீன புகையிரத வீதிகளை நிர்மாணிப்பதனூடாக நாட்டின் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கக்கூடிய வகையில் புகையிரத முறைமையொன்றை விரிவுபடுத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

**அதன் பிரகாரம் பிரேரிக்கப்பட்ட புதிய புகையிரத வீதிகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு**

| | | மதிப்பிடப்பட்ட செலவு (அ.டொ.மி.) | கருத்திட்டத்தின் கால வரையறை |
|---|---|---|---|
| 01 | மாத்தறை – கதிர்காமம் புதிய புகையிரத வீதி (கி.மீ. 115) | 600 | 2006-2019 |
| 02 | குருனாகல் - கபரணை புதிய புகையிரத வீதி (கி.மீ. 80) | 225 | 2010-2016 |
| 03 | அவிசாவளை – ஹம்பாந்தோட்டை புதிய புகையிரத வீதி (கி.மீ. 225) | 375 | 2009-2016 |
| 04 | பாணந்துறை – கொறணை புதிய புகையிரத வீதி (கி.மீ. ) | 53 | 2013-2017 |

அதற்கு மேலதிகமாக பின்வரும் புதிய புகையிரத வீதிகளை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப ஆய்வு நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்காக 2014 ஆம் ஆண்டுக்கு பின்வருமாறு ஒதுக்கீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

1. மதவாச்சி – திருகோணமலை - ஒதுக்கீடு ரூபா. 10 மில்லியன்

2. வெல்லவாய, பிபில ஊடாக பதுளை - ஒதுக்கீடு ரூபா. 10 மில்லியன்

3. திருகோணமலை, மகவ ஊடாக புத்தளம் - ஒதுக்கீடு ரூபா. 05 மில்லியன்

### 6.1 மாத்தறை – கதிர்காமம் புதிய புகையிரத வீதி

பின்வருமாறு மூன்று கட்டங்களின் கீழ் நிர்மாணிப்பு நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு பிரேரிக்கப்பட்ட இவ் வீதியின் முழுமையான நீளம் 115 கி.மீ. ஆகும்.

| | கட்டங்கள் | தூர அளவு (கி.மீ) |
|---|---|---|
| I. | மாத்தறையிலிருந்து பெலிஅத்த வரை | 27 |
| II. | பெலிஅத்தவிலிருந்து ஹம்பாந்தோட்டை வரை | 48 |
| III. | ஹம்பாந்தோட்டையிலிருந்து கதிர்காமம் வரை | 40 |

இக்கருத்திட்டத்தின கீழ் தற்போது நிறைவு செய்யப்பட்ட செயற்பாடுகள்

- மாத்தறை நில்வள கங்கையினூடாக 100 மீற்றர் நீளத்தினைக் கொண்ட பாலமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதன் உட்கட்டமைப்பு அரசப் பொறியியலாளர் சபையினூடாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், பாகங்கள் ஒஸ்ரியாவிலிருந்து இறக்குமதி செய்து பொருத்தப்பட்டுள்ளது. பாலத்திற்காக செலவு செய்யப்பட்ட மொத்தப் பணம் ஷரூபா 263 மில்லியனாகும்.

- சூழற் காரணிகளை மதிப்பிடும் (நுஜயு) அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மாத்தறையிலிருந்து பெலிஅத்த வரையான பகுதிக்கு உரிய அறிக்கை நாளதுவரைப்படுத்தப்பட்டுள்ளது.

- புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் தொல்பொருளியலை மதிப்பிடுகின்ற நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- முதலாவது கட்டத்தின் கீழ் புகையிரத வீதியினை நிர்மாணித்தல், மீளக் குடியேற்றுகின்ற நடவடிக்கைகள் மற்றும் மாற்று உட்புகும் வீதிகளை நிர்மாணிப்பதற்கு 92.752 கெக்டயர் அளவினைக் கொண்ட காணி சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன் அகற்றப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை 185 ஆகும்.

- ஒப்படைக்கப்பட்டுள்ள காணி (துண்டுகளின் எண்ணிக்கை 1507) - 96.0017 கெக்டயர்
- புகையிரத மார்க்கத்திற்காக சுவீகரிக்கப்பட்டுள்ள காணி - 83.6871 கெக்டயர்
- மீளவும் குடியேற்றுவதற்காக சுவீகரிக்கப்பட்டுள்ள காணி - 8.6388 கெக்டயர்
- மாற்று வீதியினை நிர்மாணிப்பதற்காக சுவீகரிக்கப்பட்டுள்ள காணி - 3.6758 கெக்டயர் (தியகக மொட்டாகெதர வீதி, தெல்கல்ல வீதி, தேவானந்த வீதி)

- ஏனைய நிர்மாணிப்புக்காக சுவீகரிக்கப்பட்டுள்ள காணி - 1.3609 கெக்டயர்

- மீளக் குடியேற்றுதல் நடவடிக்கைகளுக்காக 10 மாற்று காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன் 179 பேர்களுக்கு காணித்துண்டு வழங்கப்பட்டுள்ளது. உரிய காணிகளில் 39 வீடுகளின் நிர்மாணிப்புப் பணிகள் நிறைவு பெற்றுள்ளதுடன் மேலும் 04 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன

**மாற்று நிலத்தினை சுவீகரித்தல், அபிவிருத்தியினை மேற்கொள்ளல் மற்றும் பகிர்ந்தளித்தல்.**

| நிலத்தின் (காணி) பெயர் | நிலத்துண்டு களின் எண்ணிக்கை | பகிர்ந்தளிக் கப்பட்டுள்ள நிலத் துண்டுகளின் எண்ணிக்கை | இடம்பெற்ற அபிவிருத்திப் பணிகள் | நிர்மாணிக் கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | நிர்மாணிக் கப்பட்டு வருகின்ற வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| பள்ளியகுறுகே வத்தை | 35 | 27 | a | 13 | 01 |
| சில்வடெல் வத்தை | 25 | 17 | b | 04 | 01 |
| ஆச்சாரிகே வத்தை | 43 | 25 | b | - | - |
| தங்கக வத்தை | 12 | 12 | b | - | - |
| பாளுவத்தை | 53 | 53 | b | 18 | 01 |
| சன்னாசிகே வத்தை | 25 | 20 | a | 01 | - |
| கறகககேன | 26 | 10 | a | 03 | 01 |
| பண்சல காவ வத்தை | - | - | - | - | - |
| மகதெகர வத்தை | 9 | 9 | b | - | - |
| றுக்அத்தனககவத்தை | 13 | 6 | b | - | - |

a - வீதி தயாரிக்கப்பட்டு கொங்கிரிட் இடப்பட்டுள்ளது
b - நுழைவு வாயில்களின் ஆரம்பப் பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
c - நிலம் சுத்தஞ் செய்யப்பட்டுள்ளது.
d - அபிவிருத்தி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது
e - அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

- புகையிரத வீதியினை நிர்மாணிப்பதனால் அழிந்துபோகின்ற பொதுக் கட்டிடங்கள் மற்றும் வணக்க ஸ்தலங்களுக்காக மாற்றுக் கட்டிடங்களை நிர்மாணித்தல்

a) சிறிபவக விஜயராம விகாரை - ரூ.8.5 மி
b) வலஸ்கல களிமண் தொழிற்சாலை - ரூ.9.0 மி
c) வவிதத்த கனிஸ்ட பாடசாலைக் கட்டிடம்
d) வவிறுகன்னல கனிஸ்ட பாடசாலைக் கட்டிடம் } - ரூ. 8.0மி
e) சமுர்த்திக் கட்டிடம், வவிறுகன்னல்ல - ரூ. 9.6 மி

(a–e) பணிநிறைவு

- முதலாவது கட்டத்தின் நிர்மாணப் பணிகளுக்காக 2013.12.09 ஆந் திகதி சீனாவின் CMC நிறுவனத்துடன் கடன் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளதுடன் தேவையான ஒதுக்கீடு கடன் முறைமையின் கீழ் சீனாவின் எக்சிம் வங்கியிலிருந்து பெறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2013.08.01 ஆந் திகதி சீனாவின் CMC நிறுவனத்தினால் புகையிரதக் கருத்திட்டத்தின் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பின்வரும் நிர்மாணச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

**கருத்திட்டத்தின் கீழ் தற்போது இடம்பெற்று வருகின்ற நடவடிக்கைகள்.**

மாத்தறையிலிருந்து பெலிஅத்த வரையான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் புகையிரத வீதியின் நீளம் 26.75 கி.மீ. ஆகும். 2014.12.31 ஆந் திகதி வரையில் கருத்திட்டத்தின் நிர்மாணிப்புக்கு முன்மொழியப்பட்ட பௌதிக முன்னேற்றம் 31.28மூ ஆகும். அவ்வருட நிறைவில் எட்டப்பட்டுள்ள பௌதிக முன்னேற்றம் 31.28% ஆகும். பிரிவுகளாக எடுத்து நோக்குகையில் அக்கருத்திட்ட நிர்மாணப் பணிகள் வருமாறு.

| முன்மொழியப்பட்ட பணிகள் | நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட அளவு % | நிர்மாணிக்கப்பட்ட அளவு % |
|---|---|---|
| **(டீ.கே.0+044~ டீ.கே.10+425)** | | |
| • சிறு பாலங்களை நிர்மாணிக்கும் செயற்பாடுகள் | 58% | 58% |
| • புகையிரத வீதியினை நிர்மாணிப்பதற்கு குறுக்கு கடவைகளைத் தயாரித்தல். | 24% | 24% |
| • புகையிரதப் பாலங்களை நிர்மாணித்தல் | 15% | 15% |
| • நாகட்டியப் புகையிரதச் சுரங்கப் பாதையினை நிர்மாணித்தல் (606 மீ) | 25% | 25% |
| **(டீ.கே.10+425~ டீ.கே.19+840)** | | |
| • சிறு பாலங்களை நிர்மாணிக்கும் செயற்பாடுகள் | 63% | 63% |
| • புகையிரத வீதியினை நிர்மாணிப்பதற்கு குறுக்கு கடவைகளைத் தயாரித்தல். | 14% | 14% |
| • புகையிரதப் பாலங்களை நிர்மாணித்தல். | 16% | 16% |
| • நாகட்டியப் புகையிரதச் சுரங்கப் பாதையினை நிர்மாணித்தல் | 35% | 35% |
| **(டீ.கே.19+840~ டீகே.26+461)** | | |
| • சிறு பாலங்களை நிர்மாணிக்கும் செயற்பாடுகள் | 65% | 65% |
| • புகையிரத வீதியினை நிர்மாணிப்பதற்கு குறுக்கு கடவைகளைத் தயாரித்தல். | 25% | 25% |
| • புகையிரதப் பாலங்களை நிர்மாணித்தல். | 6% | 6% |

**நிதிசார் முன்னேற்றம்**

இக்கருத்திட்டம் தொடர்பாக 2014 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட வெளிநாட்டு நிதயின் அளவு ரூபா. 15,146,512,000.00 ஆகும். உள்நாட்டு நிதியாக ஒதுக்கப்பட்ட அளவு ஷரூபா. 338,100,000.00 ஆகும். 2014.12.31 ஆந் திகதி வரையில் வெளிநாட்டு ரீதியில் ஒதுக்கப்பட்ட நிதி ரூபா. 8,885,613,880.50 செச செலவு செய்யப்பட்டுள்ளதுடன் அது மொத்த வெளிநாட்டு ஒதுக்கீடுகளின் 58% ஆகும். ஒதுக்கப்பட்ட உள்நாட்டு நிதியில், 2014.12.31 ஆந் திகதி வரையில் செலவு செய்யப்பட்ட நிதி ஷரூபா. 121,184,992.47 ஆகும். அது சதவீதத்தில் 35% ஆகும்.

## 6.2 களனிப் பள்ளத்தாக்குப் புகையிரத வீதியினை கம்பாந்தோட்டை வரை நீடிப்புச் செய்தல்.

முன்மொழியப்பட்ட இப்புகையிரத வீதியின் நீளம் 225 கி.மீ. ஆகும். சாத்தியவள சூழல் மதிப்பீட்டு ஆய்வினை மேற்கொள்ளும் ஒப்பந்தம் 2008.04.8 ஆந் திகதி மொரட்டுவப் பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வு மொரட்டுவப் பல்கலைக்கழகத்தினால் இடம்பெற்று வருவதுடன், அது நீண்டகாலத் தாமதத்தின் காரணமாக கருத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள ஷரூபா. 5 மில்லியன் நிதி முழுமையாக மீதியாகியுள்ளது.

## 6.3 குருனாகல் – கபரணை புதிய புகையிரத வீதி

முன்மொழியப்பட்ட இவ் வீதியின் மொத்த நீளம் 80 கீலோ மீற்றராகும். இப்புதிய புகையிரத வீதி தொடர்பான சாத்தியவள ஆய்வு, பொறியியலாளர் பணி தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகத்தினால் (ஊநுஊடீ) இடம்பெற்று வருகின்றது. கருத்திட்டம் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு தேவையான சூழல் மதிப்பீட்டு அறிக்கையினைத் தயாரித்தல் தொடர்பாகத் திறந்த விலைமனுக் கோரலினைக் கோருவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்குத் தேவைப்படும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு தற்போது நியமிக்கப்பட்டுள்ளது.

சூழல் மற்றும் சமூக மதிப்பீட்டு ஆய்வுக்கு, முன்மொழியப்பட்ட புகையிரத வீதியினை நிர்மாணிப்பதற்கு இனங்காணப்பட்டுள்ள 100 மீற்றர் அகல நிலப்பகுதியின் மத்திய கோடு அளவையாளர் திணைக்களத்தினூடாக புள்ளியிடப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு தொடர்பாக ஷரூபா. 5 மில்லியன் ஒதுக்கீடு இக் கருத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டு இருந்ததுடன், ஷரூபா. 508,161 நிதி மத்திய கோட்டினைப் புள்ளியிடுவதற்காக அளவையாளர் திணைக்களத்திற்கும் மற்றும் அரச பொறியியலாளர்கள் அமைப்புக்கும் வழங்கப்பட்டுள்ளன.

சூழல் மதிப்பீட்டு அறிக்கையினைத் தயாரிப்பதற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு மீதியாகியுள்ளது.

## 6.4 கொறண – கொட்டாவ புதிய புகையிரத வீதி

கொறண பாணந்துறை புதிய புகையிரத வீதியின் சாத்தியவள ஆய்வு மொரட்டுவப் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டு இறுதி அறிக்கை 2013 நவம்பர் மாதம் கையளிக்கப்பட்டுள்ளது. அவ் ஆய்வு அறிக்கையின் பிரகாரம் இனங்காணப்பட்ட 03 மாற்றுவழிகளுக்கு கற்கை ஆய்வு இடம்பெற்றுள்ளது. அவை, கொரண – பாணந்துறை, கொறண - இரத்மலானை, கொறண – கொட்டாவ ஆகும். கொரண - கொட்டாவ வீதியே அதில் சாத்தியமாக உள்ளது. முன்மொழியப்பட்ட இப் புகையிரத வீதியினை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று 2013.07.30 ஆந் திகதியன்று முன்வைக்கப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட புகையிரத வீதியினை நிர்மாணிப்பதற்கு முன்னர், பிரதேசத்தின் பெருந் தெருக்களைக் கவனத்திற் கொண்டு ஒட்டுமொத்த பிரதான போக்குவரத்துத் திட்டமொன்றை தயாரித்து அமைச்சரவைக்கு முன்வைக்கப்படுதல் வேண்டும் என அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டது. போக்குவரத்து அமைச்சின் ஜய்கா நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் கொறண கொட்டாவவை உள்ளடக்கி கொழும்பு நகத்திற்குத் தொடர்பான பிரதேசங்களுக்கு ஒட்டுமொத்தத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அத் திட்டத்தின் பிரகாரம் கொரண நகரத்தினை பெருந்தெருக்களால் மாத்திரம் கொழும்புக்குத் தொடர்புபடுத்துவதற்கு முன்மொழியப்பட்டது. 2014 ஆம் ஆண்டு தொடர்பாக இக்கருத்திட்டத்திற்கு ஷரூபா. 6 மில்லியன் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளதுடன் எதிர்பார்க்கப்பட்டவாறு கருத்திட்டப்பணிகள் இடம்பெறாமையின் காரணமாக திருத்தப்பட்ட மதிப்பீட்டினூடாக இம்மொத்த ஒதுக்கீடு அகற்றப்பட்டுள்ளது.

## 6.5 மதவாச்சி – திருகோணமலை வரை புதிய புகையிரத வீதியினை நிர்மாணித்தல்.

முன்மொழியப்பட்ட இப்புக்கையிரத வீதியின் சாத்திவள கற்கை ஆய்வுப் பணிகள், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மனிதவள முகாமைத்துவ நிறுவனத்தினால் இடம்பெற்றுள்ளதுடன் இறுதி அறிக்கையின் ஆங்கில மொழிப் பிரதி மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. சூழல் மதிப்பீட்டு ஆய்வு ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் இறுதி அறிக்கையின் சிங்கள மற்றும் தமிழ் மொழி பிரதிகள் கிடைக்கப் பெறும் வரையில், அதற்கான இறுதிப் கொடுப்பனவாக ஷரூபா. 4.7 மில்லியன் நிதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் 2014 ஆம் ஆண்டுக்கு இக்கருத்திட்டம் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள பணம் ஷரூபா. 15 மில்லியனில் மேலும் ஷரூபா. 10.3 மில்லியன் நிதி மீதியாகியுள்ளது. இப்புகையிரத வீதியினை நிர்மாணிக்கும் தேவைப்பாடு அதே போல அது அத்தியாவசியமானதா என்பது தொடர்பான அதன் சூழல்சார் சாத்திய வளக் கற்கை ஆய்வினை ஆழமாக முன்னெடுத்தல் வேண்டும்.

## 6.6 வெல்லவாய,பிபில ஊடாக பதுளை வரையில் புதிய புகையிரத வீதியினை நிர்மாணித்தல்.

இப்புதிய புகையிரத வீதி அம்பிலிபிட்டிய, மொனராகலை, அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் கதிர்காமத்தினை ஒன்றிணைத்து புதிய புகையிரத வலைப்பின்னலொன்றை நிர்மாணிப்பதற்கு முன் சாத்தியவள கற்கை ஆய்வுப் பணியினை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் பொறியியலாளர்கள் தொடர்பாக மத்திய ஆலோசனைப் பணியகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன், இற்றை வரையில் இடைக்கால அறிக்கை பெறப்பட்டுள்ளது. இவ்வறிக்கைக்கு அமைய இனங்காணப்பட்ட

வீதிகள் தொடர்பாக முன்வைத்தல் (Presentation) 2014 திசம்பர் மாதம் அவர்களால் இடம்பெற்றுள்ளது. அதில் முன்மொழியப்பட்ட புகையிரத வீதியின் மத்திய கோடு தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன், இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்குக் கவனத்தினைச் செலுத்தி இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. அவ் அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர் சூழலிற் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் தொடர்பான ஆய்வினை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு தொடர்பாக ஒதுக்கீடாக ஷரூபா. 10 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் ஆரம்ப அறிக்கைக்காக ஷரூபா. 436,735 பணம் வழங்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. இடைக்கால அறிக்கைக்காக கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பணமாக ஷரூபா.1.3 மில்லியனை வழங்குவதற்கு, உரிய பரிந்துரைகள் மற்றும் சான்றிதழுடன் கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு, அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு போக்குவரத்து அமைச்சு செயலாளருக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

### 6.7 மகவ ஊடாக புத்தளம் வரையான புதிய புகையிரத வீதியினை நிர்மாணித்தல் (திருகோணமலை, மகவ, புத்தள நகரத்தினை இணைப்பதற்கு)

முன்மொழியப்பட்ட இப்புகையிரத வீதியின், முன்னரான சாத்திய வள ஆய்வுச் செயற்பாடுகள் அமைச்சு மற்றும் புகையிரதத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களினால் இடம்பெற்று நிறைவு செய்யப்பட்டுள்ளது. விபரத்துடனான சாத்திய வள ஆய்வுப் பணியினை அமைச்சு மற்றும் புகையிரதத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களூடாக இடம்பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. இக்கருத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டுனை உபயோகித்து தேவையான உபகரணங்களை பெற்றுத் தரம்படி கொள்முதல் பிரிவுக்கு வேண்டுகோள் விடுத்தும் இற்றை வரையில் வழங்கப்படவில்லை. இக் கருத்திட்டத்திற்கு 2014 ஆம் ஆண்டு தொடர்பாக ஒதுக்கீடாக ஷரூபா. 5 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சு உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களினால் முன்னரான சாத்தியவள ஆய்வுப் பணிகள் இடம்பெறுவதன் காரணமாக இவ்வொதுக்கீட்டினை வெளியாருக்குச் செலவு செய்யாததால் மீதியாகியது.

## 7. வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை

### 7.1 அறிமுகம்

1998 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க மோட்டார் வாகன திருத்தச் சட்டத்தினூடாக வீதிப் பாதுகாப்புக்கான தேசிய சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அது பிரதான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட தவிசாளர் மற்றும் வீதிப் பாதுகாப்புடன் தொடர்புபட்ட அமைப்புக்களிலுருந்து 17 அங்கத்தவர்களையும் உள்ளடக்குகின்றது

மோட்டார் வாகனச் சட்டத்தின் 213 அ பிரிவில் இச்சபையின் கடமைப் பொறுப்பு காட்டப்பட்டுள்ளதுடன் 213 ஆ பிரிவினூடாக "வீதிப் பாதுகாப்பு நிதியம்" ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்நிதியத்திற்கு பாதுகாப்புச் சபை தமது மூன்றாவது கட்சியினரின் காப்புறுதித் தவணைக் கட்டணங்களிலிருந்து 1 % ஐ பங்களிப்புச் செய்கின்றது.

**தொலைநோக்கு**

''அனைவருக்கும் பாதுகாப்பான வீதிகள்''

**குறிக்கோள்**

''வீதி விபத்துக்களற்ற ஒரு சமுதாயத்தினை உருவாக்குதல்''

## 7.2 வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் கடமைப் பொறுப்புக்கள்.

- அடையாளங்காணப்படாத வாகனங்களினால் விபத்துக்குட்பட்ட நபர்களுக்கு இழப்பீடுகள் வழங்குதல்.
- வீதிப் பாதுகாப்புத் தொடர்பான கருத்திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் செயற்பாட்டினை மேம்படுத்தல்.
- அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களினுள் வீதிப் பாதுகாப்பு மற்றும் தொடர்புபட்ட பணியினை ஒருங்கிணைத்தல்.
- வீதிப் பாதுகாப்புத் தொடர்பான பணிகளுக்கு நிதிசார் உதவிகள் மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல்.
- வீதிப் பாதுகாப்புடன் தொடர்புபட்ட கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாக அரசுக்கு ஆலோசனைகளை வழங்குதல்.
- சமமான சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்பினை முன்னெடுத்துச் செல்லல் மற்றும் அனுபவங்கள் தொடர்பாக அறிவினைப் பகிர்ந்து கொள்ளுதல்.
- தொடர்புபட்ட விடயங்கள் சம்பந்தமான தகவல்களைத் திரட்டுதல், புலனாய்வினை நடாத்துதல் மற்றும் களத்துறை ஆய்வினை முன்னெடுத்தல்.
- வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தரவுக் கழஞ்சியமொன்றை முன்னெடுத்துச் செல்லல்.
- வீதிப் பாதுகாப்பு விடயத்திற்குரித்தான புத்தகங்களுடன்கூடிய நூலகமொன்றை ஆரம்பித்தல்.

## 7.3 2014 ஆம் ஆண்டினுள் வீதிப் பாதுக்காப்புத் தொடர்பான தேசிய சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்.

**1. இனங்காணப்படாத வாகனங்களினால் விபத்துக்குள்ளான நபர்களுக்கான இழப்பீட்டு பிரேரணை முறைமை**

- மோட்டார் வாகனச் சட்டத்தின் 213 அ பிரிவினூடாக காட்டப்பட்டுள்ள வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் பிரதான பணியான இந்த இழப்பீட்டுப் பிரேரணை முறைமையினூடாக அடையாளங்காணப்படாத வாகன விபத்துக்களில் காயம் ஏற்பட்ட நபர் ஒருவருக்கு ஷரூபா. 75000.∴- பணமும், மரணித்த நபரொருவரின் சட்டரீதியான தங்கிவாழ்கின்ற ஒருவருக்கு ஷரூபா. 1000,000.∴- பணமும் இழப்பீடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- 2014 ஆம் ஆண்டு தொடர்பாக அடையாளங் காணப்படாத வாகன விபத்துக்களால் மரணத்தைத் தழுவிய நபர்கள் மற்றும் காயமடைந்த நபர்களுக்கஞ ஷரூபா. 1,695,000 பணம் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

- அடையாளங் காணப்படாத வாகன விபத்துக்கள் தொடர்பாகப் பொதுமக்களை விழிப்புணர்வூட்டுவதற்கு அனைத்துப் பொலிஸ் நிலையங்கள், பிரதேச செயலகங்களில் இழப்பீட்டுப் பதாதைகளைக் காட்சிப்படுத்துதல்.

- கடந்த வருடங்களினுள் பாவிக்கப்பட்ட இழப்பீடு தொடர்பான விண்ணப்பப் படிவம் திருத்தப்பட்டு புதிய விண்ணப்பப் படிவம் அச்சிடுதல் இடம்பெற்றுள்ளது.

- 2014.08.15 ஆந் திகதி இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் நடாத்தப்பட்ட மாவட்ட செயலகக் கூட்டத்தில் அடையாளங் காணப்படாத வாகன விபத்துக்கள் தொடர்பாக இழப்பீடு வழங்கும் பிரேரணைத் திட்டம் தொடர்பாக பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் பதாதைகள், அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் காட்சிப்படுத்தப்படுவதற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

**2. வீதிப் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுஸீட்டும் வேலைத்திட்டங்களை நடாத்துதல்.**

➢ வீதி விபத்துக்களைத் தடுப்பது தொடர்பாகப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டம்.

- 2014.01.31 ஆந் திகதி வீதி விபத்துக்களைக் குறைத்தல் தொடர்பாக பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம் பண்டாரவளை மத்திய மகா வித்தியாலயத்தில் நடாத்தப்படுதல்.

- 2014.03.17 ஆந் திகதி பொலன்னறுவை றோயல் மத்திய மகா வித்தியாலயத்தில் வீதி விபத்துக்களைத் தடுத்தல் மற்றும் வீதி விபத்துக்களின் பின்னர் வழங்கப்பட வேண்டிய சரியான முதலுதவித் திட்டம் தொடர்பாகப் பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டுதல்.

- 2014.03.31 ஆந் திகதி கண்டி சில்வெஸ்தர வித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துதல்.

- 2014.06.11 ஆந் திகதி கொழும்பு சட்டக் கல்லூரியின் சட்டத்துறை மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டுதல்.

- 2014.07.21 ஆந் திகதி மத்திய மாகாணப் பாதுகாப்பு வாரம் அமுற்படுத்தப்பட்டுள்ளதுடன் 2014.07.24 ஆந் திகதி கண்டி அறுப்பல தொழில்நுட்ப வித்தியாலயத்தில் வீதி விபத்துக்களைத் தடுத்தல் தொடர்பாகப் பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டுதல்.

- 2014.09.12 ஆந் திகதி பொலன்னறுவை கிருரக்கொட ரஜரட்ட மகா வித்தியாலயத்தின் மாணவர்களை விழிப்புணர்வூட்டுதல்.

- 2014.10.14 ஆந் திகதி வாகனக் கட்டுப்பாடு மாணவ மாணவிகளை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம் சாந்த மரியா வித்தியாலயத்தில் நடாத்தப்படுதல்.

- 2014.10.20 ஆந் திகதி கண்டி உயர் மகளிர் வித்தியாலயத்தின் மாணவ மாணவிகளை விழிப்புணர்வூட்டுதல்.

- 2014.10.30 ஆந் திகதி தென் மாகாணம், வலிகம சித்தார்த்த வித்தியாலயத்தின் பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டுதல்.

- 2014.10.31 ஆந் திகதி பெலிஅத்த தங்கல்ல தொழில்நுட்பக் கல்லூரிகளின் கேட்போர் கூடங்களில் பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம்.

- 2014.11.21 ஆந் திகதி இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனத்தில் பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது.

- 2014.11.22 ஆந் திகதி எடெரமுல்ல பிரதிபா கல்வி நிறுவனத்தின் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம்.

➢ **அரச உத்தியோகத்தர்களை விழிப்புணர்வுஸீட்டுதல்.**

- 2014.01.23 ஆந் திகதி அரச உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொரண சமுர்த்திச் சங்க கேட்போர் கூடத்தில் சமுர்த்திக் கிராமச் சங்கத் தவிசாளர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டுதல்.

- 2014.02.12 ஆந் திகதி வாகன விபத்துக்களைத் தடுத்தலின் பின்னர் வழங்கப்பட வேண்டிய சரியான முதலுதவித் திட்டம் தொடர்பாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாரதிகள் மற்றும் நடத்துனர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம் நாரகென்பிட்ட பிரதான பயிற்சியளிக்கும் கேட்போர் கூடத்தில் நடாத்தப்படுதல்.

- 2014.04. 29 ஆந் திகதி வாகனப் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான வீதிப் பாதுகாப்புத் தொடர்பான பயிற்சி வேலைத்திட்டம் மொரட்டுவப் பல்கலைக்கழகத்தின் குடிசார் பொறியியலாளர் கேட்போர் கூடத்தில் நடாத்தப்படுதல்.

- மத்திய மாகாண வீதிப் பாதுகாப்பு வாரம் தொடர்பாக 2014.07.25 ஆந் திகதி கண்டி நவயாலதன்ன கூட்டுறவு வித்தியாலயத்தில் முப்படைச் சாரதிகள் மற்றும் அரச சாரதிகளை விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம் நடாத்தப்படுதல்.

- 2014.08.11 ஆந் திகதி வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் முதியோர் அமைப்புக்களின் அங்கத்தவர்களை விழிப்புணர்வூட்டுதல் மற்றும் வீதி வாகன விபத்துக்களின் பின்னர் வழங்கப்பட வேண்டிய சரியான முதலுதவித் திட்டம் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம் களுத்துறை மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறுதல்.

- 2014.08.23 ஆந் திகதி களுத்துறை பஸ்தும்பர கல்வியற் கல்லூரி கேட்போர் கூடத்தில் சமூக சேவைகள் உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூடும் நிகழ்ச்சித் திட்டம்.

- 2014.09.05 ஆந் திகதி அலரி மாளிகை ஜனாதிபதி செயலகத்தில் கடற்படைச் சாரதிகள், இராணுவச் சாரதிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்படுதல்.

- 2014.10.27 ஆந் திகதி அனைத்து மாகாணங்களிலும் புதிய நியமனங்களைப் பெற்ற சாரதிகளை விழிப்புணர்வூட்டுதல் மற்றும் வாகன விபத்துக்கள் ஏற்பட்டவேளையில் வழங்கப்பட வேண்டிய சரியான முதலுதவித் திட்டம் தொடர்பாகவும் மற்றும் வாகனங்களைச் செலுத்தும்வேளையில் பின்பற்றப்பட வேண்டிய சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சில் நடாத்தப்படுதல்.

- 2014.11.27 ஆந் திகதி சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம் குறுந்துவத்த ஐவுஜ நிறுவனத்தில் நடாத்தப்படுதல்.

➢ **முச்சக்கர வண்டிச் சாரதிகளை விழிப்புணர்வுஸீட்டுதல்.**

2014.01.03 ஆந் திகதி களுத்துறை மாவட்டத்தின் களுத்துறைப் பொலிஸ் தொகுதியிலுள்ள முச்சக்கர வண்டிச் சாரதிகள், அளுத்கம பொலிஸ் அதிகாரப் பிரதேசத்திலுள்ள முச்சக்கர வண்டிச் சாரதிகள், பாணந்துறைப் பொலிஸ் தொகுதியிலுள்ள முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கு வீதி விபத்துக்களைக் குறைத்தல் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம் நடாத்தப்பட்டுள்ளதுடன் அதில் பின்வரும் தலைப்புக்களின் கீழ் போதனைகள் இடம்பெற்றன.

- வீதி வாகன விபத்துக்களின் தன்மையும் மற்றும் அவற்றினைத் தடுப்பதிலுள்ள முக்கியத்துவமும்.

- வீதிச் சட்ட ஒழுங்குகளை அறிமுகஞ் செய்தல் மற்றும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய முறைமை.

- வீதி விபத்துக்களின் பின்னர் வழங்கப்பட வேண்டிய சரியான முதலுதவித் திட்டம்.

3. **வீதி விபத்துக்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம்.**

வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையினூடாக வீதி விபத்துக்களைத் குறைத்துக் கொள்ளல் தொடர்பாக 50,000 துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டுப் பகிர்ந்தளிக்கப்பட்டமை மற்றும் வீடியோவினூடாக வீதி விபத்துக்கள் இடம்பெறும் முறைமை காட்சிப்படுத்தப்பட்டமை.

4. **வீதிப் பாதுகாப்பு அலகினை நிறுவுதல்.**

➢ **வடமேல் மாகாண வீதிப் பாதுகாப்பினை நிறுவுதல்.**

- வடமேல் மாகாணப் பாதுகாப்பு அலகினை நிறுவுவதற்கான ஆரம்பக் கலந்துரையாடல் – 2014.04.01 ஆந் திகதி வடமேல் மாகாணப் போக்குவரத்து அமைச்சரின் தலைமையில் லிச்ஜவி மண்டபத்தில் நடாத்தப்பட்டமை.

- வட மேல் மாகாண வீதிப் பாதுகாப்புத் திட்டத்தினைத் தயாரிக்கும் வேலைத்திட்டம் - 2014.07.11 ஆந் திகதி வடமேல் மாகாண வீதி அபிவிருத்திப் போக்குவரத்து, மின்சக்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சர் குணதாஸ தெகிகம அவர்களின் தலைமையில் மகசெதர விடுமுறை விடுதியில் நடாத்தப்பட்டமை.

➢ **மேல் மாகாண வீதிகள் பாதுகாப்பு அலகினை ஸ்தாபித்தல்.**

2014.08.29 ஆந் திகதி மேல் மாகாண சபை பிரதம செயலகத்தில் வீதிகள் பாதுகாப்பு அலகினை ஸ்தாபித்தல் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டமை.

➢ **மத்திய மாகாண வீதிகள் பாதுகாப்பு அலகினை ஸ்தாபித்தல்.**

மத்திய மாகாண வீதிகள் பாதுகாப்பு அலகினை நிறுவும் ஆரம்பக் கலந்துரையாடல் 2014.05.19 ஆந் திகதி பல்லேகல புதிய மாகாணத் தொகுதியின் பிரதம செயலாளர் அலுவலகத்தில் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன் வேலைத்திட்டம் 2014.06.16 ஆந் திகதி மத்திய மாகாண போக்குவரத்து மின்சக்தி அமைச்சர் அவர்களின் தலைமையில் நவயாலதன்ன மாகாண சபைகள் பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டமை.

மத்திய மாகாண போக்குவரத்து வாரத்தினை அமுற்படுத்தும் ஆரம்ப வைபவத்தினை நடாத்துவதை ஒட்டி தினசரி லங்காதீப மற்றும் டெய்லி மிறர் செய்திப் பத்திரிகைகளில் அறிவித்தல்களை வெளியிடுதல் மற்றும் ஒளி நாடாக்களை வழங்குதல்.

5. **எதிரொளி விளக்கு ஸ்ரிக்கர்களை ஒட்டுகின்ற நாடளாவிய நிகழ்ச்சித் திட்டம்.**

துவிச்சக்கர வண்டிகளில் எதிரொளி விளக்கு ஸ்ரிக்கர்களை ஒட்டும் நாடளாவிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புத்தளத்திலிருந்து மாத்தறை வரையான 110 பொலிஸ் அதிகாரப் பிரதேசங்களினுள் அமுற்படுத்தப்பட்டுள்ளதுடன் 2014.04.11 ஆந் திகதி அதன் அங்குரார்ப்பண வைபவம் களுத்துறை மாவட்டத்தின் வாதுவ பொலிஸ் அதிகாரப் பிரதேசத்தில் போக்குவரத்து அமைச்சர் கௌரவ குமார வெல்கம அவர்களின்

தலைமையில் நடாத்தப்பட்டமை மற்றும் எதிரொளி விளக்கு ஸ்ரிக்கர்களை ஒட்டுகின்ற நாடளாவிய நிகழ்ச்சித் திட்டத்திற்கு நிகராக 40,000 ஸ்ரிக்கர்கள், பிலெக்ஸ் பதாதைகள் 15 அச்சிடப்பட்டு பொலிஸ் அதிகாரப் பிரதேசங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டமை. (2014 பொலிஸ் அறிக்கைகளின் பிரகாரம், மரணத்தைத் தழுவிக் கொண்ட துவிச்சக்கர வண்டி ஓட்டுநர்களின் எண்ணிக்கையானது 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 37 ஆல் குறைவடைந்துள்ளது.

6. **விசேட கலந்துரையாடல்கள்.**

- 2014.04.09 ஆந் திகதி எதிரொளி விளக்கு ஸ்ரிக்கர்களை ஒட்டுதல் தொடர்பான ஊடகக் கலந்துரையாடல்.

- தரத்துடனான துவிச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் எவ்வாறானதாக இருத்தல் வேண்டும் என்பது தொடர்பான கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கான விசேட கலந்துரையாடலொன்று 2014.05.06 ஆந் திகதி போக்குவரத்து அமைச்சில் நடாத்தப்பட்டமை.

- DSI ரயர் தொடர்பான ஆரம்பக் கலந்துரையாடல் 2014.05.20 ஆந் திகதி போக்குவரத்து அமைச்சில் நடாத்தப்பட்டமை

- அனைத்துக் காப்புறுதிச் சங்கங்களுடனான கலந்துரையாடல் 2014.08.07 ஆந் திகதி போக்குவரத்து அமைச்சில் நடாத்தப்பட்டமை,

- வீதிப் பாதுகாப்புத் தொடர்பாக பாடசாலை விடயப் பரிந்துரைக்குள் உள்ளடக்குவதற்காக கல்வி அமைச்சின் தலைமையில் உரிய அனைத்துப் பிரிவினருடன் கலந்துரையாடல் (2015 ஆம் ஆண்டிலிருந்து பாடசாலைகளைச் சுற்றி பாதுகாப்பு வலயத்தினை உருவாக்குவதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது)

- 2014.09.22 வானொலிக் கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடப்பட்டதன் பின்னர் வீதிப் பாதுகாப்புத் தொடர்பான அறிவித்தல்களை வெளியிடுவதற்கு செலவாகும் பணமான ஷரூபா. 30 இலட்சம், ஷரூபா. 10 இலட்சம் வரை குறைக்கப்பட்டு பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

7. 2014.10.02 ஆந் திகதி அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் (ருநுளுஊயீ யுனு ஊழுவுளுயு) நிறுவனத்துடன் சர்வதேச மகாநாடு நடாத்தப்பட்டுள்ளதுடன், 2014.10.03 ஆந் திகதி வீதிக் கண்காணிப்புத் தொடர்பான களச் சுற்றுலா நடாத்தப்பட்டமை.

8. பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேசத் தினக் கொண்டாட்டம். 2014.11.16 ஆந் திகதி கொழும்பு தாமரைத் தடாக முன்றலில் நடாத்தப்பட்டமை.

(இத்தினத்தினைக் கொண்டாடும் ஐக்கிய நாடுகள் அமைப்புக்குரித்தான 30 ஆவது நாடாக இலங்கை திகழ்கின்றது)

# II ஆவது பிரிவு

## அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் செயற்பாடு

# 1. இலங்கைப் புகையிரதத் திணைக்களம்

## 1.1 அறிமுகம்

ஏனைய பிரதான போக்குவரத்து முறைகளுடன், தேசியப் போக்குவரத்து முறைமையினூடாக உன்னத பணியில் ஈடுபட்டு, இலங்கைப் புகையிரதச் சேவை பயணிகள் மற்றும் சரக்குப் பொருட்கள் போக்குவரத்தில் தேசியப் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில், 2014 ஆம் ஆண்டில் தனது பங்ககளிப்பினை வழங்குவதற்கு முயற்சி செய்துள்ளது. சிக்கனம் மற்றும் விளைதிறன்மிக்க போக்குவரத்து ஊடகமொன்றான புகையிரத சேவை, குறிப்பிட்ட நேரத்தினுள் அதிகமான பயணிகள் மற்றும் சரக்குப் பொருட்களை ஏற்றி பெருந்தெருக்களிற் காணப்படும் தடைகளைக் குறைத்து சிநேகபூர்வமான சூழலில் தனது அன்றாடப் பயணச் சேவைகளை நிறைவேற்றியுள்ளது.

#### தொலைநோக்கு

''தென் ஆசியாவிலேயே மிகவும் விளைதிறனான புகையிரதப் போக்குவரத்து வழங்குனர்களாக ஆக்குதல்''.

#### பணி

''பிரயாணிகள் மற்றும் சரக்குப்பொருட்கள் போக்குவரத்திற்கான பாதுகாப்பு, நம்பிக்கை, குறிப்பிட்ட நேரத்திற்கு ஓட்டுதல், சிக்கனமானதும் மற்றும் விளைதிறனானதுமான புகையிரதப் போக்குவரத்துச் சேவையொன்றை வழங்குதல்''.

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2014 ஆம் ஆண்டின் மொத்த வருமானம் ஷரூபா. 5423.29 மில்லியனில் இருந்து ஷரூபா. 5909.31 மில்லியன் வரை அதிகரித்து முன்னேற்றமொன்றைக் காட்டியுள்ளது. புகையிரதத்திற்கு பயணிகளின் நாட்டத்தை மேலும் மேம்படுத்தி 2013 ஆம் ஆண்டில் காணப்பட்ட 118.7 மில்லியனான பயணிகள் எண்ணிக்கை, 2014 ஆம் ஆண்டில் 129.5 மில்லியன் வரையான 9% முன்னேற்றமொன்றைக் காட்டியுள்ளது. வடக்குக்கான புகையிரத வீதிகள் மீள் நிர்மாணிக்கப்பட்டு பொதுமக்களின் நலனுக்காகத் திறந்து வைக்கப்பட்டமையே இதற்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளது.

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2014 ஆம் ஆண்டில் புகையிரதப் பணிச் செயற்பாடுகள் விளைதிறனாகவிருத்தல், உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு, சிறந்த முகாமைத்துவக் கொள்கைகளை அமுற்படுத்துவதனூடாக 2014 ஆம் ஆண்டில் மிகவும் சிறந்த நிலைமையொன்றை சுவீகரிப்பதற்கு முடிந்துள்ளது. இந்நிலைமைகளினால் புகையிரத வருமானம் அதிகரித்தல், குறிப்பிட்ட நேரத்திற்கு புகையிரதம் சேவையில் ஈடுபடுத்தலில் அதிக கவனஞ் செலுத்தப்பட்டது. விசேடமாக பயணிகள் வருமானங்களில் காட்டப்பட்ட சிறந்த வளர்ச்சி புகையிரதத்திற்கு பயணிகளிடமிருந்து அதிக நாட்டம் உள்ளதையே எடுத்துக் காட்டியுள்ளது.

நிரந்தர புகையிரத வீதியின் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுச் செயற்பாடுகள், புகையிரதத் தளத்தினை பழுதுபார்த்தல் மற்றும் மேம்படுத்துதல், சைகை மற்றும் மின் விளக்கு முறைமையினைப் பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல் செயற்பாடுகளை உத்தேசிக்கப்பட்டவாறு அமுறப்படுத்துதல் 2014 ஆம் ஆண்டின் முன்னேற்றத்திற்கு பேருதவியாக அமைந்தது.

பின்வரும் பிரதான பிரிவுகளுக்கான அபிவிருத்திச் செயற்பாடுகள் அதன் சாதகமான நிலைகளில் நேரடியாயகச் செல்வாக்கி செலுத்தியுள்ளது.

- கடந்த சில வருடங்களினுள் புகையிரத அணிக்கு ஒன்று சேர்ப்பதற்கு இந்தியா மற்றும் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புகையிரத என்ஜின்கள் மற்றும் அதி வேகக் கட்டளைகள் அனைத்துப் புகையிரத வீதிகளின் புகையிரதங்களின் செயற்பாட்டுக்குப் பயன்படுத்துதல்.

- நீண்டதூரப் பயணிகள் சேவைக்காக புதிதாக அறிமுகஞ் செய்யப்பட்ட குளிஷரூட்டப்பட்ட புகையிரதங்களை விளைதிறனுடன் சேவையிலீடுபடுத்துதல்.

- கொழும்பு கோட்டை – கண்டிக்கு இடையே பயணங்களை முன்னெடுப்பதற்கு அரை சொகுசு புகையிரதங்களைத் தொடர்ந்து சேவையிலீடுபடுத்துதல்.

- புகையிரத வீதிகள் முறைமை, இருப்புப் பாதை மேல் உருண்டு செல்லும் இயக்கு பொறிகள் (சுழடடலைபெ ளுவழஉம), சைகை மற்றும் மின்விளக்கு முறைமைகளில் இடம்பெறும் மேம்பாடு மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகளைத் தொடர்ந்து சரியானவாறு அமுறப்படுத்துதல்.

- புகையிரத நிலையங்களில் அமுறப்படுத்தப்படும் அபிவிருத்திப் பணிகள்.

  - ➢ புகையிரத மேடைகளை அலங்கரித்தல்.
  - ➢ புகையிரத நிலையங்களில், பயணிகள் கழிவறை சேவைகளை மேம்படுத்துதல்
  - ➢ புகையிரதம் தொடர்பான தகவல்களை வழங்குவதனை விளைதிறனாக்குதல் (இணையத்தளம்)
  - ➢ புகையிரத நிலையங்களில் (மருதானை.்.கொழும்பு கொட்டுவ) ஊஊ வுஏ கமராக்களைப் பொருத்துதல்.
  - ➢ பயணிகள் ஓய்வு அறையினை நவீனமயப்படுத்துதல்.
  - ➢ தன்னிச்சையாக இயங்கும் எந்திரங்களை (யுவுஆ) புகையிரத நிலையங்களில் பொருத்துதல்.

- புகையிரதப் பாதுகாப்புச் செயற்பாடுகள் தொடர்ந்து அமுற்படுத்தப்படுவதுடன் நுழைவுச் சீட்டின்றிப் பயணிக்கும் பயணிகளிடமிருந்து தண்டப் பணம் அறவிடுதல்.

- புகையிரதத் திணைக்களத்திற்கு உரித்தான காணிகளில் அத்துமீறி குடியிருப்போர்களை அகற்றுதல்.

- வடக்குப் புகையிரத வீதியின் பிரதான புகையிரத நிலையங்களான யாழ்ப்பாணம், கொடிகாம், ஆனையிறவுப் புகையிரத நிலையங்களை இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் கல்வி அமைச்சின் நிதிப் பங்களிப்புடன் உருவாக்குதல்.

வடக்குப் புகையிரத வீதியின் மீளமைப்புக் கருத்திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம் தொடர்பான பொழிப்பு பின்வருமாறு.

| **கருத்திட்டத்தின் பெயர்** | **மதிப்பிடப்பட்ட செலவு (அ.டொ.மி.)** | **எதிர்பார்க்கப்பட்ட பௌதிக இலக்கு (தூரம் கி.மீ)** | **முன்னேற்றம் (%)** | |
|---|---|---|---|---|
| | | | நிதி | பௌதிகம் |
| மதவாச்சியிலிருந்து மடு வரையான புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணித்தல். | 81.30 | 43 | கருத்திடடம் பூர்த்தி | |
| மடுவிலிருந்து தலைமன்னார் வரையான புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணித்தல். | 164.06 | 63 | 80 | 94 |
| ஓமந்தையிலிருந்து பளை வரையான புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணித்தல். | 195.75 | 91 | கருத்திடடம் பூர்த்தி | |
| பளையிலிருந்து காங்கேசன்துறை வரையான புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணித்தல். | 154.60 | 56 | 87 | 95 |
| வடக்குப் புகையிரத வீதியின் சமிக்ஞை மற்றும் மின் விளக்குக் காட்டி முறைமையினை மீளவும் அமைத்தல். | 96.51 | 313 | 60 | 95 |

உள்ளீர்க்கப்பட்ட செயற்பாட்டுக் காட்டியின் முன்னேற்றம் பின்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது.

## 1.2 செயற்பாட்டுக் காட்டி

| காட்டி | 2013 (மில்லியன்) | 2014 * (மில்லியன்) |
|---|---|---|
| புகையிரதம் கி.மீ. | 10.94 | 11.08 |
| பிரயாணிகள் புகையிரதம் கி.மீ. | 10.2 | 10.3 |
| சரக்குப் பொருட்கள் புகையிரதம் கி.மீ. | 0.35 | 0.32 |
| பிரயாணிகளின் எண்ணிக்கை | 118.7 | 129.5 |
| பிரயாணிகள் கி.மீ. | 6,257.37 | 6,841.97 |
| சரக்குப்பொருட்கள் கி.மீ. | 132.98 | 150.55 |
| சரக்குப்பொருட்களின் தொன் | 1.91 | 2.12 |

* மதிப்பிடப்பட்ட தொகை

## 1.3 உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு

### 1.3.1 புகையிரத வீதிகள்

இலங்கையின் மொத்தப் புகையிரத வீதி 1640 கி.மீ மாத்திரமேயாவதுடன் இற்றை வரையில் 1447 கி.மீ. புகையிரத ஓட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டின் நிறைவில் வடக்குப் புகையிரத வீதியின் பளையிலிருந்து காங்கேசன்துறை வரையான பகுதி மற்றும் மடுவிலிருந்து தலைமன்னார் வரையான பகுதி இற்றை வரை மீளவும் நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன், தலைமன்னார் புகையிரத வீதியின் மதவாச்சியிலிருந்து மடு வரையும், வடக்குப் புகையிரத வீதியின் ஓமந்தையிலிருந்து பளை வரையுமான நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுப் புகையிரதங்கள் சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளன. நிரந்தர வீதிகள் வலைப்பின்னலின் பராமரிப்புச் செயற்பாடுகளுக்கான கற்காரைக் குறுக்குக் கட்டைகள் 65,532, மரக்குறுக்குக் கட்டைகள் 64,552, தண்டவாளங்கள் அடி 79,093, டீயடடயளவ ஊரடிநள 21,636 பரப்பப்பட்டு புகையிரத ஓட்டத்திற்காகவிருந்த வேக வரையறைகள் நீக்கப்பட்டுள்ளன. கண்டி □ பேராதனை வீதியினை இரட்டைப் புகையிரத வீதியாக்குவதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தெற்கு களுத்துறையிலிருந்து தெற்குப் பயாகல வரையான புகையிரத வீதியின் இரட்டை வீதியாக்குதல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

**1. மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரையான புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணித்தல்.**

இந்தியாவின் கடன் உதவிகளின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற இக்கருத்திட்டம் 02 ஆவது கட்டத்தின் கீழ் இடம்பெற்றுவருவதுடன் மதவாச்சியிலிருந்து மடு வரை 43 கி.மீ. புகையிரத வீதி மீளவும் நிர்மாணிக்கப்பட்டு ஓட்டப் பணிக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மடுவிலிருந்து தலைமன்னார் வரையான நிர்மாணப் பணிகளும் இடம்பெறுகின்றன. இது தொடர்பாக மதிப்பிடப்பட்ட பணம் அ.டொ.மி. 231 ஆகும்.

**2. ஓமந்தையிலிருந்து பளை வரையான புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணித்தல்.**

வடக்குப் புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணித்தல் கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற இந்த மதிப்பிடப்பட்ட முழுச்செலவுகள் அ.டொ.மி. 185.49 மாத்திரமே ஆகும். இவ்வீதி இற்றை வரையில் கிளிநொச்சி வரை நிர்மாணிக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு புகையிரதம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

**3. பளையிலிருந்து காங்கேசன்துறை வரையான புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணித்தல்.**

இப்புகையிரத வீதியின் தூரம் 56 கி.மீ. என்பதுடன் மதிப்பிடப்பட்ட நிதி அ. டொ. மி. 149.34 ஆகும். இற்றை வரையில் இதன் நிர்மாணப் பணிகள் யாழ்ப்பாணம் வரையான நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்று வருவதுடன் இற்றை வரை யாழ்ப்பாணம் வரை புகையிரதங்களைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**4. அனுராதபுரத்திலிருந்து வடக்குப் புகையிரத வீதி மற்றும் தலை மன்னார் புகையிரத வீதி தொடர்பாக புதிய சைகை மற்றும் மின் தொடர்பாடல் முறைமையொன்றை அமைத்தல்.**

வடக்குப் புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணிக்கும் போது அதற்குக் தேவையான மின் தொடர்பாடல் முறைமையினை அமைத்தல் இக்கருத்திட்டத்தின் கீழே இடம்பெறுகின்றது. இது தொடர்பாக மதிப்பிடப்பட்ட செலவு அ. டொ.மி. 86.5 ஆகும். இற்றை வரையில் இக்கருத்திட்டத்தின் 95மூ மான பணிகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

### 1.3.2 சைகை மற்றும் மின் தொடர்பாடல் முறைமை

புகையிரத சேவையினை விளைதிறனாக்கும்போது சைகை மற்றும் மின் தொடர்பாடல் முறைமை பாரிய பங்களிப்பினை வழங்குகின்றது. சைகைக் குறைபாட்டினை மிகவும் குறைந்த மட்டத்தில் முன்னெடுத்துச் சென்று புகையிரத சேவையினை சரியானவாறு முன்னெடுத்துச் செல்வதற்கு இது மிகவும் முக்கியமானது. இதன் கீழே பல அபிவிருத்திப் பணிகள் அமுற்படுத்தப்பட்டு வருவதுடன் வடக்குப் புகையிரத வீதி தொடர்பாக மின்விளக்கு சைகை முறையினை அமைத்தல், தற்போதுள்ள சைகைக் குறைபாடுகளைப் பேணல், பாதுகாப்பான புகையிரத குறுக்கு வீதியினை அமைத்தல் போன்றன அவைகளிற் சில. ஜாஎல சீதுவவிற்கு இடையே இரட்டை வீதிக்கான சைகை முறைமையினை ஸ்தாபிக்கும் கருத்திட்டத்தின் 40மூ மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மருதானை - கொழும்பு கோட்டைக்கு இடையேயிருந்த பழைமைவாய்ந்த சைகை முறைமைக்குப் பதிலாக புதிய முறைமையினை ஸ்தாபிக்கும் கருத்திட்டத்தின் 70% மும், அகுன்கல்ல புகையிரத நிலையத்தின் சைகை முறைமையினை ஸ்தாபித்தல் 40% மும், களனிப் பள்ளத்தாக்கு வீதியின் வர்ண சைகை முறைமையினை ஸ்தாபித்தல் 60% மும், குறுக்கு வீதிக ளை ஸ்தாபிக்குட் கருத்திட்டத்தின் 50% மும் மாத்திரமான பணிகளே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

### 1.3.3. புகையிரத அணி

தற்போதுள்ள புகையிரத அணி அன்றாடம் 69 என்ஜின்களை ஓட்டத்திற்கு ஈடுபடுத்தியுள்ளது. 09 பயணிகள் பெட்டிகள் புனருத்தாபனம் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. புகையிரத அணியின் பேணற் செயற்பாடுகள் சரியானவாறு இடம்பெற்று 2755 சிறு பழுதுபார்த்தல்கள் மற்றும் 740 பிரதானமான பழுதுபார்த்தல்களைச் செய்வதற்கு முடிந்துள்ளது.

புதிய அதிவேகக் கட்டளைகளை (Power set) இறக்குமதி செய்தலுடன் 89 அதிவேக கட்டளைகளைப் பயன்படுத்துவதற்கு முடிந்துள்ளது. அத்தோடு குறுந்தூ ர ஓட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்டஅதிவேகக் கட்டளைகள், நீண்ட தூரச்சேவைகளுக்கு ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. இவ் அதிவேக கட்டளைகளை மலைநாட்டுப் புகையிரத வீதிக்குப் பயன்படுத்துவது ஆரம்பமானதுடன் அவ்வீதியின் புகையிரத ஓட்டச் செயற்பாடுகள் உயர் மட்டத்திற்கு சென்றது. அதனூடாக மலைநாட்டு புகையிரத வீதியின் பதுளை மற்றும் கண்டி வரையான புகையிரத சேவையினைத் தரமானதாக மேம்படுத்து முடிந்துள்ளது. அதே போல அலுவலகப் புகையிரதத்திற்கு இரட்டை அதிவேகக் கட்டளைகளை வழங்குவதனூடாக பொதுமக்களுக்கு மிகவும் இலகுவான புகையிரத சேவையொன்றை வழங்குவதற்குத் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 1.4 நிதிசார் முன்னேற்றம்

| வருமானம்/செலவுகள் (ரூபா/மில்லியன்) | 2013 | 2014 |
|---|---|---|
| சாதாரண நுளைவுச் சீட்டு | 3,557.21 | 3,942.30 |
| பருவகால நுளைவுச் சீட்டு | 930.44 | 1,008.50 |
| பொதிகள் மற்றும் கடிதங்கள் | 134.50 | 140.20 |
| பண்டங்கள் மற்றும் கால்நடை வளங்கள் | 412.50 | 386.52 |
| பிற | 388.64 | 431.78 |
| **மொத்தம்** | **5,423.29** | **5,909.31** |
| சதவீதம் % | | |
| **செலவு** | | |
| மீண்டுவரும் செலவு (ரூ.மி.) | 10,586.47 | 16,943.26 |
| மூலதனச் செலவு (ரூ.மி.) | 20,248.99 | 34,601.35 |

## 1.5. 2014 ஆம் ஆண்டின் செயற்பாட்டினூடாக முகங்கொடுக்கப்பட்டுள்ள சவால்கள்..

### 1.5.1 நிதி

#### 1. புகையிரத வருமானம்

- வருடாந்த புகையிரத வருமானத்தில் ஏதோ முன்னேற்றமொன்று காட்டப்பட்டாலும் அது வருடாந்த மீண்டுவரும் செலவுகளை மீள்நிரப்புவதற்கு போதுமானதல்ல. இது தொடர்பான பிரதானமாக ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் எரிபொருட் செலவுகள் உட்பட மீண்டுவரும் செலவுகள் அதிகரித்ததால் இதைப் பாதித்துள்ளது.

- புகையிரத நிலையங்கள் மற்றும் புகையிரத சிற்றுண்டிச்சாலைகள் சரியானவாறு முகாமைத்துவம் செய்யப்படாததால் திணைக்களத்திற்குப் பாரிய வருமானம் இல்லாமாற் போனது.

- புகையிரத இடங்களை அபிவிருத்தி செய்து வருமானத்தினைப் பெருக்குவதற்குப் பயன்படுத்துதல்.

#### 2. செலவுகள்

அனைத்து ஒதுக்கீடுகளும் பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்டு வருவதுடன் அது கோரிக்கை விடுக்கப்பட்ட மதிப்பீட்டு நிதியினை விட மிகவும் குறைந்த தொகையாகும். ஆதலால் பராமரிப்பு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுவதில் சவால்கள் மற்றும் கஸ்டங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. விசேடமாக மீண்டுவரும் செயலவுகளினுள்ள ஊழியர் சம்பளங்கள் மற்றும் எரிபொருட் செலவு உயர்ந்து காணப்பட்டது.

### 1.5.2 உட்கட்டமைப்பு வசதிகள்

#### 1. புகையிரத அணி

- இப் புகையிரத என்ஜின்களின் 65மூ சதவீதத்தின் ஆயுட்காலமானது 30-35 வருடங்களை தாண்டியுள்ளது. அதன் பிரகாரம் அவைகளைப் பராமரிப்பதற்கு மற்றும் உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்யும்போது அதிக பணம் மற்றும் நேரம் செலவானது. விசேடமாக சில என்ஜின்களுக்கான உதிரிப்பாகங்களை உரிய தாய் அமைப்புக்களில் பெற்றுக்கொள்ளும்போது இடர்பாடுகள் ஏற்பட்டதுடன் இதுனூடாக பாரிய பிரச்சினை எழுந்திருந்தது.

- இதற்கிடையே புகையிரத என்ஜின்களைப் பயணிகள் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும்போது எழும் குற்றச்சாட்டுக்களின் காரணமாக தாமதம் மற்றும் விபத்துக்குள்ளாகும் போக்கு அதிகரித்தல், நீண்டதூர ஓட்டம்,

நகரத்திற்கான தபால் பொதிகள் மற்றும் சரக்குப் பொருட்கள் போக்குவரத்துச் சேவைகளில் தாமதம் இடம்பெற்றது.

- பராமரிப்பு மற்றும் சேவை வசதிகள் தொடர்பான மேலதிகக் கொடுப்பனவுகள் உட்பட அதிக பணம் செலவாகியமை.
- புதிய என்ஜின்களைப் பெற்றுக்கொள்ளும்போது ஈடு செய்வதற்கு நேரிட்ட அதிக செலவினங்கள்.

### 1.5.3 சர்வதேச சவால்கள்

சர்வதேச புகையிரதப் போக்குவரத்து செயற்பாட்டுக் காட்டியினை ஒப்பிட்டு நோக்குங்கால், இலங்கைப் புகையிரத சேவை இடம்பெற்ற மட்டம் பின்வரும் துறைகளில் திருப்தியளிக்கவில்லை.

- சரியான நேரத்திற்கு புகையிரதத்தினைச் சேவையிலீடுபடுத்துதல்.
- தகவல் தொழில்நுடப் முறைமைகளைப் பாவித்தல்.
- சுற்றுலா விடுதி மற்றும் பயணிகள் வசதிகள்
- புகையிரதப் பெட்டிகள், சுகாதார சேவைகளின் (கழிவறை) தராதரம

### 1.5.4 தகவல் தொழில்நுட்பம்

இத் தகவல் தொழில்நுட்ப முறைமைகளைப் பகுதிகளுக்கு ஒன்றிணைத்தல் மற்றும் அவற்றினைப் பாவனைக்கு அனுப்புதல் சவால்மிக்க விடயமாவதுடன் இது தொடர்பாக மனித மற்றும் பௌதிக வளங்களில் காணப்படும் பற்றாக்குறை, ஊழியர் உளப்பாங்கு போன்றனவும் செல்வாக்குச் செலுத்துகின்றன. நிலைமை எவ்வாறிருப்பினும் நுழைவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளுதல், ஆசனங்களை ஒதுக்குதல், புகையிரதச் செயற்பாடு, காணி, ஆதனம், சொத்து முகாமைத்துவம், கொள்முதற் செயற்பாடு, சரக்கிருப்பு நிர்வாகச் செயற்பாடுகள் ஆகிய நடவடிக்கைகளுக்கு தகவல் தொழில்நுட்ப (IT) முறைமையினைப் பாவிக்கும் வினைத்திறனானது, சர்வதேசத்திற்குப் பொருத்தமான புகையிரத சேவைக்கான பிரவேசமாக உள்ளது.

### 1.5.5 சுஸீழலியற் சவால்கள்

இயற்கை மற்றும் சூழலியற் சவால்களாக நிலச்சரிவு, வெள்ளப் பெருக்கு போன்ற காரணங்களினால் புகையிரத வீதிக்கு மற்றும் சைகை முறைமைக்கு பாதிப்பு ஏற்படும் என்பதுடன் இதன் காரணமாக புகையிரதச் சேவைளை இரத்துச் செய்வதற்கும் மற்றும் தாமதஞ் செய்வதற்கும் நேரிடும். இவ்வாறான இயற்கை இடர்களுக்கு முகங்கொடுப்பதற்கு மனித மற்றும் பௌதிக வளங்களை முன் ஆயத்தத்துடன் நிலைநிறுத்தி அவசரத்

தேவைகளுக்குப் பெற்றுக் கொடுக்கும் இயலுமை முக்கியமாவதுடன், தற்போதுள்ள ஊழியர் மற்றும் ஏனைய பௌதிக வளங்களில் காணப்படும் பற்றாக்குறைக்கு முகங்கொடுப்பது அவ்வளவு சுலபமான காரியம் அன்று.

### 1.5.6 ஊழியர் பற்றாக்குறை

அன்றாடச் சேவைகளை முன்னெடுத்துச் செல்லும்போது, வீதிகள், தொழில்கள், பொறித்தொகுதி மற்றும் உந்து ஊர்திகள் உப திணைக்களங்களில் அரச முகாமைத்துவச் சேவைகளில் நிலவும் ஊழியர் பற்றாக்குறையின் காரணமாக உரிய செயற்பாடுகளின்போது இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி நேரிட்டது.

மேலும் ஒட்டுமொத்தமாக எடுத்து நோக்கும்போது, இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் நிரந்தரப் பதவி அணியில் மிகவும் அதிக தொகையினர் ஓய்வு பெற்றுச் சென்றமை மற்றும் வேறு காரணங்களின் அடிப்படையில் நீக்கப்பட்டமை.

மேலும் தேவையான பிரிவுகளில் நிலவும் ஊழியர் வெற்றிடங்களினால் அத்தியாவசிய சேவைகளை (புகையிரதப் பராமரிப்பு, பழுதுபார்த்தல், சாதாரண நிர்வாகச் செயற்பாடுகள், செயற்பாட்டு நடவடிக்கைகள், வீதிகள் பராமரிப்பு, சைகை முறைமையினைப் பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் போன்றன) முன்னெடுத்துச் செல்வதற்கு செலவாகும் அதிக கொடுப்பனவுகளும் வருடாந்தம் உயர் மட்டத்தில் காணப்படுகின்றது.

### 1.5.7 குறைந்த வீதிகளின் கொள்ளளவு

வடக்குப் புகையிரத வீதி மற்றும் தலைமன்னார் வீதியின் மீள் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்ததோடு கொழும்பு நகரத்தை வந்தடையும் மற்றும் கொழும்பு நகரத்திலிருந்து புறப்படும் புகையிரதங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பொன்று ஏற்பட்டுள்ளது. ஆதலால் அப்புகையிரதங்களுக்கு காணப்படும் புகையிரத வீதிகளின் பிரவேசத்திற்கான கொள்ளளவு குறைவடைந்துள்ளது. இதன் காரணமாக புகையிரதங்கள் பாரியளவில் சரியான நேரத்திற்கு பயணத்தினை முன்னெடுப்பதற்கு தடையாக இருக்கும் என்பதுடன் விபத்துக்கள் இடம்பெறும் சாத்தியக்கூறுகளும் அதிகரிக்கும். அதன் பிரகாரம் இத்தடைகளை இனங்காண்பது கட்டாயமாவதுடன் அது தொடர்பாகப் பொருத்தமான நடவடிக்கையினை எடுப்பது காலத்தின் தேவையாகும்.

உதாரணம்- வடக்குப் புகையிரத வீதி மற்றும் தலைமன்னார் வீதிகளை ஆரம்பித்ததோடு பொல்காவலை – மகவ தனிப் புகையிரத வீதியின் கொள்ளளவு குறைவதைக் காணமுடியும். வடக்கு மற்றும் கிழக்கினதும் புகையிரத ஓட்டத்தினைக் கவனத்திற் கொள்ளும்போது இது முக்கியமான விடயமாக உள்ளது.

அதேபோல கடற்கரையை அண்டிய புகையிரத வீதியிலும் பானந்துறை புகையிரத நிலையத்திலிருந்து கொழும்பு கொட்டுவ வரை தாமதம் ஏற்படுகின்றது. இதற்குப் பிரதான காரணமாக பானந்துறையிலிருந்து பாரியளவிலான புகையிரதங்கள் சேவையிலீடுபடுத்தப்படுவதால், வீதியின் கொள்ளளவு போதாமை இருப்பது அடையாளங்

காணக்கூடிய விடயமாகும்.

இராகமவிலிருந்து கொழும்பு கொட்டுவ வரையான 13 கி.மீ தூரத்தை (Bottleneck) வந்தடைவதில் தாமதம் இடம்பெறுவதுடன். இதற்குப் பிரதானமாக தளம் மற்றும் தரிப்பிடங்கள் போதாமை. மேலும் அண்மையில் புதிதாகப் புகையிரதச் சேவைக்குச் சேர்க்கப்பட்ட எஸ் 11 வகையின் அதிவேக கட்டளைகள் 20 மற்றும் எஸ் 12 வகையின் அதிவேகக் கட்டளைகள் 13 முழுமையாகச் சேவைச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்டதோடு இந்நிலைமை மேலும் உக்கிரமடைந்துள்ளது.

1.5.8 வடக்குப் புகையிரத வீதி மற்றும் தலைமன்னார் புகையிரத வீதியின் புகையிரத நிலையங்களை நிர்மாணித்தல் 2014 நடுப்பகுதியில் இவ்வீதிகளின் அனைத்து நிர்மாணப் பணிகளும் நிறைவடைந்ததால் புகையிரத நிலையங்கள் மற்றும் தேவையான ஏனைய கட்டிடங்களை நிர்மாணித்து நிறைவு செய்தல் முன்னுரிமைத் தேவைப்பாடாக உள்ளது.

1.5.9 எரிபொருளின் விலைகள் உயர்ந்து சென்றதன் காரணமாக செயற்பாட்டுச் செலவுகள் அதிகரித்தல். அதற்கு நிகராகக் கட்டணங்கள் உயர்வடையாமை பிரச்சினையினை உருவாக்கியுள்ளது.

1.5.10 அத்துமீறிப் பிடிக்கப்பட்ட நிலங்களைச் சரிசெய்வதிலுள்ள பிரச்சினை மற்றும் (10000) இதன் காரணமாக நிர்மாணிக்கப்படவுள்ள புகையிரத வீதிகள் மற்றும் ஆதன அபிவிருத்தி நடவடிக்கைகளை செயற்படுத்துவதில் தடை எழுந்துள்ளது. புகையிரதத்திற்குச் சொந்தமான நிலங்களில் அத்துமீறிக் குடியிருப்போர்கள் பல்வேறான நிர்மாணங்களை மேற்கொண்டு வசித்து வருவதால் நிர்மாணிக்கப்படவுள்ள புகையிரத மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு மிகப் பாரிய சவாலாக உள்ளது.

# 2. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்

## 2.1 பின்னணி

இலங்கையினுள் பதிவு செய்யப்படாத மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்வதற்கு 1928 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆந் திகதி மோட்டார் வாகனப் பதிவாளர் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அது 1951 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மோட்டார் வாகனச் சட்டமூலத்தினூடாக மோட்டார் வாகனப் பதிவாளர் அலுவலகம் ஒரு திணைக்களமாக மாற்றப்பட்டுள்ளது.

### தொலைநோக்கு

"சிறந்த முறையில் மோட்டார் வாகனங்களைக் கண்காணித்து மக்களின் உயர் பாராட்டுதலுக்கு இலக்காகுதல். "

### எமது பணி

"ஊக்கப்படுத்தப்பட்ட சேவையினை அனைவருடைய ஒன்றிணைந்த முயற்சி மற்றும் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, மோட்டார் வாகனங்களுக்கான சட்டம் மற்றும் ஏனைய சட்ட ஒழுங்குகளைச் சிறந்தாக அமுற்படுத்தி உயர் மக்கள் பாராட்டுதலுக்காக அர்ப்பணித்தல்."

## 2.2 மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் பணிகள்.

திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டு வருகின்ற பணிகளை 06 தொகுதிகளின் கீழ் பின்வருமாறு மீளாய்வு செய்ய முடியும்.

**1. சேவையிலீடுபடுத்தக்கூடிய மோட்டார் வாகனங்களைப் புதிதாகப் பதிவு செய்தல்.**

2014 ஆம் ஆண்டினுள் இடம்பெற்ற மொத்த வாகனப் பதிவு செய்தலின் எண்ணிக்கை 429,556 ஆகும்.

**2. வாகன உரிமைகளை வழங்குவதைப் பதிவு செய்தல்.**

2014 ஆம் ஆண்டினுள் இடம்பெற்ற ஒட்டுமொத்த வாகன உரிமை ஒப்படைப்புக்களின் எண்ணிக்கை 379,586 ஆகும்.

**3. சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் சேவை**

வெரகர உப அலுவலகத்தினை மையமாகக் கொண்டு ஏனைய மாவட்ட அலுவலகங்கள் ஊடாக சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் செயற்பாடுகள் இரண்டு முறைமையினூடாக இடம்பெற்றுள்ளன. அவை,

(1) On Line

வெரகர அலுவலகத்தினை மையமாகக் கொண்டு கம்பாந்தோட்டை, அனுராதபுரம், கம்பகா, களுத்துறை, குருனாகல்.

(2) Off Line

ஏனைய மாவட்ட அலுவலகங்களின் சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்கும்வேளையில் இம்முறைமை பின்பற்றப்படுகின்றது.

4. **மோட்டார் வாகனம் தொடர்பான தொழில்னுட்பச் சேவை**

5. **புகை வெளியேறும் நிலைமையினை முகாமைப்படுத்தும் முறைமை (சூஸீழற் பாதுகாப்பதனை நோக்காகக் கொண்டு)**

6. **வீதிப் பாதுகாப்புத் தொடர்பான பணிகள்.**

## 2.3 செயற்பாடு (2014 ஜனவரி – திசம்பர் 31)

திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டு வருகின்ற பணிகளின் முன்னேற்றத்தினை 3 கட்டங்களாகப் பின்வருமாறு மீளாய்வு செய்ய முடியும்.

1. வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டத்தின் தந்திரோபாயத்தினை அமுற்படுத்துவதன் முன்னேற்றம்.
2. மூலதனக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்.
3. பொதுமக்கள் சேவைகளில் எண்ணிக்கை சார் முன்னேற்றம்.

திணைக்களத்தின் செயற்பாட்டினை மிகவும் செயற்திறன் மற்றும் விளைதிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளைத் திணைக்களத்தினூடாக வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1. **வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டத்தின் பணிகளை அமுற்படுத்துவதன் முன்னேற்றம்.**

I. **சாரதிகள் வலுவுஸீட்டுதல் புள்ளியிடும் திட்டத்தினை அமுற்படுத்துதல்**

2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரகாரம் இலங்கையினுள் சேவையிலீடுபடுத்தப்படுகின்ற வாகன முறைமைக்கு நிகராக வீதிப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காகவும், ஒழுக்காற்றுடனான சாரதிகளை உருவாக்குவதற்காகவும் சாரதிகள் வலுவூட்டுதல் புள்ளியிடும் திட்டத்தினை நாடுபூராவும் அமுற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், முன்னோடிக் கருத்திட்டம் கொழும்பினைக் கேந்திரமாகக் கொண்டு அமுற்படுத்தப்படுகின்றது.

இது தொடர்பான தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருவதுடன் 2014.12.31 ஆந் திகதி வரையில் அறிக்கையிடப்பட்ட தகவல்களின் பிரகாரம் இனங்காணப்பட்ட 36,639 தவறுகள் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளது.

II. ஈ – மோட்டார் கருத்திட்டம்.

ICTA அறிக்கையின் பிரகாரம் அமுற்படுத்தப்பட்டு வருகின்ற இக்கருத்திட்டம் இற்றை வரையில் பல கட்டங்களாக அமுற்படுத்தப்படு வருவதுடன், திணைக்களத்தினுள் சேவையினை வழங்கும்போது பாவிக்கப்படும் கடித ஆவணங்களைப் பிரதியெடுத்து அதன் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதன் மூலம் திணைக்களத்தின் செயற்பாடுகளை இலகுபடுத்துவதே இதன் நோக்கமாகும்

இற்றை வரை கருத்திட்டத்தினை அமுற்படுத்துவதற்காக, உரிய கடிதக்கோவை ஆவணங்ககள் தேவையான திருத்தத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளதுடன். ஆலோசனை சேவைகள் ICTA நிறுவனத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

**2. பாதீட்டு ஒதுக்கீட்டின் அடிப்படையில் அமுற்படுத்தப்பட்டு வருகின்ற மூலதனக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்.**

திணைக்களத்தினுள் மூலதனக் கருத்திட்டங்கள் பல தொகுதிகளாக அமுற்படுத்தப்பட்டு வருவதுடன் இதன் கீழ் பிரதானமாக

- பிரதான அலுவலகத்தின் நிர்மாணப் பணிகள்.
- வெரகர உப அலுவலகத்தின் நிர்மாணப் பணிகள்.
- மாவட்டச் செயலகங்களின் நிர்மாணப் பணிகள்.
- மனிதவள முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல்.
- சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதற்கு செலவிடும் கட்டணங்களைக் காட்ட முடியும்.

- **பிரதான அலுவலகத்தின் நிர்மாணப் பணிகள்.**

நாரகென்பிட்ட பிரதான அலுவலகத்தின் நிர்மாணப் பணிகள் இதன் கீழ் கவனத்திற் கொள்ளப்பட்டு வருவதுடன் இப்பணிகள் மூன்று கட்டங்களாக அமுற்படுத்தப்பட்டு வருகின்றன. அவை,

i. கார் ஒப்படைக்கும் கிளையினைப் புதுப்பிக்கும் பணிகள்.
ii. உடைத்து அகற்றப்படுதற்குள்ள கட்டிடத்தினைப் புதுப்பிக்கும் பணிகள்.
iii. சாரதிகள் ஓய்வு மண்டபம் மற்றும் மலசலகூடங்களை அமைக்கும் பணிகள்.

- **வெரகர உப அலுவலகத்தின் நிர்மாணப் பணிகள்**

இதன் நிர்மாணப் பணிகள் ஷரூபா. 236 மில்லியன் கருத்திட்டமாக அமுற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தாலும், இவ்வருடத்திற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டு அடிப்படையில் 02 பணிகளை வருடத்தினுள் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவை,

- ➢ சாரதி ஓட்டுனர் சுவடு - ரூபா. 78.96 மில்லியன்
- ➢ வாகனத் தரிப்பிடம் - ரூபா. 18.88 மில்லியன்

- **மாவட்ட அலுவலகங்களின் நிர்மாணப் பணிகள்**

பொதுமக்களுக்கு மிகவும் பரந்துபட்டதும் மற்றும் விளைதிறனானதுமான சேவையொன்றைப் பெற்றுக் கொடுப்பதை அடிப்படை நோக்காகக் கொண்டு செயற்படும் எமது திணைக்களம், இற்றை வரை நாடளாவிய மாவட்ட அலுவலகங்கள் வலைப்பின்னலொன்றின் மூலம் தேவையான சேவைகளை வழங்குவதற்கு ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இதன் கீழ் அனுராதபுரம் மற்றும் கம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகங்களினூடாக சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிட்டு வழங்குதல், குருனாகல், கம்பகா மற்றும் களுத்துறை போன்ற மாவட்ட அலுவலகங்களினூடாக ழுடெைநெ வசதிகளின் கீழ் சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் தொடர்பாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

மாவட்ட அலுவலகங்களின் நிர்மாணப் பணிகள் தொடர்பாகக் கவனத்திற் கொள்ளும்போது திருகோணமலை மாவட்டச் செயலகத்தின் நிர்மாணப் பணிகள் இற்றை வரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் யாழ் மாவட்ட அலுவலகத்தின் நிர்மாணப் பணிகள் இற்றை வரையில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

அதற்கு மேலாக மாவட்டச் செயலகங்களின் அலுவலகங்களின் சூழலை முறைசார்ப்படுத்தி சேவைகள் வழங்குவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் எதிர்பார்ப்புடன் அத்தேவைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு அவ்வலுவலகங்களைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கோகாலை, கண்டி, மொனராகலை மற்றும் கம்பாந்தோட்டை அலுவலகங்களினைப் புதுப்பிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

- **மனித வள முகாமைத்துவம் தொடர்பாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல்.**

திணைக்களத்தினுள் கடமையாற்றி வரும் உத்தியோகத்தர்களின் வினைத்திறன் மற்றும் விளைதிறன் தொடர்பாக ஊழியர் ஊக்குவிக்கப்பட்டு சிறந்த பங்களிப்பு வழங்கப்பட்டு வருகின்றது. எமது திணைக்களம் விளைதிறனை நோக்கி முன்னெடுக்கப்பட்ட பயணத்தின்போது, ஊழியர்கள் ஊக்குவிப்பு சிறந்த அடித்தளமாக அமைந்துள்ளதுடன் 2014 ஆம் ஆண்டு பூராவும் ஊழியர் ஊக்குவிப்புத் தொடர்பாக ஆர்வம் காட்டப்பட்டுள்ளது.

பொதுமக்கள் சேவைகளில் எண்ணிக்கைசார் முன்னேற்றம்

| | செயற்பாடு | 2014.12.31 |
|---|---|---|
| 1 | சாரதிகள் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் எழுத்து மூலப் பரீட்சைகளை நடாத்துதல். | 87,149 |
| 2 | சாரதிகள் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் செய்முறைப் பரீட்சைகளை நடாத்துதல். | 77,030 |
| 3 | இலக்கத் தகடுகளை வழங்குதல் (கொழும்பு) | 373,904 |
| 4 | இலக்கத் தகடுகளை வழங்குதல் (வெளி மாகாணங்கள்) | 138,767 |
| 5 | கராஜ், புதிய சந்தை விற்பனை நிறுவனங்களைப் பரீட்சித்தல் | 29 |
| 6 | கராஜ், புதிய சந்தை விற்பனை நிறுவனங்களைப் பதிவு செய்தல் | 677 |
| 7 | கராஜ், புதிய சந்தை விற்பனை நிறுவனங்களைப் புதுப்பித்தல். | 108 |
| 8 | சாரதிகள் பாடசாலைகளைப் பரீட்சித்தல். | 26 |
| 9 | படிவங்களை வழங்குதல் | 241 |
| 10 | ஊஆவு, ஸசி இலக்கத்தினை வழங்குதல் | 19 |
| 11 | ரேலர் ஸசி இலக்கத்தினை வழங்குதல் | 1898 |
| 12 | சுங்க ஏலவிற்பனை வாகனங்களுக்கு ஊஆவு, ஸசி இலக்கத்தினை வழங்குதல். | 62 |
| 13 | மோட்டார் சைக்கிள்களைப் பரீட்சித்தல். | 1444 |
| 14 | புதிய மோட்டார் சைக்கிள்களைப் பரீட்சித்தல். | 275,832 |
| 15 | கனரக வாகனங்களுக்குச் சான்றிதழ்களை வழங்குதல் | 8,075 |
| 16 | அடையாளச் சான்றிதழினை வழங்குதல். | 1,514 |
| 17 | தடை உத்தரவு வழங்குதல் | 2,889 |
| 18 | தடை உத்தரவுகளை நீக்குதல் | 1,808 |
| 19 | வாகன விபத்துக்களைப் பரீட்சித்தல் | 4,649 |
| 20 | விசேட கடமைகளுக்கு பங்குகொள்ளல் | 445 |

## 2.4 2014 ஆம் ஆண்டு தொடர்பாக மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் உண்மையான வருமானங்கள்.

(ஜனவரி- திசம்பர்)

**வருமானம்**

| வருமான விபரம்/வருமானத் தலைப்பு | 2014.12.31 ஆந் திகதியன்று மதிப்பிடப்பட்ட வருமானம் ரூ.மி. | 2014.12.31 அன்று உண்மையான வருமானம் ரூ.மி. |
|---|---|---|
| சொகுசு மோட்டார் வாகன வாடகை | 2800.00 | 1114.85 |
| மோட்டார் வாகனங்கள் விற்பனை | 68.00 | 51.93 |
| மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் குத்தகைகள் அறவிடப்பட்டு வருகின்ற கட்டணங்கள். | 7450.00 | 8123.80 |
| இமா மொத்மாசைபசபய்ய மொத்த வருமானம் | 10318.00 | 9290.58 |

அனுசரணை - மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்

திணைக்களம் உழைத்துள்ள அனைத்து வருமானங்களையும் கவனத்திற்கொள்ளும் போது மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட குத்தகையினூடாக பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் 86% உயர் வருமானமொன்றைக் கொண்டு வந்துள்ளதுடன், மோட்டார் வாகனங்களை விற்பனை செய்தல் அடிப்படையில் வசூலிக்கப்பட்டுள்ள குத்தகைகளின் முக்கியத்துவம் அனைத்துக் குத்தகைப் பெறுமதிகளின் 0.57 % போன்ற கீழான பெறுமதியொன்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**செலவு**

| செலவு விபரம்/ செலவுத் தலைப்பு | 2014.12.31 அன்றைய திகதி மதிப்பிடப்பட்ட செலவு ரூ.மி | 2014.12.31 அன்றைய திகதி உண்மையான செலவு ரூ.மி. |
|---|---|---|
| மீண்டுவரும் செலவு | 1446.05 | 1463.52 |
| மூலதனச்செலவு | 1048.75 | 922.54 |
| மொத்தச் செலவு | 2494.80 | 2386.06 |

நிதி அனுசரணை – மோட்டார் வாகனப் போக்குவத்துத் திணைக்களம்

# 3. இலங்கைப் போக்குவரத்துச் சபை

## 3.1 அறிமுகம்

இலங்கையின் பயணிகள் போக்குவரத்துச் சேவையினுள் அரச பிரிவின் பங்களிப்பினை முன்னுரிமை அடிப்படையில் பெற்றுக்கொடுக்கின்ற நிறுவனமான இலங்கைப் போக்குவரத்துச் சபை வருடத்தின் அனைத்துத் தினங்களிலும் பொதுமக்களுக்குச் சேவையினை வழங்கி வருகின்ற அரச நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது.

**தொலைநோக்கு**

‘‘பயணிகள் போக்குவரத்தின் சிறந்த வழங்குனராக இருத்தல்’’

**பணி**

‘‘பொதுமக்களுக்குப் பாதுகாப்பு, நம்பிக்கை, மிகவும் இலகுவான வீதிப் பயணிகள் சேவையொன்றை நியாயமான கட்டண முறைமையொன்றின் கீழ் சேவைக்கென தம்மை அர்ப்பணஞ் செய்துள்ள வினைதிறனான அலுவலகக் குழாமொன்றினூடாக நிறுவனத்தின் அனைத்து வளங்களையும் உச்சப் பயன்பாட்டுக்கு கொண்டு வந்து பொருளாதாரம் சார் அடிப்படையில் நடுநிலைமையாக முன்னெடுத்துச் செல்லல்’’.

## 3.2. சமூகப் பயன்களுக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பங்களிப்பு

- **விடியற்காலை மற்றும் இரவு நடு நிசி வரை இறுதிப் பயணங்ளை மேற்கொள்ளுதல்.**

இலங்கையின் அனைத்துப் பாகங்களையும் உள்ளடக்குமாறு விடியற்காலை மற்றும் இரவு நடு நிசி இறுதிப் பயணங்கள் சேவைகளை வழங்குவதனூடாக, நாட்டின் பொருளாதாப் பங்களிப்பிற்கு முதுகெலும்பாக விளங்கி, பயணிகளின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றுவதில் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஆற்றும் சேவைகளினால் கடந்த காலங்களிலிருந்து அதற்கு ஏற்பட்ட நட்டம் சொல்லுந்தரமன்று. ஆனாலும் இலங்கைப் போக்குவரத்துச் சபை சமூக பொறுப்பெனக் கருதி இச்சேவைகளையாற்றி வருகின்றது.

- **கிராம வாசிகளுக்கான பேரூந்துக்களைச் சேவையிலீடுபடுத்துதல்**

கிராமியப் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கு, கிராமங்களையும், நகரங்களையும் இணைக்கும் இபோச (இலங்கைப் போக்குவரத்துச் சபை) வின் பங்களிப்பு எத்தகையதென்றால், வருமானமற்ற வழிகளில் செயலாற்றுவதன் மூலம் ஏற்படுடம் நட்டத்தையும் பொருட்படுத்தாது இபோச இச்சேவைகளை ஆற்றி வருகிறது என்பதேயாகும். அதற்கேற்ப கடந்த ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட 281 சிறய பேரூந்துக்கள் பயன்படுத்தப்பட்டு கிராமிய வழிச்

சேவையைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கு காரணம் இந்நாட்டின் கிராமியப் பொருளாதார சுதந்திரத்திற்கு இது அத்தியாவசியமாகும் என்பதனாலாகும்.

- **பாடசாலை சேவைகளுக்கு ஈடுபடுத்தப்பட்ட பேரூந்துக்கள்**

இலங்கைப் போக்குவரத்துச் சபையினூடாக ஈடு செய்யகின்ற செலவினங்களினுள் நாட்டின் நாளைய நாளுக்காக சமூகப் பயன்களை உருவாக்குவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம் பிரயாணிகள் நெரிசல் அதிகம் மற்றும் இலாபத்தினை உழைத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் இல்லாது போயிருப்பினும்கூட எம்மிடமுள்ள வரையறுக்கப்பட்ட வாகன அணியினூடாக, அதிக வாய்ப்பினை எதிர்கால சந்ததியினரான பாடசாலை மாணவ, மாணவிகளை சரியான நேரத்திற்குப் பாடசாலைக்குக் கொண்டு செல்லல் மற்றும் வீட்டுக்குக் கொண்டு வந்து விடுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இதுவும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தேசியப் பணியொன்றாகும்.

- **தேசிய வைபவங்களில் சேவையிலீடுபடுத்தப்படுகின்ற பேரூந்துக்கள்**

புதுவருட வைபவம், வெசக் மற்றும் பொசன் வைபவம், கண்டி மற்றும் கதிர்காமத் திருவிழாக்கள், வருடாந்தந்தோறும் நிகழும் மடுத் தேவாலய வைபவம் மற்றும் சிவனொலிபாதமலைத் தரிசிப்பு போன்ற முக்கிய விசேட காலங்களில் சேவையிலீடுபடுத்தப்படுகின்ற விசேட பேரூந்துச் சேவைகளானவை, இலங்கைப் போக்குவரத்துச் சபையினூடாக சமூகப் பராமரிப்புச் சேவையொன்றாக அமுற்படுத்தப்படுகின்றது.

- **பருவ கால நுழைவுச் சீட்டுக்கள்**

பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் முதியோர்களுக்கென ஒதுக்கி பல்வேறு மட்டங்களினூடாக போக்குவரத்துத் தேவைப்பாடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை கொண்டு வந்த செயற்பாட்டினூடாக நாட்டிலுள்ள பிரயாணிகளுக்கு பொருளாதார அடிப்படையில் சலுகை வழங்குதல் இடம்பெறுகின்றன.

- **அதி வேக வீதிகளினூடான போக்குவரத்துச் சேவைகள்**

இலங்கையின் வீதி முறைமைக்குப் புதிதாக அறிமுகஞ் செய்யப்பட்ட அதி வேக வீதிகள் முறைமையினூடாக சேவையிலீடுபத்தப்படுவதற்கு பரிந்துரைக்கப்பட்ட பே'ரூந்துக்களைப் பயன்படுத்தி பயணிகள் போக்குவரத்துப் பணிகளைச் செவ்வனே செய்வதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு முடிந்துள்ளது. அதன் பிரகாரம் தற்போதைய இலங்கையின் அதிவேக வீதிகள் முறைமையினூடாக பயணத்தினை முன்னெடுக்கும் இலங்கைப் போக்குவரத்துச்சபையின் சொகுசுப் பேரூந்துக்கள் நவீன உலகிற்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

- **சமாந்தரப் பயணிகள் சேவைகள் திடீரென இடைவெளியில் செயலிழக்கும்போது உதவிக்கரம் நீட்டும் இலங்கைப் போக்குவரத்துச் சேவை**

சமாந்தரப் போக்குவரத்துச் சேவைககளில் காலத்திற்குக் காலம் இடம்பெறும் பல்வேறு இடையூறுகளினூடாக நிர்க்கதியாகும் பயணிகளுக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை விசேட நிவாரண சேவைகளை வழங்குகின்றது. இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான ஊர்திகள் அணி கிராமங்கள், நகரங்கள் தோறும் சேவையிலீடுபடுத்தப்பட்டு பல்வேறான சந்தர்ப்பங்களில் நிர்க்கதியான மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை செய்கின்றது.

## 3.3 2014 ஆம் ஆண்டினுள் பெற்றுக் கொண்டுள்ள முன்னேற்றம்

இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் 2014 ஆம் ஆண்டினுள் நாளொன்றுக்கு பயணிகள் 2.53 மில்லியன் வரையில் போக்குவரத்தினை மேற்கொண்டுள்ளதுடன் அம்மட்டத்தினை முனனெடுத்துச் செல்வதற்கு நாளெIIன்றுக்கு 5000 பேரூந்துக்கள் சேவைக்கு இணைக்கப்பட்டுள்ளன. அக்காலத்தினுள் வருமானங்களைக் கொண்ட வீதிகளில் மற்றும் கிராமிய வருமானமற்ற வீதிகளில் சமுதாயப் பொறுப்பொன்றாக சேவையில் ஈடுபடும் இரவு மற்றும் நடுநிசி இறுதிப் பேரூந்துக்களைச் சேவையிலீடுபடுத்துவதனூடாக விளைதிறனான பொதுப் போக்குவரத்துச் சேவையொன்றை நாடு முழுவதும் முன்னெடுத்துச் செல்வதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை அர்ப்பணிப்புடன் உள்ளது. இதற்கு மேலாக அலுவலகங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கும் என ஒதுக்கப்பட்ட பேரூந்துச் சேவைகளை பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது.

எவ்வாறாயினும் தற்போதுள்ள பழைய பே'ரூந்து அணியினைப் பயன்படுத்தி இம்மட்டத்தனை முன்னெடுத்துச் செல்வதற்கு இயலுமாகவுள்ளதுடன், இவ்வருடத்தில் கொள்ளவனவு செய்யப்படவுள்ள 2,200 புதிய பே'ரூந்துக்களுடன் இந்த அன்றாட ஓட்டத்திற்குப் பெற்றுதரப்படும் பே'ரூந்துக்களின் எண்ணிக்கையினை 6000 வரையில் அதிகரித்துக் கொள்வதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு நிறைவடைந்துள்ளது. அதன் பிரகாரம் இனிவருங்காலங்களில் இலங்கைப் போக்குவரத்துச் சபையினூடாக போக்குவரத்துச் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை உயர்ந்து செல்லும் என்பதை எதிர்பார்க்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

- கடந்த வருடத்தினுள் இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் அதி சொகுசு பே'ரூந்துக்களை கொள்வனவு செய்யும் போக்கு உயர்ந்து செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. அப்பே'ரூந்துக்கள் தெற்கு மற்றும் கட்டுநாயக்கா அதிவேக வீதிகளைப் பயன்படுத்தி பல இன்டர்சிட்டி சேவைகளை வழங்குதல் இடம்பெறுகின்றது. தற்போது அதி வேக வீதிகளினூடாக இவ்வாறு இலங்கைப் போக்குவரத்துச் சபையினூடாக குத்தகை அடிப்படையில் கொள்ளவனவு செய்யப்பட்ட 42 பே'ரூந்துக்கள் சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளது.


- அரச தலைவர்களுக்கான மகாநாட்டினை ஒட்டி (CHOGM) இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மேற்குறிப்பிட்ட பேரூந்துக்களுக்கு மேலாக மேலும் 68 அதி சொகுசு பேரூந்துக்கள் கிடைக்கப்பெற்றதுடன், இப்பேரூந்துக்களை இலங்கைப் போக்குவரத்துச் சபை அதி சொகுசு சுற்றுலாப் போக்குவரத்துச் சேவை என்ற பெயரில் பிரிவொன்றை நிறுவி செயற்பாட்டுப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது.


- பொதுப் போக்குவரத்துச் சேவைக்கு நவீன தொழில்நுட்பக் கருவிகளின் பாவனை உயர்வடைந்து செல்லுதலும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மேலும் ஒரு குறிக்கோளாகும். இதன் பிரகாரம் மும்மொழிகளிலும் இலத்திரனியல் டிஜிரல் பெயர்ப் பலகைகளைப் பொருத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் தற்போது நடைமுறையிலுள்ள பேரூந்துக்களுக்கு மேலாக இனிவருங்காலங்களில் இலங்கைப் போக்குவரத்துச் சபையினூடாக கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட 2,200 பேரூந்துக்கள் தொடர்பாகவும் பெயர்ப் பலகைகளைப் பொருத்திப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இனிவரும் காலவரையறையினுள் கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அனைத்துப் பேரூந்துக்களும் இவ்வசதிகளுடன் பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- இலத்திரனியல் நுழைவுச் சீட்டு இயந்திரங்களை அறிமுகப்படுத்துதல் இற்றை வரையில் மேல் மாகாணத்திலும், யட்டினுவர, டிப்போ, தென் மாகாணம் மற்றும் புத்தளம் மாவட்டத்திலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தற்போது இலங்கைப் போக்குவரத்துச் சபை பேரூந்துக்களில் 2,800 இலத்திரனியல் நுழைவுச் சீட்டு இயந்திரங்கள் நடைமுறையிலுள்ளதுடன் இனிவருங்காலங்களில் அனைத்துப் பேரூந்துக்களிலும் இந்த இயந்திரங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

- இலத்திரனியல் பருவகால நுழைவுச் சீட்டுக்களைப் பாவிப்பதற்கு மாணவர்களைப் பழக்கப்படுத்திக் கொள்ளும் கருத்திட்டம் இற்றை வரை கொழும்பு, கம்பகா, களுத்துறை போன்ற மாவட்டங்களிலும், தென் மாகாணத்தின் கதிர்காமப் பிரதேசத்தினை உள்ளடக்கக்கூடியவாறு 85 பாடசாலைகளில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான பருவகால நுழைவுச் சீட்டுக்களுக்கு உரித்துடைய மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 12,000 வரையில் அதிகரித்துக் காணப்படுவது இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குக் கிடைக்கப் பெற்ற வெற்றியாகும்.

- சிசுசரிய பேரூந்துச் சேவையின் கீழ் 662 பேரூந்துக்கள் சேவைக்கு இணைக்கப்பட்டுள்ளதுடன், நாடுபூராவும் அதனை விரிவுபடுத்துவதற்காக இனிவருங்காலங்களில் கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பேரூந்துக்களில் ஆகக் குறைந்த வகையில் மேலும் 100 பேரூந்துக்களை இச் சேவைக்குப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் நிறைவில் சேவைக்குப் பெறப்படுவதற்கு எதிர்பார்த்த மொத்த சிசிசரிய பேரூந்துக்கள் கருத்திட்டம் பின்வருமாறு.




- 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளைக் கவனத்திற் கொள்ளும்போது, 2014 ஆம் ஆண்டின் வழிப்பட்டியல் வருமானத்தை முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிட்டு உயர்த்திக்கொள்வதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை வெற்றி கண்டுள்ளது. அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது ஷரூபா. 2,330.80 மில்லியன் தங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ளுதல் இடம்பெற்றுள்ளது.

## 3.4 இபோச பேரூந்து அணி

2014 யூன் மாதம் நிறைவில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான விளைதிறனான பேரூந்துக்கள் அணி 5,633 என்ற மட்டத்தில் முன்னெடுத்துச் செல்வதில் வெற்றி கண்டுள்ளது. இதில் 10 வயதிற்குக் குறைவான பேரூந்துக்கள் 2,996 உள்ளடங்குவதுடன், 2014 ஆம் ஆண்டின் நிறைவில் 10 வயதிற்குக் குறைந்த ஊர்தி அணி 5,299 ஆக அதிகரித்து வைத்துக் கொள்வதற்குத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

| 2014 விளைதிறனான பேரூந்துக்கள் அணி – வயதின் பிரகாரம் ( 2014.12.31 ஆந் திகதியன்று ) | |
|---|---|
| **வயதுத் தொகுதி** | **மொத்த ஊர்தி அணி** |
| 10 வயதிற்குக் குறைவு | 4,110 |
| 10 வயதிற்கு மேல் | 3,350 |
| மொத்த விளைதிறனான பேரூந்துக்கள் அணி | 7,460 |

- 2013 ஆம் ஆண்டின் நிறைவில் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊர்தி அணிக்கு புதிதாக 298 பேரூந்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன், 2014 ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட 2,200 பேரூந்துக்கள் இற்றை வரை கிடைக்கப்பெற்றுள்ளன.

- பேரூந்து அணியினைப் புனருத்தாபனம் செய்து ஊர்திகள் அணியினை சரியானவாறு முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

| பேரூந்துக்கள் புனருத்தாபனம் மற்றும் பழுதுபார்த்தல் | | | |
|---|---|---|---|
| **பேரூந்துக்களைப் பழுதுபார்த்தல்** | **2012** | **2013** | **2014 – நவம்பர்** |
| புனருத்தாபனக் கருத்திட்டத்தின் கீழ் முழுமையாகப் பழுதுபார்க்கப்பட்ட பேரூந்துக்கள் | 303 | 227 | 66** |
| என்ஜின் | 632 | 820 | 629 |
| கியர் பெட்டி | 223 | 377 | 393 |
| Bus body | 203 | 217 | 207 |

** புனருத்தாபனக் கருத்திட்ட பேரூந்துக்கள் மாத்திரம் காட்டப்பட்டுள்ளது.

- பேரூந்துக்களைச் செயற்படுத்துவதற்குத் தேவையான என்ஜின், கியர் பெட்டி, Bus body ஐப் பழுதுபார்த்தலுக்குத் தேவையான உதிரிப்பாகங்களை, குத்தகை நிவாரண அடிப்படையில், கொள்முதல் சபைகள் அங்கீகரித்த வழங்குனர்களினூடாக, தேவைப்பாடுகளின் பிரகாரம் கூறுவிலைகளைக் கொண்டு வழங்குவதற்குச் சரியான முறைமைகளைத் தயாரித்தல் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ளதுடன், இற்றை வரை அச்செயற்பாட்டினூடாக உதிரிப்பாகங்களின் செலவினை ஏதாவது மட்டத்திற்கு குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- கடந்த சில வருடங்களைக் கவனத்திற்கொள்ளும்போது, நாளொன்றுக்கு ஓட்டத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பேரூந்துக்களின் எண்ணிக்கை மற்றும் நாளொன்றுக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பேரூந்துக்களின் எண்ணிக்கையில் உயர்ந்து செல்லும் போக்கினைக் காணக்கூடியதாகவுள்ளது. 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் அன்றாடச் சேவையிலீடுபடுத்தப்பட்ட பேரூந்துக்களின் எண்ணிக்கையின் சாதாரண பேரூந்துக்கள் 4,361 ஆகும். அம்மட்டம் 2014 ஆம் ஆண்டிலும் சரியானவாறு முன்னெடுக்கப்பட்டுச் செல்லப்பட்டுள்ளது.

- 2014 ஆம் ஆண்டு இறுதியில் நாளொன்றுக்கு சேவையிலீடுபடுத்தப்பட்ட கிலோமீற்றரின்

அளவு 1,005,908 மில்லியனாகப் பொதுவாக முன்னெடுக்கப்பட்டுச் செல்லப்பட்டுள்ளது. கடந்த வருடங்களைக் கவனத்திற் கொள்ளும்போது சேவையிலீடுபடுத்தப்பட்ட கிலோமீற்றர்களின் அளவு நீண்டு சென்றுள்ளது.

## 3.5 இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மனித வளம்

இலங்கைப் போக்குவரத்துச் சபை ஸ்தாபிக்கப்பட்ட தினத்தன்று ஈடுசெய்ய முடியாதளவுக்கு ஊழியர் குழாம் இலங்கைப் போக்குவரத்துச் சபையிடம் இருந்துள்ளதுடன் இவ் ஆளணியினரில் ஏதாவது குறைப்பொன்று இற்றை வரையில் இடம்பெற்றதைக் காணக்கூடியதாக உள்ளது. எவ்வாறாயினும் இனிவருங் காலங்களில் கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட பே'ரூந்துக்கள் 2,200 க்கு தேவையான சாரதிகள், நடத்துனர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏற்றவாறு 2014 ஆம் ஆண்டில் ஆளணியினரை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**2005 இல் இருந்து ஊழியர்கள் அமைப்பு**

| ஆண்டு | பிரதேச செயலகங்கள் மற்றும் டிப்போக்கள் | பிரதேசத்தின் வேலைத் தளங்கள் | சாரதிகள் பயிற்சிப் பாட-சாலைகள் | மத்திய பேரூந்து அலுவலகம் | இலங்கைப் போக்கு வரத்துச் சபையின் பிரதான அலுவலகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2005.10.19 | வெவ்வேறாக புள்ளி விபரங்கள் இல்லை | | | | | 38,952 |
| 2006.12.31 | 35,252 | 1,121 | 55 | 370 | 834 | 37,632 |
| 2007.12.31 | 34,986 | 964 | 72 | 301 | 826 | 37,149 |
| 2008.12.31 | 33,821 | 917 | 80 | 284 | 1,028 | 36,130 |
| 2009.12.31 | 33,134 | 827 | 85 | 286 | 1,033 | 35,365 |
| 2010.12.31 | 32,601 | 782 | 84 | 263 | 1,042 | 34,772 |
| 2011.12.31 | 32,135 | 775 | 58 | 268 | 1,027 | 34,263 |
| 2012.12.31 | 31,761 | 757 | 57 | 273 | 958 | 33,806 |
| 2013.12.31 | 30,590 | 722 | 57 | 288 | 973 | 32,630 |
| 2014.09.30 | 31,395 | 712 | 55 | 270 | 890 | 33,322 |

- இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர் குழாமினை மேம்படுத்துவதற்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்தி வருகின்றது. இவ்வாறு முன்னெடுக்கப்பட்டு வருகின்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருமாறு.

  - ➢ இயந்திரத் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சியினை வழங்குதல்.
  - ➢ தமிழ் மொழி சான்றிதழ்ப் பாடநெறியினை நடாத்திச் செல்லுதல்
  - ➢ கணனிச் சான்றிதழ்ப் பாடநெறியினை நடாத்திச் செல்லுதல்.

- ➢ விபத்துக்களைத் தவிர்ப்பது தொடர்பாக சாரதிகள் மற்றும் நடாத்துனர்களுக்குப் பயிற்சியளித்தல்.

- ➢ பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வழங்குதல்.

- ➢ ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட சாரதிகள் மற்றும் நடத்துநனர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.

- ➢ நிர்வாக முறைமையுடன் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.

## 3.6 இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

நடைமுறையில் நிதிக் கஸ்டங்களுக்கு முகங்கொடுத்திருப்பினும், உட்கட்டமைப்பு வசதிகளை இயலுமானவாறு மேம்படுத்திக் கொண்டு செல்வதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை பின்வருமாறு செயற்பாடுகளை அமுற்படுத்தியுள்ளது.

- இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு உரித்தான டிப்போக்களின் பிரதான மற்றும் பிரதேச அலுவலகங்கள் மற்றும் பேரூந்துத் தரிப்பிடங்களைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் மற்றும் நிர்மாணம்.

- களுதாவல சுற்றுலா விடுதி புதுப்பிப்புச் செயற்பாடு நிறைவு.

- நுவரெலியல சுற்றுலா விடுதியினைப் புதுப்பித்தல் செயற்பாடு நிறைவு.

- கொக்கல எரிபொருள் நிரப்பு நிலையத்தின் நிர்மாணப்பணி (20 மில்லியன் ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

- உடுபத்தாவப் பிராந்தியப் பட்டறை புதுப்பித்தல் பணி நிறைவு.

- மதவாச்சிப் பிராந்தியப் பட்டறைப் புதுப்பித்தல்.

- குருனாகல் பிராந்தியப் பட்டறை புதுப்பிக்கப்பட்டு நிறைவு செய்தல்.

- களுத்துறை சாரதிகள் பயிற்சிக் கல்லூரி

- அங்குலான சாரதிகள் பயிற்சிக் கல்லூரி

- அங்குலான சுற்றுலா டிப்போ நிர்மாணம்

## 3.7 இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முன்னேற்றம் 2013 – 2014

| இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முன்னேற்றம் 2013 – 2014 | | | |
|---|---|---|---|
| | விபரம் | 2013 | 2014 |
| 1 | அன்றாடம் போக்குவரத்துச் செய்த பயணிகளின் எண்ணிக்கை | 2,452,807 | 2,532,177 |
| 2 | அன்றாடம் சேவைக்கு ஈடுபட்டதன் கிலோமீற்றர்களின் அளவு | 941,644 | 1,005,908 |
| 3 | ஊழியர்களின் எண்ணிக்கை | 32,630 | 33,322 |
| 4 | சேவையிலீடுபடுத்தப்பட்டு வரும் சொகுசுப் பேரூந்துக்களின் எண்ணிக்கை | 102 | 108 |
| 5 | சிசுசரி பேரூந்துக்களின் எண்ணிக்கை | 625 | 627 |
| 6 | இலத்திரனியல் நுழைவுச் சீட்டி இயந்திரங்களின் பாவனை | 1,900 | 2,800 |
| 7 | இலத்திரனியல் பருவ கால நுழைவுச் சீட்டி இயந்திரங்களின் பாவனை | - | 12800 |

## 3.8 2014 ஆம் ஆண்டின் செயற்பாட்டினுள் இபோச ஊடாகத் தீர்வு காணப்பட வேண்டிய சவால்கள்

- நிலுவை ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவு

2014 ஆம் ஆண்டு ஆரம்பமானபோது இபோச ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்ய வேண்டியுள்ள ஊழியர் சேமலாப நிதியத்தின் பெறுமதி சரியானவாறு கொடுப்பனவு செய்யப்படாததால் ஷரூபா. 6900 மில்லியன் வரையான பணம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். ஆதலால் 2014 ஆம் ஆண்டினூடாக இப்பெறுமதியினை வழங்கி நிறைவு செய்வதற்கு இபோச க்கு மாற்றீட்டு முறைமைக்கு செல்லவேண்டி ஏற்பட்டது. இது இபோச க்கு உள்ள பாரிய சவாலொன்றாகும்.

- நிலுவைப் பணிக் கொடை நிதியக் கொடுப்பனவு

2014 ஆரம்பமானபோது இபோச ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டியிருந்த பணிக்கொடை நிதியத்தின் பெறுமதி ஷரூபா. 382.2 மில்லியனாவதுடன், இது 460 ஊழியர்களுக்கு உரித்தான பெறுமதியாகும். இப்பெறுமதியை வழங்கி முடிப்பது இபோச க்கு உள்ள மிகப் பெரிய சவாலாகும்.

- தற்போதுள்ள மேலதிக ஊழியர்களை விளைதிறனான சேவைக்கு அனுப்புதல்.

2014 ஆம் வருடம் ஆரம்பமானபோது இபோச யில் 32,630 வரையான ஊழியர் குழாம் இருந்துள்ளதுடன், இந்நிலைமையின் கீழ் நிறுவனத்தினுள்ள பே'ரூந்துக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுங்கால் ஊழியர் அதிகளவிற் காணப்பட்டனர். சாதாரணமாக பிரத்தியேகப் பிரிவில் பே'ரூந்து ஒன்றுக்கு இரண்டு ஊழியர் மாத்திரமே இருந்தனர். ஆனால் இபோச பே'ரூந்து ஒன்றுக்கு 07 (ஏழு) ஊழியர்களைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த நிலைமையின் கீழ் விளைதிறன் செயற்பாடுகளுக்கு ஊழியர்களை அனுப்பி

மேலதிக ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்வு காண்பது இபோச முகங்கொடுக்கும் சவாலாக உள்ளது.

- நாளாந்த வருமானங்களில் அரைவாசிக்கு அதிகமான தொகை எரிபொருகள் செலவுக்கு ஈடுசெய்ய வேண்டி ஏற்பட்டது.

சாதாரணமாக இபோச ஷரூபா. 53 மில்லியன் வரையான அன்றாட வருமானமொன்றை 2014 ஆம் ஆண்டின் முற்பகுதியில் உழைத்துள்ளதுடன். அது கிலோமீற்றர் ஒன்றுக்கு ஷரூபா. 56 ஆக காணப்பட்டது. வருட ஆரம்பத்தில் இபோச ஊடாக ஈடுசெய்யப்பட்ட எரிபொருட் செலவு நாளொன்றுக்கு ஷரூபா. 33 மில்லியன் மாத்திரமே என்பதுடன், அது ஷரூபா. 35 மில்லியன் ஆகும். இந்நிலைமையின் அடிப்படையில் அன்றாட வீதிகள் ஓட்டப் பதிவேட்டு வருமானத்தில் அரைவாசிக்கும் அதிகமான தொகை எரிபொருளுக்குச் செலவு செய்யப்பட்டது. ஆதலால் எரிபொருட் செலவினைக் குறைப்பதற்கு, எரிபொருள் வினைத்திறனொன்றை உருவாக்கும் பல்வேறு திட்டங்களுக்கு அனுப்புவதற்கு நேரிடுதல் இபோச தீர்வுகாணப்பட வேண்டிய சவாலொன்றாகும்.

- ஊரதி அணி சரியானவாறு நாளதுவரைப்படுத்தப்படாமை.

2014 ஆம் ஆண்டு ஆரம்பமானபோது இபோச யின் அனைத்துப் பேரூந்து அணியின் அட்டவணை பின்வருமாறு.

| விளைதிறனான பேரூந்து அணி – வயதின் பிரகாரம் (2014.01.01 ஆந் திகதியன்று) | | | | |
|---|---|---|---|---|
| வயதுத் தொகுதி | பேரூந்துக்களின் எண்ணிக்கை | | மொத்தப் பேரூந்து அணி | மொத்தப் பேரூந்து அணி (சதவீத த்தில்) |
| | சேவையிலுள்ள | சேவையிலற்ற | | |
| 02 வயதுக்குக் கீழ் | 581 | 22 | 603 | 8% |
| 02-05 வயதிற்கிடையே | 255 | 26 | 281 | 4% |
| 05 – 10 வயதிற்கிடையே | 1,677 | 337 | 2,014 | 28% |
| 10 – 15 வயதிற்கிடையே | 1,381 | 1,105 | 2,486 | 35% |
| 15 வயதிற்கு மேல் | 912 | 847 | 1,759 | 25% |
| **மொத்தம்** | **4,806** | **2,337** | **7,143** | |

இதன் பிரகாரம் காட்டப்படுவது, தற்போதுள்ள வாகன அணியில் 60% வரையில், 10 வயதிற்கு அதிகமான தொகுதியொன்றுக்கு உரித்துடையதாகும். இந்நிலைமை செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு நேரடியாகத் தாக்கஞ் செய்வதால் ஊர்தி அணியினை நாளதுவரைப்படுத்தும் சவாலுக்கு இபோச முகங்கொடுத்துள்ளது.

- பழைய பேரூந்துக்களுக்கு அதிக பராமரிப்புச் செலவொன்றை ஈடு செய்வதற்கு நேரிடல்.

இபோச க்கு உரித்தான பேரூந்துக்களில், 4245 பேரூந்துக்கள், 2014 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் 10 வயதுக்குக்கூடிய தொகுதியொன்றுக்கு உரித்தானது. இவ் ஊர்தி

தொடர்பாக சாதாரணமாக ஒரு கி மீ. க்கு ஈடுசெய்ய வேண்டிய செலவு உயர் மட்டத்திற் காணப்பட்டது. இந்நிலைமையின் அடிப்படையில் இபோச க்கு கிடைக்கும் வருமானங்களில் பெரும் பகுதி இப் பேரூந்துக்களின் செலவுக்கு உட்பட்டதன் விளைவாக பழைய பேரூந்துக்களுக்கு அதிகளவிலான பராமரிப்புச் செலவொன்றை ஈடுசெய்வதற்கு இபோச யால் தீர்க்கப்பட வேண்டிய சவாலாகியுள்ளது.

- பருவகால நுழைவுச் சீட்டுக்கள் மற்றும் இலவச பயண சீட்டுக்கள் வழங்குவதன் அடிப்படையில் இல்லாமற் போகும் வருமானத்தினை உயர்த்துதல்.

2014 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின்போது சாதாரண பருவகால நுழைவுச் சீட்டுக்கள் மற்றும் இலவசப் பயணச் சீட்டுக்கள் வழங்கியதன் காரணமாக இபோச க்கு இல்லாமற் போன வருமானம் ஷரூபா. 1506 மில்லியனாகும். மேலும் பாடசாலை பருவகால நுழைவுச் சீட்டுக்களுக்கு தற்போது 21 நாட்களை உள்ளடக்குமாறு கட்டணங்கள் அறவிடப்பட்டாலும் அப்பருவ கால நுழைவுச் சீட்டுக்களைக் கொண்டு 30 நாட்கள் பயணஞ் செய்வதற்கான இயலுமை உரித்தாக்கப்பட்டுள்ளது. இந்நிலைமையின் அடிப்படையில் இபோச க்கு வருமானமொன்று இல்லாமற் போவதுடன் அதுவும் இபோச வருமானம் இல்லாமற் போவதற்கு பாரிய தாக்கத்தினை விளைவிக்கும் சவாலொன்றாகும்.

- குத்தகை அடிப்படையின் கீழ் கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட 2200 பேரூந்துக்களுக்குக் குறிப்பிட்டவாறு தவணைக் கட்டணங்களை வழங்குதல்.

குத்தகை முறைமையின் கீழ் 2200 பே'ரூந்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு 2014 ஆம் ஆண்டினுள் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தினை அமுற்படுத்தும்போது மாதாந்தம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய குத்தகை தவணைக் கட்டணங்களைச் சரியானவாறு நேரத்திற்கு வழங்குவது தற்போதைய சவால்களுக்கிடையேய பிரதானமானதாகும்.

- பிரதேசத்தின் வேலைப்பட்டறைகள் மற்றும் அம்பாறை ரயர் தொழிற்சாலையினைப் புதுப்பித்தல்.

இபோச க்கு உரித்தான பிரதேசத்தின் வேலைப் பட்டறைகள் மற்றும் அம்பாறை ரயர் தொழிற்சாலை 2013 ஆம் ஆண்டிலிருந்து பழுதுபார்க்கப்படாததால் அக்கட்டிடம் மற்றும் எந்திரப்பொறிகள் பழுதுபார்க்கப்படுதல் வேண்டும். அதை ஈடு செய்வதற்கு நேரிடுகின்ற செலவு மிகவும் அதிகம் என்பதால் அதுவும் எமக்கு தற்போது தீர்க்கப்பட வேண்டிய சவாலொன்றாகும்.

- டிப்போ புதுப்பிக்கப்படுதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

இபோச க்கு உரித்தான 106 டிப்போக்களைப் பராமரித்தல் மற்றும் புதுப்பித்தலுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு பாரியளவிற் பணம் தேவைப்பட்டுள்ளது. இவற்றினைப் புதுப்பிக்காது முன்னெடுத்துச் சென்றால் இவ்விடங்களை ஒட்டுமொத்தமாகப் பாவனைக்கு எடுக்க முடியாத நிலைமை உருவாகும். ஆதலால் எமக்கு உரித்தான டிப்போக்களை மீளவும் புதுப்பித்து உட்கட்டமைப்பு வசதிகளை

மேம்படுத்துதல் வேண்டும். ஆனாலும் இது தொடர்பாகத் தேவைப்படும் நிதியினைத் திட்டமிடுவதில், தற்போது சிக்கல் நிலை காணப்படுகின்றது

- பிரதான அலுவலகம் மற்றும் பிரதேச செயலங்களை அண்டிய இடங்களில் கணனி வலையமைப்பை ஸ்தாபித்தல்.

தற்போதுள்ள அநேகமான தகவல்களைச் சரியாகப் பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான கணனி வலையமைப்பை அமைப்பதற்கு எமக்குத் தேவையாக உள்ளது. இது தொடர்பாக தேவையான வளங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் தேவையான அறிவினைக் கொண்ட மனித வளங்களைப் பெற்றுக் கொள்ளுதல் 2014 ஆம் ஆண்டின் தீர்வு காணப்பட வேண்டிய சவாலாக உள்ளது.

- இலத்திரனியல் நுழைவுச் சீட்டு இயந்திரயங்களைப் பாவனையில் ஈடுபடுத்தல்.

தற்போது இபோச க்கு உரித்தான ஊர்தி அணியின் அனைத்துப் பேரூந்துக்களிலும் இலத்திரனியல் நுழைவுச் சீட்டு இயந்திரங்களை ஈடுபடுத்துதல் இடம்பெறுதல் வேண்டும் என்பதுடன் அதனூடாக சட்டரீதியான தேவைப்பாடுகளை நிறைவு செய்தல் மற்றும் வீதிகள் ஓட்டப் பதிவேட்டு வருமானம் இல்லாமற் போவதைக் குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வழங்கப்படும் நுழைவுச் சீட்டு இயந்திரங்கள் மிகவும் பாரியளவிலான பெறுமதியாததால் வழங்குதல் தற்போது சவாலாகியுள்ளது.

# 4. தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு

## 1.1 அறிமுகம்

1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவின் சட்டத்தினூடாக தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அச்சட்டத்தில் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் பணிகளை நிறைவு செய்யும்வேளையில் எடுத்த காலத்தினுள் சுவீகரிக்கப்பட்ட முன்னேற்றம் மிகவும் முக்கியமானது.

தற்போதைய பொருளாதார முறைமையினூடாக நாட்டின் அபிவிருத்தி குறிக்கோள்களை வெற்றி பெறச் செய்வதற்கு போக்குவரத்துத் துறைக்குப் பிரதானமான கடமைப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாட்டின் போக்குவரத்து, பொருளாதார வளர்ச்சி மற்றும் சமுதாய அபிவிருத்திக்கெனப் பாரிய பங்களிப்பினைத் பெற்றுத் தந்துள்ளது.

தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவின் பிரதான பணியாவது, பயணிகள் போக்குவரத்துத் தொடர்பாகத் தேவையான சீர்திருத்தப் பணிகளைத் திட்டமிட்டு நாட்டின் போக்குவரத்துத் தேவைப்பாடுகளை முறைசார்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**தொலைநோக்கு**

"நாட்டினுள் சமூக – பொருளாதார வளர்ச்சி ஒன்றை ஏற்படுத்துவதற்கு தரமான, சிக்கனமான, விளைதிறனான மற்றும் பாதுகாப்புடன்கூடிய போக்குவரத்து முறைமை மற்றும் சேவையூடாக இலங்கையிலுள்ள அனைத்து பிரஜைகளுக்குமான பல்வேறான போக்குவரத்துத் தேவைப்பாடுகளை நிறைவு செய்வதை உறுதியளித்தல்"

**பணி**

"பயணிகள் போக்குவரத்துக்குரிய தேசியக் கொள்கை தொடர்பாக இலங்கை அரசுக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு விளைதிறனான பேரூந்துப் போக்குவரத்து முறைமையொன்று அமுற்படுப்படுவதை உறுதிசெய்வற்காக தேவையான சட்ட வரைவொன்றைத் தயாரித்தல்".

## 4.2 2014 ஆம் ஆண்டில் தரமான போக்குவரத்துத் சேவையொன்றுக்காக மேற்கொள்ளப்பட்ட பணிகள்.

- **பாடசாலை பேரூந்துச் சேவைகள் கருத்திட்டம் "சிசு சரிய"**

அரசின் அனுசரணையின் கீழ் நாட்டிலுள்ள அனைத்து நகரங்களையும் கேந்திரமாகக் கொண்ட வீதிகள் மற்றும் பாடசாலைகளை உள்ளடக்கக்கூடிய வகையில்

சலுகைக் கட்டண முறையொன்றின் கீழ், முறைசார் வகையில் மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமானதும் பாதுகாப்புடன்கூடிய முறையிலும் பாடசாலை மாணவர்களுக்கென ஒதுக்கப்பட்ட அன்றாடப் பேரூந்துச் சேவையொன்று இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் பிரத்தியேகப் பேரூந்துக்களைப் பயன்படுத்தி சிசு சரிய என்ற பெயரில் நாடுபூராவும் அமுற்படுத்தப்படுகின்றது. நம்பிக்கைக்குப் பாத்திரமான சேவை என்பதால் சரியான நேரத்திற்கு பாடசாலைக்கு எடுத்துச் சென்று கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி பாதுகாப்பாக மீண்டும் வீட்டுக்குக் கொண்டு வந்து விடக்கூடிய சிறந்த நிலைமையொன்றை ஏற்படுத்துவதனூடாக, சமுதாயத்திற்கு சிறந்த குழந்தைகள் சந்ததியொன்றை உருவாக்குதல் இதன் அடிப்படை நோக்காகும். அதேபோல சலுகைக் கட்டண முறைமையொன்று அமுற்படுத்துவதால் குடும்பங்களுள் பொருளாதாரத்திற்கு நிவாரணமளித்தல், பல சிறு வாகனங்களுக்குப் பதிலாகப் பாரிய பேரூந்துக்களை ஈடுபடுத்துவதனூடாக எரிபொருட் கொள்வனவினைக் குறைத்தல், அதனூடாக அந்நிய செலாவணியை மீதப்படுத்துதல், பெருந்தெருக்களில் காணப்படுகின்ற அதிக வாகன நெரிசலைக் குறைத்தலூடாக வாகனத்தைச் செலுத்துகின்ற நேரத்தினைக் குறைத்தல், சூழல் மாசடைவதைத் தடுத்தலும், அரச சேவை மற்றும் பிரத்தியேகப் பிரிவுகளின் பேரூந்துச் சேவைகளை நாட்டின் தேசிய சேவைக்கு ஒன்றிணைப்பது இதன் இன்னுமொரு நோக்காகும். இப் பாடசாலை பேரூந்துக்கள் மாணவர்களிடமிருந்து சாதாரணமான கட்டணத்தில் 50% கட்டணத்தினை அறவிடுவதால், இதனால் ஏற்படும் நட்டத்தைக் குறைப்பதை நோக்காகக் கொண்டு கிலோமீற்றருக்குச் சேர்க்கப்பட்ட நிவாரண உதவிப் பணத்தை வழங்குவதனூடாக இச்சேவைகள் அமுற்படுத்தப்படுகின்றன.

2014 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆந் திகதி வரையில் பின்வருமாறு சிசு சரிய சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

| **மாகாணம்** | **சிசு சரிய சேவையிலீடுபடுத்தப்பட்ட பேரூந்துக்களின் எண்ணிக்கை** |
|---|---:|
| மேல் மாகாணம் | 298 |
| தென் மாகாணம் | 111 |
| வடமேல் மாகாணம் | 237 |
| வட மத்தி மாகாணம் | 131 |
| சப்பிரகமுவ மாகாணம் | 122 |
| ஊவா மாகாணம் | 67 |
| கிழக்கு மாகாணம் | 101 |
| மத்திய மாகாணம் | 35 |
| வட மாகாணம் | 23 |
| உள்ளக மாகாணங்கள் | 10 |
| **மொத்தம்** | **1135** |

இவ்வாறு 2014.12.31 ஆந் திகதி வரையில் ரூபா. 474.04 மில்லியன் செலவு ஈடு செய்யப்பட்டுள்ளது.

- **கிராமிய மற்றும் இலாபமற்ற வீதிகளுக்கு பேரூந்துச் சேவைகள் கருத்திட்டம் – ''கமி சரிய''**

கமி சரிய கருத்திட்டத்தின் கீழ் போக்குவரத்துச் சேவை, கிராமங்கள் மற்றும் நகரங்களைத் தொடர்படுத்தும் ஊடாகமாகச் செயற்படுகின்றது. கமி சரிய கிராமிய பேரூந்துச் சேவைகள் கருத்திட்டத்தின் நோக்கமாவது, கிராமிய மக்களுக்கு அவர்களின் அன்றாடத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு நகரத்திற்கு வருகை தருவதற்கு நம்பிக்கைக்குப் பாத்திரமானதும், பொருளாதார ரீதியில் இலாபமானதுமான போக்குவரத்துச் சேவையொன்றை வழங்குதல்.

சரியான செயற்பாடுகளினூடாக சரியான இலாபமற்ற வீதிகள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன், அவ்வீதிகள் தொடர்பாக சேவைகள் வழங்கப்பட்டு வருகின்ற பணியாளர்களுக்கு இலாபமற்ற ஓட்டத் தூரங்களுக்கு ஒதுக்கீடுகள் வழங்குவது இக்கருத்திட்டத்தினூடாக இடம்பெற்று வருகின்றது.

இச் சேவைகள் நாட்டின் வடமேல், வடமத்தி, கிழக்கு மற்றும் தெற்கு போன்ற மாகாணங்களுடன் தொடர்புபட்டு அமுற்படுத்தப்படுவதுடன் ஆணைக்குழுவுக்கு கிடைக்கின்ற வேண்டுகோள்களின் பிரகாரம் இச்சேவைகள் வழங்கப்படுகின்றன. இச்சேவைகளை வழங்கும் வீதிகளுக்கு எந்தவொரு பயணிகள் போக்குவரத்துச் சேவையொன்றும் இல்லாதிருப்பதுடன், ஒரே சேவை இது மாத்திரமே ஆகும். ஆதலால் இச்சேவையினை ஈடுபடுத்துவது அத்தியாவசியம் என்பதுடன் அச் சேவை தொடர்பாகக் கண்காணிப்பதற்கு அனைத்துப் பேரூந்துக்களிலும் ஜீ.பீ.எஸ். உபகரணமொன்று பொருத்தப்பட்டுள்ளதுடன் அதனூடாக கண்காணிக்கப்பட்டு ஒதுக்கீடுகளை வழங்குவது இடம்பெற்று வருகின்றது.

2014 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் 21 கமி சரிய சேவைகள் அமுற்படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கு ஷரூபா. 10.08 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

- **இரவு பேரூந்துச் சேவைகள் கருத்திட்டம் – ''நிசி சரிய''**

நிசி சரிய கருத்திட்டம் ஆரம்பித்தலின் பிரதான நோக்கமாவது, பிந்திய இரவு நேரங்களிலும் மற்றும் விடியற்காலை நேரங்களிலும் பேரூந்துச் சேவைகளில் நிலவும் பற்றாக்குறையின் காரணமாக பொதுமக்கள் அனுபவிக்கும் கஸ்டங்களுக்கு கைகொடுக்கும் நோக்கில் அவர்களுக்குப் பொதுப் போக்குவரத்துச் சேவை வழங்கப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆந் திகதி வரையில் அமுற்படுத்தப்பட்டுள்ள சேவைகளின் எண்ணிக்கை 114 என்பதுடன் ஷரூபா. 11.75 மில்லயின் இதற்கு ஈடு செய்யப்பட்டுள்ளது.

| மாகாணம் | சேவைகளின் எண்ணிக்கை |
|---|---:|
| மேல் மாகாணம் | 44 |
| தென் மாகாணம் | 15 |
| ஊவா மாகாணம் | 08 |
| மத்திய மாகாணம் | 22 |

| | |
|---|---|
| வட மத்திய மாகாணம் | 06 |
| வட மேல் மாகாணம் | 13 |
| சப்பிரகமுவ மாகாணம் | 03 |
| கிழக்கு மாகாணம் | 03 |
| மொத்தம் | 114 |

- **பாடசாலை மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகளை வழங்குதல்.**

சிநேகபூர்வமான சூழலில் கிராமிய ரீதியில் பொருளாதாரத்திற்கு ஈடுகொடுக்கும் போக்குவரத்து ஊடகமான துவிச்சக்கர வண்டியைப் பிரபல்யப்படுத்துவதை நோக்காகக் கொண்டு, சிசு சரிய கருத்திட்டத்தின் கீழ் கிராமியப் பிரதேசங்களிலுள்ள பிள்ளைகளுக்கு இலவசமாக துவிச்சக்கர வண்டிகளைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டம், தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு அறிமுஞ் செய்துள்ள பாரிய சமூகப் பணியொன்றாகும். இச் சேவையின் கீழ் தற்போது வரையறுக்கப்பட்ட பொதுப் போக்குவரத்து வசதிகளுள்ள மற்றும் சிசு சரிய பேரூந்துச் சேவையினை முன்னெடுப்பதில் சிரமங்களைக் கொண்ட கிராமியப் பிரதேசங்களிலுள்ள மாணவ மாணவிகளுக்கு இத்துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படுகின்றன.

பிற போக்குவரத்து வசதிகளை வழங்க முடியாத பின்தங்கிய பிரதேசங்களின் பாடசாலை மாணவர்களுக்குப் போக்குவரத்து ஊடகமொன்றாக இக்கருத்திட்டம் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. 2014 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் 3364 பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன் அதற்குச் செலவு செய்யப்பட்ட பணம் ரூபா. 39.84 மில்லியனாகும்.

- **நேர சூஸீசியினைத் தயாரித்தலும் மற்றும் திருத்தஞ் செய்தலும்.**

பயணிகளுக்கு நம்பிக்கைக்குப் பாத்திரமான, பாதுகாப்பான, வசதியான பொதுப் போக்குவரத்து சேவையொன்றை வழங்குவதனூடாக பொதுப் பேரூந்துக்கள் பயணிகள் போக்குவரத்துச் சேவையின் தரத்தினை உயர்த்துதல் மற்றும் அனைத்துப் பேரூந்துக்களுக்கும் சந்தர்ப்பங்களை வழங்கக் கூடியவாறு நேர சூசிகளைத் தயாரிப்பதனூடாக சேவை வழங்குனர்களின் வர்த்தகத்தினை நிரந்தரமாகப் பாதுகாத்தல் இக்கருத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இதற்கு மேலாக அரச மற்றும் தனியார் பிரிவிலுள்ள பேரூந்துக்களுக்கிடையே நிலவும் வரையறையற்ற போட்டித்தன்மையை குறைத்தல் மற்றும் பேரூந்து ஒன்று நாளொன்றுக்கு ஓட்டப்படும் கிலோமீற்றரின் அளவினைப் பேணுவதும் இக்கருத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்குகளுக்கிடையே பிரதானமாகும்.

உள்ளக மாகாணப் பேரூந்துச் சேவைகள் 454 க்கும் 416 க்கும் நேரசூசிகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் ரூபா. 1.80 மில்லியன் திரண்ட செலவில் 2014 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் அமுற்படுத்தப்பட்ட நேரசூசிகளின் எண்ணிக்கை 70 ஆகும்.

- **வீதிப் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுஸீட்டும் நிகழ்ச்சித் திட்டம்.**

அண்மையில் பாடசாலை மாணவர்கள் வீதி விபத்துக்களுக்கு உட்படும் சதவீதம் மிகவும் உயர் தொகையினைப் பெற்றுள்ளதால் பாடசாலை மாணவர்களை வீதிப் பாதுகாப்புத் தொடர்பாக விழிப்புணரவூட்டும் தேவைப்பாட்டினை அடையாளங்கண்டு இலங்கைப் போக்குவரத்துச் சபை இலங்கையின் அனைத்துப் பாடசாலைக்களிலும் ஊர்திகளைக் கட்டுப்படுத்தும் பாடசாலை மாணவர்களுக்காக விசேட வேலைத்திட்டமொன்றை அமுற்படுத்தியுள்ளது. இதில் தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவின் நோக்கமாவது, வாகனங்களைக் கட்டுப்படுத்தி வரும் பிள்ளைகளுக்கு வீதிப் பாதுகாப்புத் தொடர்பாகப் பரந்த அறிவொன்றை வழங்கி அதனைப் பிள்ளைகளுாடாக பாடசாலைகளின் ஏனைய பிள்ளைகளுக்கு அறிவூட்டுவதேயாகும்.

2014 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் வீதிப் பாதுகாப்புத் தொடர்பான 05 வேலைத்திட்டங்கள் பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தப்பட்டுள்ளது. அதன் கீழ் 2550 மாணவர்கள் வீதிப் பாதுகாப்புத் தொடர்பாக விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர். சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கென 08 வேலைப் பட்டறைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் அதன் கீழ் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் சுமார் 750 க்கு அதிகமான பேர்களும் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர். இது தொடர்பாக ஷரூபா. 1.75 மில்லியன் செலவு ஈடு செய்யப்பட்டுள்ளது.

- **GPS தொழில்நுட்பத்தினூடாக உள்ளக மாகாணங்களின் பிரத்தியேகப் பேரூந்துக்களைக் கட்டுப்படுத்துதல்.**

பொதுப் போக்குவரத்துச் சேவையில் எழுந்துள்ள சவால் நிறைந்த பிரச்சினைகளுக்குத் தீர்வினை அடிப்படையாகக் கொண்டு தரமானதும் மற்றும் பாதுகாப்பானதுமான பொதுப் போக்குவரத்துச் சேவையொன்றை ஸ்தாபிப்பதற்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பொதுப் போக்குவரத்துச் சேவைக்குப் பயன்படுத்தும் பொருட்டு ஜீ.பி.எஸ். தொழில்நுட்பம் மற்றும் ஏனைய தொழில்நுட்பங்களை ஒன்றாக இணைத்து உள்ளக மாகாணங்களின் பேரூந்துக்களைக் கட்டுப்படுத்தல் முதற் தடைவையாக தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

அதன் கீழ் 2014 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் உரிய ஜீ.பீ.எஸ். தொழில்நுட்பங்களை விரைவுபடுத்தி உள்ளக மாகாணங்களுக்கான 2095 பேரூந்துக்களுக்கு ஜீ.பீ.எஸ். ஐ ஸ்தாபிப்பதற்கு இயலுமாக இருந்தது.

இற்றை வரை அமுற்படுத்தப்படும் கட்டுப்பாடு முறையினை விரிவுபடுத்தி மக்கள் முறைப்பாட்டு அலகுக்கு தொடர்புபடுத்தப்பட்ட சரியான தொலைபேசி அழைப்புப் பிரிவுடன் ஒன்றிணைந்து அதற்கு கிடைக்கின்ற முறைப்பாடுகளை சரியாகத் தீர்வு காணல், அதற்குத் தேவையான செயற்பாட்டினை எடுப்பதனை நோக்காகக் கொண்டு கட்டுப்பாட்டு அறையினை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2014 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் கட்டுப்பாட்டு அறையினை (Control room) நிர்மாணிப்பதற்கான செலவு ரூபா. 18.19 மில்லியனாவதுடன் ஜீ.பீ.எஸ். அலகினைக் கொள்வனவு செய்வதற்காக ஈடு செய்யப்பட்ட நிதி ஷரூபா. 24.38 மில்லியனாகும்.

- **பேரூந்துக் கட்டண வேறுபாடுகளை அகற்றுதல்**

பஸ் பயணிகள் பிரயாணஞ் செய்யும் தூரத்திற்கு ஒத்ததாக கட்டணமொன்றை அறவிடுவதை நோக்காகக் கொண்டும் மற்றும் கட்டண அதிகரிப்புக்களை சரியான நியமத்தின் கீழ் ஸ்தாபிப்பத்தை நோக்காகக் கொண்டும் பேரூந்துக் கட்டணக் கொள்கையினூடாக கட்டண அதிகரிப்புக்கு சாதாரண தூரத்தினளவு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அப்பரிந்துரைகளை அமுற்படுத்தும் நோக்கில் இக்கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2011 ஆம் ஆண்டின் நிறைவில் அனைத்து உள்ளக மாகாண வீதிகள் மற்றும் மேல், மத்திய, தென் மற்றும் வடமேல் மாகாணங்களுக்கு உரித்தான வீதிகளிற் காணப்படும் வேறுபாடுகளை அகற்றி நியமத்துடன்கூடிய கட்டணங்களின் அட்டவணைகள் அமுற்படுத்தப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டின் நிறைவில், கிழக்கு மாகாணத்திற்கு உரித்தான அனைத்து பேரூந்து ஓட்டப்படும் வீதிகள் அளக்கப்பட்டு 300 வீதிகளுக்கு நியமத்துடன்கூடிய கட்டண அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதே போல 2014 ஆம் ஆண்டின் நிறைவில் சப்பிரகமுவ மாகாணத்தின் 574 வீதிகள் மற்றும் ஊவா மாகாணத்தின் 480 வீதிகள் அளக்கப்பட்டு நியமத்துடன்கூடிய கட்டணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக 2014 ஆம் ஆண்டில் ஷரூபா. 0.95 மில்லியன் செலவு ஈடு செய்யப்பட்டுள்ளது.

- **பேரூந்து ஊழியர்களைப் பதிவு செய்தலும் மற்றும் பயிற்சி வழங்குதலும்**

உள்ளக மாகாணப் பேரூந்துக்களில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சாரதிகள் மற்றும் நடத்துனர்களின் சேவைத் தன்மையினை மேம்படுத்துதல் மற்றும் ஒழுக்காற்று மட்டத்தினை அதிகரிப்பதற்காக விசேடப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் இதன் கீழ் அமுற்படுத்தப்படுகின்றது. இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்யும் ஊழியர்களுக்கு திறன் அடையாள அட்டைகள் மற்றும் சான்றிதழ்களை வழங்குவதும் இக்கருத்திட்டத்தின் கீழே இடம்பெறுகின்றது. அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆந் திகதி வரையில் 872 சாரதிகள் மற்றும் 975 நடத்துனர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டினுள் தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு, இலங்கை மன்றக் கல்லூரியுடன் இணைந்து இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு நடக்கை எடுத்தலினூடாக அப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் தரங்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலாக உள்ளக மாகாண பேரூந்துச் சாரதிகளுக்கு சீருடைகளை வழங்குவதற்கும் இக்கருத்திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2014.12.31 ஆந் திகதி வரையில் ஈடுசெய்யப்பட்ட திரண்ட பணம் 4.95 மில்லியனாகும்.

- **பொதுமக்கள் முறைப்பாடுகள்.**

உள்ளக மாகாணப் பேரூந்துச் சேவையினைப் பாவித்து வரும் பொதுமக்களுக்கு உயர்ந்த தரமான மற்றும் சிறந்த சேவையொன்றை வழங்குவதை நோக்காகக் கொண்டு பொதுமக்கள் முறைப்பாட்டு ஆய்வு அலகு ஸ்தாபிக்கப்பட்டது. இது நாளொன்றின் 24 மணிநேரமும் பயணிகளான மக்கள் தங்களின் முறைப்பாடுகளை முன்வைக்கக்கூடிய முறைமைக்கு ஏற்றவாறு மேம்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசேட இலக்கமொன்று (1955) உடன் தொலபேசி அழைப்பு இலக்கத்தையும், (0112595555) என்ற தொலைநகல் இலக்கம் மற்றும் கடிதங்கள் மூலமும், பயணிகளான மக்களுக்கு ஆணைக்குழுவுக்கு வருகை தந்து மகிந்த பஸ்ரியன் மாவத்தை பேரூந்துத் தரிப்பு நிலைய அலுவலகத்திற்கு முறைப்பாடுகளை வழங்கியும் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும். இவ் அலகினூடாக பொதுமக்களின் முறைப்பாடுகளைப் பெற்று அது தொடர்பான அறிக்கைகளைச் சேகரித்து வைத்து ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதும் மற்றும் அது தொடர்பாகத் தேவையான நடவடிக்கை எடுப்பதும் இடம்பெற்று வருகின்றது. பொதுமக்கள் முறைப்பாட்டு அலகின் அடிப்படை நோக்காவது, பயணிகளான மக்களுக்கு, விளைதிறனான, தரமான மற்றும் பாதுகாப்பான சேவையொன்றை வழங்குவதாகும். 2014 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் பொதுமக்கள் முறைப்பாட்டுப் பிரிவுக்கு கிடைக்கப் பெற்ற மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 5269 ஆகும் என்பதுடன் அதில் 4068 முறைப்பாடுகளுக்குத் தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

- **நடமாடும் பரீட்சிப்பு**

1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம், தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் உள்ளக மாகாணப் பயணிகள் போக்குவரத்துக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள பேரூந்துக்களுக்காக விதிக்கப்பட்டு வரும் நிபந்தனைகள் மீறப்படுவதைப் பரீட்சித்துப் பார்ப்பது, நடமாடும் பரிட்சிப்பு அலகினால் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இதன் கீழ் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் நிபந்தனைகளை மீறி, உள்ளக மாகாண வீதிகளில் சேவையிலீடுபடுத்தப்பட்டு வரும் பேரூந்துக்கள் தொடரபாக புலனாய்வு அலகுக்கு அறிக்கையிடுதல், பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்களின்றி உள்ளக மாகாண வீதிகளில் சேவையிலீடுபடுத்தப்பட்டு வரும் பேரூந்துக்கள் தொடர்பாக நீதிமன்றச் சட்டநடவடிக்கை எடுப்பதற்கு உதவியளித்தல் ஊடாக தரமான பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதற்காக பங்களிப்பினை நல்குதல் நடமாடும் பரிட்சிப்பு அலகினால் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. மேலும் தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவினூடாக அரசின் நிவாரண உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வரும் சிசு சரிய பாடசாலை பேரூந்துச் சேவை மற்றும் நிசி சரிய இரவுப் பேரூந்துச் சேவைகளின் கண்காணிப்புச் செயற்பாடுகளும் இவ் அலகினூடாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

2014 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் 22,008 பேரூந்துக்கள் நடமாடும் பரிட்சிப்பு அலகினால் பரிட்சிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

- **ஆய்வுகள்**

தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவின் கொள்கைகளைத் தயாரிக்கும்போது, திட்டங்களை வரையும்போது மற்றும் சந்தர்ப்பங்களுக்கேற்ப எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களின்போது தேவையான தரவுகளை வழங்குவதை நோக்காகக் கொண்டு ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவின் கடமைப் பொறுப்புக்களினூடாக, பொதுப் போக்குவரத்துச் சேவைகளைப் பாவிக்கும் பயணிகள் மற்றும் பஸ் ஓட்டுநர்கள் பிரதான பிரிவினராவதுடன், இவ்விரு பிரிவினருக்குமென நியாயத்தினை நிலைநாட்டுவதற்குப் பொதுப் போக்குவரத்திற்குக் காணப்படும் கேள்வி மற்றும் நிரம்பலை (வழங்கல்) சிறந்தவாறு முன்னெடுப்பதற்கு தேவையான தரவுகளைத் திட்டமிடுதல் ஆய்வுப் பிரிவின் முன்னுரிமைப் பணியொன்றாக உள்ளது. இது தொடர்பாகப் பிரதானமாக பயணிகள் கேள்வி (கிராக்கி) ஆய்வினை மேற்கொள்ளுதல் இடம்பெற்று வருவதுடன் அங்கு நிலவும் பயணிகள் கேள்வி மற்றும் வழங்கல் (நிரம்பல்) தொடர்பான சரியான தரவுகளை வழங்குவதனூடாக உள்ளக மாகாணப் பேரூந்துக்கள் சேவையிலீடுபடுத்தப்படுதல் தொடர்பான நேரசூசிகளைத் தயாரிப்பதற்கும், திட்டங்களை வடிவமைப்பதற்கும் மற்றும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு எழும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் தேவைப்படும் தகவல்களை வழங்குவது இடம்பெறுகின்றது. 2014 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் இவ் அலகினூடாக 49 ஆய்வுகள் இடம்பெற்றுள்ளதுடன் ஷரூபா. 1.67 மில்லியன் திரண்ட செலவொன்று ஈடு செய்யப்பட்டுள்ளது.

- **பேரூந்துத் தரிப்பிடங்களை நிர்மாணித்தல் மற்றும் புதுப்பித்தல்**

  - **வவுனியா பேரூந்து நிலையத்தினை நிர்மாணித்தல்**

இப்பேரூந்து நிலையத்தினை நிர்மாணிப்பதனூடாக பொதுப் போக்குவரத்துச் சேவையின் தரத்தினை மேம்படுத்துதல் தொடர்பாக தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கையொன்றின் பிரகாரம், விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள மூன்று ஏக்கர் இடத்தில் வவுனியா நகரத்திற்கான பேரூந்து தரிப்பிடத்தினை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

13 தூரப் பயணச் சேவைப் பேரூந்துக்கள், மாகாணங்களினுள் 21 பேரூந்துக்கள் என்றவாறு 34 பேரூந்துக்களை ஒரேநேரத்தில் தரிக்கச் செய்வதற்கான வசதிகளுடன் இலங்கைப் பொறியியலாளர் அமைப்பினால் தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்தின் 800 சதுர அடி மீற்றர் மற்றும் 1100 சதுர அடி மீற்றர் என இரண்டு கட்டிடங்கள் காணப்படுகினறன.

மேலும் இதில் அங்கவீனமுற்றோர் உட்பட அனைத்துப் பயணிகளுக்கும் மலசலகூட வதசிகள், ஒய்வு அறை, உணவு அருந்துவதற்கான சிற்றுண்டிச்சாலை போன்ற அத்தியாவசிய வசதிகள் பல உள்ளன. 2014 ஜனவரி 31 ஆந் திகதி இதன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2014 திசம்பர் 30 ஆந் திகதி வரையில் இதன் நிர்மாணப் பணிகளுள் 80% மான முன்னேற்றமொன்றே எட்டப்பட்டுள்ளதுடன் முதல்

கட்டத்திற்கு 2014.12.31 ஆந் திகதியன்று ஷரூபா.53.97 மில்லியன் திரண்ட செலவு ஈடுசெய்யப்பட்டுள்ளது.

- ➢ **தலவாக்கலைப் பேரூந்துத் தரிப்பிடம்**

பல வருடங்களாகப் பேரூந்துத் தரிப்பிடமொன்று இல்லாமற் மிகவும் கஸ்டத்துடன் வாழ்க்கையினை முன்னெடுத்துச் சென்ற பயணிகளுக்கு நகர சபையின் வேண்டுகோளின் அடிப்படையில் அரச பொறியியலாளர் கூட்டுத்தபானத்தின் ஆலோசகர்கள் மற்றும் நிதி அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவினுடாக தலவாக்கலைப் பேரூந்துத் தரிப்பிடத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இங்கு ஒரே நேரத்தில் 08 பேரூந்துக்களைத் தரிக்கச்செய்வதற்கு இட வசதிகள் உள்ளன என்பதுடன், அங்கவீனமுற்றோர் உட்பட அனைத்துப் பயணிகளுக்கும் மலசலகூட வசதிகள் உள்ளன. 2014.12.31 ஆந் திகதியன்று ஷரூபா. 27.99 மில்லியன் திரண்ட செலவு ஒன்று இதற்கு ஈடுசெய்யப்பட்டுள்ளது.

- ➢ **பேரூந்துத் தரிப்பிடத்தினைப் புதுப்பித்தல்**

பொதுப் பேரூந்துச் சேவைகளை உபயோகித்து வரும் பயணிகளுக்கு விளைதிறனான போக்குவரத்துச் சேவையொன்றை வழங்குதை நோக்காகக் கொண்டு தற்போது பாவிக்கப்பட்டு வரும் பஸ்ரியன் மாவத்தை பேரூந்துத் தரிப்பிடம் மற்றும் நுவரெலியா பேரூந்துத் தரிப்பிடத்தினை புதுப்பிக்கும் நடவடிக்கைகள் தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

- **தேசியப் போக்குவரத்துப் புள்ளிவிபர அறிக்கையினைத் தயாரித்தல்**

இக்கருத்திட்டத்தின் அடிப்படை நோக்காவது, போக்குவரத்துத் தொடர்பான கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் போக்குவரத்துத் தொடர்பான திட்டங்களைத் தயாரிக்கின்ற நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுக்கு போக்குவரத்துத் தொடர்பான பிரச்சினைகளை இனங்காண்பதற்கும் மற்றும் அப்பிரச்சினைகளுக்குப் பொருத்தமான தீர்வுகளை வழங்குவதற்குமான தேவையான புள்ளி விபரங்களைச் சேகரித்து களஞ்சியப்படுத்துதல் மற்றும் பகுப்பாய்வு செய்தல். இக்கருத்திட்டம் 2010 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ் போக்குவரத்து அமைச்சு மற்றும் போக்குவரத்துடன் தொடர்பான நிறுவனங்களின் தேசியப் போக்குவரத்துத் தரவுகளை ஒன்றுதிரட்டி அத்தரவுகளைப் பகுப்பாய்வு செய்து உரிய புள்ளி விபரங்கள் வருடாந்த அறிக்கையாக வெளியிடப்படுகின்றது. 2014 திசம்பர் 31 ஆந் திகதி வரையில், 2014 ஆம் ஆண்டு தேசியப் போக்குவரத்து தரவு அறிக்கை தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ரூபா. 1.62 மில்லியன் திரண்ட செலவு ஈடு செய்யப்பட்டுள்ளது.

- **உள்ளகத் தகவல் தொழில்நுட்ப முறைமையினை மேம்படுத்துதல்.**

உள்ளக மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவைகளுக்கான தகவல்களை பயணிகளான மக்களுக்கு வழங்குவதற்கும் மற்றும் அனுமதிப் பத்திரப் பயனாளிகளை விழிப்புணர்வூட்டுவதற்கும் உரிய பிரிவுகள் அலகினூடாக முன்வைத்து தகவல்களை அரச நியமங்களுக்கு அமைய தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் இணையத் தளத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதனூடாகத் தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் காணப்படும் தகவல்களை நாளதுவரைப்படுத்தல் மற்றும் புதிய தகவல்களை உட்புகுத்துவதை இலகுபடுத்துவதற்கு சுலபமான வழி முறைமைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

2014 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் ஷரூபா. 10.73 மில்லியன் திரண்ட செலவு இதற்கு ஈடு செய்யப்பட்டுள்ளது.

- **பேரூந்துக்களைப் பௌதிக முறைமையில் பரிட்சித்துலும் மற்றும் பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்களை வழங்குதலும்.**

பொதுமக்களுக்குப் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்பட்டு வரும் பிரதானமாக போக்குவரத்து ஊடகமான பேரூந்துக்களின் நிலையினை மேம்படுத்துவதற்கும் மற்றும் பயணம் முடியும் வரையில் பொதுமக்களுக்குப் பாதுகாப்பு மற்றும் இலகுவான போக்குவரத்துச் சேவையொன்றை வழங்குவதை நோக்காகக் கொண்டு பேரூந்துக்களின் இரைச்சல் (Noise level) மற்றும் பிற நிபந்தனைகள் தொடர்பான (ஆசனங்களின் நீளம், அகலம், உயரம் மற்றும் சுற்றளவு தொடர்பானது) நியமங்களைப் பரிட்சித்தல், குறிப்பிட்ட பயிற்சியினைப் பெற்ற மற்றும் ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள சாரதிகள் மற்றும் நடத்துநர்களை சேவையிலீடுபடுத்துதல், முறைசார் நுழைவுச் சீட்டினை வழங்கும் சாத்தியக்கூறு, பிற நிபந்தனைகள் தொடர்பான கற்கை ஆய்வு செய்தல், ஆய்வு செய்தல் மற்றும் அளவைக் கருவிகளை அறிமுகஞ் செய்தல், தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. மக்களின் போக்குவரத்துத் தேவைப்பாடுகளைக் கவனத்திற் கொண்டு பயணிகள் சேவை நுழைவுச் சீட்டுக்களை வழங்குவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. 2014 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் வீதி அனுமதிப் பத்திரங்கள் உரித்தான மொத்த உள்ளக மாகாண பேரூந்துக்களின் எண்ணிக்கை 3221 ஆகும். இதில் 2055 சாதாரண சேவைப் பேரூந்துக்களுக்கும், 444 அரை சொகுசு பேரூந்துக்களுக்கும், 578 சொகுசுப் பேரூந்துக்களுக்கும் மற்றும் 144 குளிஷரூட்டப்பட்ட பேரூந்துக்களுக்குமென வழங்கப்பட்டுள்ளன.

- **ஊழியர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி**

தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு அலுவலகக் குழாமினைப் பயிற்றுவித்தல் மற்றும் மேம்படுத்துவதனூடாக ஊழியர்களின் விளைதிறனை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டு நிறுவனத்துற்குத் தேவையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பாடநெறிகளுக்கு

உள்ளூர் மற்றும் வெளியூர் ரீதியில் உத்தியோகத்தர்களை அனுப்பியுள்ளது. இதன் கீழ் வீதிப் பாதுகாப்பு, மனித வள முகாமைத்துவம், அரச நிறுவனங்களின் நிதிசார் அறிக்கையிடுதல், ஆங்கில மொழி சான்றிதழ்ப் பாடநெறி, போக்குவரத்துத் தொடர்பான பட்டப்பின் படிப்பு, நுகர்வோர்களைக கவனித்தல், அரச கொள்முதல் முறைமை, இலங்கை நிதிசார் அறிக்கையிடுவதில் நியமங்களை அமுற்படுத்துதல், சிக்கனத்துடன் பாதுகாப்பாக வாகனங்களை ஓட்டுதல் தொடர்பான பயிற்சி வேலைத்திட்டம் உரித்தாகும். 2014 ஆம் ஆண்டினுள் உள்ளூர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு 22 உத்தியோகத்தர்களும், வெளியூர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு 12 உத்தியோகத்தர்களும் அனுப்பப்பட்டுள்ளதுடன் 2014 ஆம் ஆண்டில் ரூபா. 4.07 மில்லியன் செலவு இதற்கு ஈடு செய்யப்பட்டுள்ளது.

# 5. . தேசியப் போக்குவரத்து மருத்துவ நிறுவகம்

## 5.1. அறிமுகம்

1997 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தேசியப் போக்குவரத்து மருத்துவ நிறுவகச் சட்டத்தினூடாக நிறுவப்பட்டுள்ளது. நிறுவகத்தின் அடிப்படை நோக்குகளை நிறைவேற்றுவதற்காக பிரதான அலுவலகம் மற்றும் இருபது (25) கிளை அலுவலகங்கள் நாடுபூராவும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இலங்கையினுள் உள்ள கனரக வாகனங்கள் அதேபோல இலகு வாகனங்களின் சாரதிகளின் தேகாரோக்கிய நிலைமை தொடர்பாக உயர் மற்றும் தரமான மருத்துவப் பரிசோதனையொன்றை மேற்கொண்டு, அதன் பிரகாரம் மருத்துவச் சான்றிதழினை வழங்குவதற்கு பிரதான அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களினூடாக தேவையான சேவைகள் திட்டமிடப்பட்டு வருகின்றன.

**தொலைநோக்கு**

''ஒவ்வொரு சக்கரத்திற்குப் பின்னால் தேகாரோக்கியமான சாரதி ஒருவரை அமர்த்துதல்''.

**பணி**

''இலங்கையின் போக்குவரத்து மருத்துவத் துறையில் முனோடியாகத் திகழ்ந்து, உயர் தரமான மருத்துவப் பரிசோதனையினை மேற்கொண்டு விண்ணப்பதாரர்களுக்கு உடல், உளத் தகுதி சான்றிதழ்களை வழங்குதல்''..

## 5.2. நோக்குகள்

அனைத்துச் சாரதிகள் அனுமதிப் பத்திரங்களைக் கோருபவர்களின் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தினைப் பரீட்சித்துப் பார்த்தல்.

i. வழங்கப்பட்டு வருகின்ற மருத்துவச் சான்றிதழின் தரம் மற்றும் பாதுகாப்பு உப முறைமைகளை மேம்படுத்துதல்.

ii. வினைத்திறன்மிக்க மனித வள முகாமைத்துவத்தினூடாக தரமான சேவையினை அடைதல்.

## 5.3. நிறுவனத்தின் பணிகள்

(அ) கனரகமான வாகனங்களை உள்ளடக்கிய அனைத்து வகையான மோட்டார் வாகனங்களினை ஓட்டுகின்ற அல்லது செலுத்துகின்ற சாரதிகளுக்கு மற்றும் ஓட்டுநனர்களுக்கு மருத்துவச் சேவைகளை வழங்குதல்.

(ஆ) கனரக வாகனங்களை உள்ளடக்கிய அனைத்து வகையான மோட்டார் வாகனங்களின் சாரதிகள் மற்றும் செலுத்துனர்களைப் பரீட்சித்து அந்தச் சாரதிகள் மற்றும் செலுத்துனர்களுக்கு உடல் மற்றும் உள தகைமை தொடர்பான சான்றிதழினைப் பெற்றுக் கொடுத்தல்

(இ) கனரக வாகனங்களை உள்ளடக்கிய அனைத்து வகையான வாகனங்களின் சாரதிகள் மற்றும் செலுத்துனர்கள் மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு அவர்களின் தகைமை மற்றும் பொருத்தப்பாடு தொடர்பான பரிந்துரைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

(ஈ) யாரோ ஒருவருக்கோ அல்லது மோட்டார் வாகனங்களுக்கோ இடம்பெற்ற உரிய விபத்துக்கள் தொடர்பாக மருத்துவச் சேவைகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(உ) அனைத்து அறிக்கைகளுக்கும் உரித்தான மோட்டார் வாகனங்கள், உடல் மற்றும் உளப் பொருத்தப்பாடு மற்றும் திறனாளரினால் மாத்திரம் செலுத்தப்பட்டு வருவதாக அல்லது ஓட்டப்பட்டு வருவதாக நிறுவனத்தினால் அல்லது ஏனைய பிரதிநிதியினை விசாரித்து செயற்படுவதற்கு பொறுப்பு நிற்றல்.

(ஊ) நிறுவனத்தின் செயற்பாட்டினை நிறைவேற்றுதல் பணிக்கு பல்வேறு மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களுக்குப் பொருத்தமான வைத்திய உத்தியோகத்தர்களின் சபையொன்றை நியமித்தல்.

(எ) தொழில் தன்மை மற்றும் தொழில் விபத்துக்கள் தொடர்பாக மருத்துவ ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்குதல்.

(ஏ) உரிய அமுற்படுத்தலினை விதிக்கின்றவர்களினால் ஏற்றுக்கொள்ள வேண்டிய அல்லது அமுற்படுத்த வேண்டிய போக்குவரத்து வைத்தியச் செயற்பாடுகளுக்கு நியமங்களைத் தயாரித்தலும் மற்றும் வரையறையினை விதித்தலும்.

## 5.4. தற்போதைய செயற்பாடு

- பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரான தவிசாளர் ஒருவர் மற்றும் பணிப்பாளர் சபையின் வழிகாட்டலின் கீழ் 2014 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் பிரதான பணிகளான சாரதி அனுமதிப் பத்திரங்களை எதிர்பார்ப்பவர்களுக்கு மருத்துவப் பரிசோதனையினை மேற்கொண்டு மருத்துவச் சான்றிதழினை வழங்குதல் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

**2014 திசம்பர் 31 ஆந் திகதி வரை**

| மருத்துவப் பரிசோனை இடம்பெற்ற பகுதி | இடம்பெற்றுள்ள மொத்த மருத்துவப் பரிசோதனைகளின் எண்ணிக்கை | ஆரோக்கிய நிலைமைகளின் அடிப்படையில் மருத்துவப் பரிசோதனையில் சித்தியெய்யாத சாரதிகள் மற்றும் சாரதிகள் அனுமதிப் பத்திரங்களை விண்ணப் பித்துள்ளவர்களின் எண்ணிக்கை | சித்தியெய்யாத சாரதிகள் மற்றும் சாரதிகள் அனுமதிப் பத்திரங்களை விண்ணப் பித்துள்ளவர்களின் சதவீதம் |
|---|---:|---:|---:|
| பிரதான அலுவலகம் | 77379 | 4296 | 5.55% |
| கண்டி | 35404 | 3950 | 11.16% |
| காலி | 22860 | 3217 | 14.07% |
| குருனாகல் | 48802 | 2871 | 5.88% |
| அனுராதபுரம் | 26778 | 3539 | 13.22% |
| கம்பாந்தோட்டை | 22318 | 1279 | 5.73% |
| இரத்தினபுரி | 22076 | 1007 | 4.56% |
| பதுளை | 14945 | 1194 | 7.99% |
| மொனராகலை | 10839 | 838 | 7.73% |
| அம்பாறை | 16262 | 763 | 4.69% |
| மட்டக்களப்பு | 20244 | 991 | 4.90% |
| வெரகர | 62151 | 5724 | 9.21% |
| மாத்தறை | 17764 | 1314 | 7.40% |
| வவுனியா | 7761 | 699 | 9.01% |
| மன்னார் | 3162 | 189 | 5.98% |
| திருகோணமலை | 11111 | 394 | 3.55% |
| கிளிநொச்சி | 5620 | 438 | 7.79% |
| யாழ்ப்பாணம் | 19536 | 1396 | 7.15% |
| கம்பகா | 55932 | 4014 | 7.18% |
| களுத்துறை | 22936 | 825 | 3.60% |
| மாத்தளை | 12504 | 1103 | 8.82% |
| கேகாலை | 8133 | 489 | 6.01% |
| முல்லைத்தீவு | 891 | 120 | 13.47% |
| நுவரெலியா | 1955 | 208 | 10.64% |
| பொலன்னறுவை | 1083 | 64 | 5.91% |
| புத்தளம் | 299 | 15 | 5.02% |
| மொத்தம் | 548745 | 40937 | 7.46% |

க.வே.– மேற்குறிப்பிட்ட மொத்த மருத்துவப் பரிசோதனைகள் தொடர்பாக கனரக வாகனங்கள், இலகுவான வாகனங்கள் மற்றும் வீதி அனுமதிப் பத்திரங்களுக்காக இடம்பெற்றுள்ள மருத்துவப் பரிசோதனைகள் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

- அப்படியாயின் பரிசோதனைகளுக்கு முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் ஒவ்வொரு 100 பேரிலும் 7-8 க்கு இடையிலான எண்ணிக்கையினர் ஆரோக்கிய நிலைமைகளின் அடிப்படையில் வாகனங்களை ஓட்டுவதற்கு பொருத்தமற்றவர்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டுக்கு நிகராக இடம்பெற்ற மருத்துவப் பரிசோதனைகளின் எண்ணிக்கை 47.57மூ சதவீதமாக பின்வருமாறு அதிகரித்துள்ளது.

| வருடம் | 2013.12.31 ஆந் திகதியன்று | 2014.12.31 ஆந் திகதியன்று |
|---|---|---|
| இடம்பெற்ற மருத்துவப் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 371841 | 548745 |
| சித்தியெய்யாத சேவைப் பயனாளிகளின் எண்ணிக்கை | 29593 | 40937 |
| சித்தியெய்யாத சேவைப் பயனாளிகளின் சதவீதம் | 7.96% | 7.46% |

- மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தின் திருத்தத்துடன், கனரக வாகனங்களுக்கான சாரதிகள் அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடிக் காலத்தினை 3 வருடங்களிலிருந்து 4 வருடங்களாக நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. அதே போல கனரக வாகனங்கள் அனுமதிப் பத்திரங்களைப் புதிதாகப் பெற்றுக்கொள்ளுவதற்கு இலகுவான வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்று 2 வருட காலத்தினைப் பூர்த்தி செய்யும் வரையில் விண்ணப்பிக்கலாகாது. அவ்வாறான காரணங்களினால் எமது நிறுவனத்திற்கு 2013 ஆம் ஆண்டில் மருத்துவப் பரிசோதனைகளுக்கு முன்வைக்கப்பட்ட சேவைப்பயனாளிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சியொன்று காணப்பட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது, 2014 ஆம் ஆண்டின் திசம்பர் 31 ஆந் திகதி வரையில் சேவைப்பயனாளிகளின் எண்ணிக்கையில் வளர்ச்சியொன்று காட்டப்பட்டுள்ளது.

இலகுவான வாகனங்களுக்காகப் பாவிக்கப்பட்டுள்ள MT31A என்ற படிவத்திற்குப் பதிலாக எமது நிறுவனத்தில் அச்சிடப்பட்டுள்ள பாதுகாப்பு உப முறைமைகளுடன் இலகு வாகனங்கள் மருத்துவப் படிவத்தினை பாவிப்பதற்கும், கேகாலை, பொலன்னறுவை, புத்தளம், முல்லைத்தீவு, நுவரெலியா, மாத்தளை போன்ற மாவட்டங்கள் தவிர்ந்த, ஏனைய அனைத்து மாவட்டங்களுக்கும் எமது நிறுவனத்தினால் மாத்திரம் மருத்துவ அறிக்கைகளை வழங்குவதற்கும் 2013.03.21 ஆந் திகதியன்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2014.12.31 ஆந் திகதியன்று நாடுபூராவுமுள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்குமாறு கிளை அலுவலகங்களை அமைத்து, கிளை அலுவலகங்களில் மாத்திரமே கனரக வாகனங்கள் மற்றும் இலகு வாகனங்கள் மருத்துவ அறிக்கைகள் வழங்குவது இடம்பெறும். அதன் பிரகாரம் பிரதான அலுவலகம் உட்பட அனைத்து கிளைகளுக்கும் சேவையினைப்

பெற்றுக் கொள்வதற்கு வருகைதரும் தற்காலிக சேவைப் பயனாளிகளின் எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2014 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளது.

| **மாதம்** | **இலகு வாகனங்களுக்கான மருத்துவப் பரிசோனைகளின் எண்ணிக்கை** | |
|---|---|---|
| | **2013** | **2014** |
| ஜனவரி | 2908 | 29746 |
| பெப்ரவரி | 2556 | 27209 |
| மார்ச் | 3089 | 28498 |
| ஏப்ரல் | 13285 | 20465 |
| மே | 19196 | 25568 |
| யூன் | 23304 | 26588 |
| யூலை | 29507 | 31271 |
| ஆகஸ்டு | 31215 | 34150 |
| செப்ரெம்பர் | 35902 | 44442 |
| ஒக்டோபர் | 34189 | 38305 |
| நவம்பர் | 29313 | 37294 |
| திசம்பர் | 31468 | 41274 |
| **மொத்தம்** | **255932** | **384810** |

- தேசியப் போக்குவரத்து வைத்திய நிறுவகத்திற்கு பொலிஸ் திணைக்களம் மற்றும் நீதிமன்றத்தினூடாக முன்வைக்கப்பட்டுள்ள சேவைநாடியினரின் சதவீதத்தின் பிரகாரம் 7% - 9% த்திற்கு இடையிலான சதவீதம் வாகனங்கள் ஓட்டுவதற்கு பொருத்தமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருக்கவில்லை என அடையாளங் காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஆரோக்கிய அடிப்படையில் பொருத்தமற்ற சாரதிகள் வாகனங்களைச் செலுத்தாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு எம்மினால் செயலாற்றப்பட்டு வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கு பங்காற்றப்பட்டுள்ளது.

| **வருடம்** | **2014** | | |
|---|---|---|---|
| **மாதம்** | **பொலிஸ் திணைக்களங்கள் மற்றும் நீதிமன்றங்களினால் மருத்துவப் பரிசோதனைக்கு முன்வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை** | **சித்தியெய்யாதவர்களின் எண்ணிக்கை** | **சித்தியெய்யாத சேவை நாடியினர்களின் சதவீதம்** |
| ஜனவரி | 252 | 17 | 6.75% |
| பெப்ரவரி | 196 | 17 | 8.67% |
| மார்ச் | 214 | 17 | 7.94% |
| ஏப்ரல் | 196 | 10 | 5.10% |
| மே | 209 | 14 | 6.70% |
| யூன் | 245 | 33 | 13.47% |
| யூலை | 271 | 18 | 6.64% |

| | | | |
|---|---|---|---|
| ஆகஸ்டு | 250 | 27 | 10.8% |
| செப்ரெம்பர் | 266 | 29 | 10.90% |
| ஒக்டோபர் | 269 | 21 | 7.81% |
| நவம்பர் | 210 | 17 | 8.10% |
| திசம்பர் | 195 | 17 | 8.72% |
| **மொத்தம்** | 2773 | 237 | 8.54% |

- போலி நபர்கள் மருத்துவப் பரிசோதனைக்குத் தோற்றுவதைத் தவிர்ப்பதை நோக்காகக் கொண்டு மருத்துவ அறிக்கைக்கு புகைப்படமொன்றை உள்ளடக்குதல் தொடர்பாக 2009 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததால் அச்செயற்பாடுகளை முறைமையாக முன்னெடுப்பதற்கு புகைப்பட நிலையமொன்று நிறுவனத்திற்குள்ளே ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் மருத்துவப் பரிசோதனைக்கு போலி நபர்கள் தோற்றுவதை குறைப்பதற்கு மருத்துவ அறிக்கை தொடர்பான புகைப்படத்தினை நிறுவனத்தினுள் நிறுவப்பட்டுள்ள புகைப்பட நிலையத்தில் எடுப்பதைக் கட்டாயமாக்கி கிளை அலுவலகங்களிலும் புகைப்பட நிலையத்தினை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இச் செயற்பாட்டினை மேலும் பாதுகாப்பான முறைமயொன்றாக ஆக்குவதற்கு வெப் கமராக்களுடனான புகைப்படங்களைப் பெற்றுக் கொள்ளும் பிரதான அலுவலகம், வெரகர, கம்பகா, கேகாலை, நுவரெலியா, முல்லைத்தீவு, காலி, திருகோணமலை, மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் புத்தளம் போன்ற அலுவலகங்களினுள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் அக்கிளைகளின் கணனியுடன் தொடர்பான மருத்துவச் சான்றிதழினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய கிளை அலுவலகங்களை இனிவருங்காலத்தில் கணனிமயப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- கேகாலை, நுவரெலியா, முல்லைத்தீவு, பொலன்னறுவை மற்றும் புத்தளம் போன்ற மாவட்டங்களிலுள்ள பயனாளிகளுக்கு விளைதிறனானதும் மற்றும் விரைவானதுமான சேவையொன்றை வழங்குவதற்காக 2014.07.01, 2014.10.17, 2014.10.10, 2014.11.11, 2014.12.15 ஆந் திகதிகளில் முறையே கிளை அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- கம்பகா, பதுளை, குருனாகல், மாத்தறை மற்றும் மட்டக்களப்பு கிளை அலுவலகங்களுக்கு இட வசதிகளுடன் பொருத்தமான கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், களுத்துறை மற்றும் மன்னார் கிளை அலுவலகங்கள், மாவட்டச் செயலகத்தினுள்ள கட்டிடங்களின் புதுப்பித்தற் பணிகள் இடம்பெற்றுள்ளன. மேலும், பிரதான அலுவலகத்தின் கட்டிடப் புதுப்பித்தற் பணி இடம்பெற்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. மேலும் பிரதான அலுவலகத்தின் முதலாவது மாடியின் புதுப்பித்தற் பணிகள் இற்றை வரை இடம்பெற்று வருகின்றன.

- 2014 ‘‘தேசத்திற்கு மகுடம்’’ தேசிய அபிவிருத்திக் கண்காட்சியின்போது குருனாகல் மாவட்டம் பிரதானமாக வடமேல் மாகாணத்தின் மக்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுற்படுத்தப்பட்டமை.

- நிறுவனத்தின் சேவைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கு கொழும்புப் பல்கலைக்கழகத்தினூடாக நடாத்தப்பட்டு வரும் தொழில்வாண்மையான ஆரோக்கியம் தொடர்பான டிப்ளோமாப் பாடநெறியொன்றுக்கு நிறுவனத்தின் மருத்துவ உத்தியோகத்தரினை பங்குபற்றச் செய்வித்தல்.

- SLIDA ஊடாக நடாத்தப்பட்டு வரும் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாப் பாடநெறிக்கு நிறுவனத்தின் மருத்துவ உத்தியோகத்தரினைப் பங்குபற்றச் செய்வித்தல்/ ஒரு நாள் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஊழியர்களை அனுப்புதல்.

- நிறுவன ஊழியர்களினை ஊக்கப்படுத்தி மேம்படுத்துவதற்கு பல்வேறான நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்.

- நிறுவனத்திற் காணப்படும் இட வசதிகளை உச்சப் பயன்பாட்டிற்கு எடுத்து பயனாளிகளுக்கு வாகனத் தரிப்பட வசதிகளைச் செய்து கொடுத்தல், பிரத்தியேக நிறுவனத்தின் வேண்டுகோளின் அடிப்படையில் வாகனங்களை நிறுத்தி வைக்கும் இட வசதிகளைச் செய்து கொடுத்தல் கடந்த வருடத்தில் இடம்பெற்றுள்ளன. அதனூடாக நிறுவனத்தின் மேலதிக வருமானங்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன

- தற்போது கிளை அலுவலகமொன்று அமைக்கப்படாத முல்லைத்தீவு மாவட்டத்தின் அங்கவீனமுற்ற நபர்களுக்கு சாரதிகள் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு மருத்துவச் சான்றிதழ்களை வழங்கும் விசேட மருத்துவக் கூடாரமொன்று நடாத்தப்பட்டுள்ளதுடன், அதில் 108 பயனாளிகளுக்கு மருத்துவச் சான்றிதழ்கள் வழங்குதல் இடம்பெற்றுள்ளது.

- விளைதிறனான சேவையொன்றை வழங்குவதற்கு ஊழியர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு சேவைக்கு வருகை தருதல் மிகவும் முக்கியமானதால் அது தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்வதற்க்கு அனைத்துக் கிளை அலுவலங்களுக்கும் பெருவிரல் அடையாள இயந்திரங்களை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# 6. வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியலாளர் அமைப்பு

## 6.1 அறிமுகம்

இந்நிறுவனத்தின் அடிப்படை நோக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேரூந்துக்களை குறைந்த செலவில், உயர்ந்த தரத்தின் கீழ் பழுதுபார்த்து பொதுமக்கள் சேவைக்கு ஒன்றிணைத்தல்.

**தொலைநோக்கு**

“இலங்கை வாழ் மக்களுக்கு மிகவும் வசதியானதும் மற்றும கவர்ச்சிகரமானதுமான போக்குவரத்துச் சேவையொன்றுக்குப் பங்களிப்பு வழங்குதல்”.

**பணி**

“இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் பிரத்தியேகப் பேரூந்து உரிமையாளர்களின் அகற்றப்பட்ட பிரயாணிகள் பேரூந்துக்களை, குறைந்த கட்டணத்தில் உயர் தரத்தில் பழுதுபார்த்து, சேவைக்கு ஒன்றிணைத்தல்”.

## 6.2 2014 ம் ஆண்டில் நிறுவனம் பெற்றுக்கொண்ட முன்னேற்றம் (பௌதிகம் மற்றும் நிதிசார்)

| மாதம் | பேரூந்துக்களின் எண்ணிக்கை | இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குக் கிடைத்த பணம் ரூ.மி. | உற்பத்திச் செலவு ரூ.மி. | நிறுவனத்திற்கு கிடைத்த இலாபம் ரூ.மி. |
|---|---|---|---|---|
| ஜனவரி | 02 | 432,142 | 348,353 | 83,789 |
| பெப்ரவரி | 04 | 2,673,837 | 2,181,452 | 492,385 |
| மார்ச் | 07 | 3,899,745 | 3,170,990 | 728,755 |
| ஏப்ரல் | 01 | 252,482 | 201,220 | 51,262 |
| மே | 03 | 1,813,555 | 1,460,344 | 353,211 |
| யூன் | 04 | 2,868,353 | 2,343,240 | 525,113 |
| யூலை | 05 | 2,304,514 | 1,861,745 | 442,769 |
| ஆகஸ்டு | 03 | 2,590,487 | 2,112,503 | 477,984 |
| செப்ரெம்பர் | 03 | 2,377,795 | 1,926,400 | 451,395 |
| ஒக்டோபர் | 03 | 2,297,056 | 1,865,925 | 431,131 |
| நவம்பர் | 02 | 1,409,888 | 1,150,130 | 259,758 |
| திசம்பர் | 05 | 1,303,303 | 1,058,137 | 245,166 |
| **மொத்தம்** | **42** | **24,223,162** | **19,680,440** | **4,542,722** |

## 6.3 உட்கட்டமைப்பு வசதிகள்

24 ஏக்கர் பரப்பளவினைக் கொண்ட லக்திவ பொறியியலாளர் அமைப்பு பிரதேசத்தில் பரந்து காணப்படும் தொழிற்சாலைகள் பல. இலங்கை போக்குவரத்துச் சபைக்குக் கடந்த காலங்களில் அனைத்துப் பழுதுபார்த்தல் செயற்பாடுகள் (என்ஜின் தவிர்ந்த) இதனூடாகவே இடம்பெற்றுள்ளன.

## 6.4 விளைதிறன் நிகழ்ச்சித் திட்டங்கள்

கடந்த வருடங்களில் பேரூந்து ஒன்றைப் முழுமையாக பழுதுபார்ப்பதற்கு 2 ½ அல்லது 03 மாதங்கள் எடுத்துள்ளதுடன் அக்காலத்தினைக் குறைத்து 1 ½ மாதங்களில் பணியினை நிறைவு செய்து டிப்போவுக்கு கையளிப்பது தற்போது இடம்பெற்று வருகின்றது. அதே போல அரைவாசி பழுதுபார்த்தலுக்கு வருகின்ற பேரூந்துக்களுக்கு 1 ½ மாதங்கள் எடுக்கும் காலத்தினை தற்போது 30 நாட்களுக்குள் நிறைவு செய்வதற்கும், விபத்துக்கள் ஏற்பட்ட பேரூந்துக்களைப் பழுதுபார்ப்பதற்கு எடுக்கும் காலம் 10-15 நாட்கள், தற்போது அதனை 05 நாட்களுக்குள் பழுதுபார்க்கப்பட்டு டிப்போக்களுக்கு கையளித்தல் சாத்தியமாகியுள்ளது.